# ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்

ஆனி 2014




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குறள்வழி


**ஒருத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

**பொருள் :** பிறர் தமக்கு தீங்கு செய்தவிடத்துப் பொறாது அவரைத் தண்டித்தாரை அறிவுடையார் ஒருபோதும் மனத்தில் நினையார்; அதனைப் பொறுத்தவரை எப்பொழுதும் நினைப்பர். (155)

**ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்.**

**பொருள் :** தவறு செய்தவரைத் தண்டித்தவருக்கு உண்டாவது ஒருநாளை இன்பமேயாகும்; அதனைப் பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரையும் புகழ் உண்டு. (156)

---



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

குறள் வெண்செந்துறை

பிறப்பிறப் பில்லாப் பெருமா னேநீ
மறப்பில் லாமல் மனனஞ்செய் நாளும் 61

சிறப்பு மிதுவே செல்வமு மிதுவே
அறனு மிதுவே அருளு மிதுவே 62

உறவு மிதுவே உண்மையு மிதுவே
திறனு மிதுவே சித்தியு மிதுவே 63

சிந்தி சிந்தி சிந்தி சிவகதி
மந்திர மிதுவே மனத்திடை மதியே 64

யோக நாதன் உரைத்த மொழியே
மோகந் தீர்த்து முத்தி நல்குமே 65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

வெளியீடு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு— 2 சுடர்— 198

2014 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சைவ விரதங்களுள்... | செல்வி செ. ஜடா | 01 -02 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 03 -05 |
| தமிழும் சைவ நெறியும் | நா. நல்லதம்பி | 06 -08 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 09 -10 |
| வழிபாடு வலிமைபெற... | அமரர் சிவ. சண்முகவடிவேல் | 11 -12 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 13 -15 |
| மறந்தும் புறந்தொழாதவர் | முருகவே பரமநாதன் | 16 -19 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 20 -23 |
| தவத்திரு சிவயோக சுவாமிகள் | சு. சிவராசா | 24 -26 |
| சிறுவர் கதைகள் | – | 27 -28 |
| உரை சொல்ல வந்தால்... | கே.எஸ். சிவஞானராஜா | 29 -30 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 31 -34 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்... | யோ. சிவஉமாகரன் | 35 -36 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 37 -39 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 40 -41 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 -43 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 44 -48 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 49 -52 |
| வைகாசிப் பெருவிழா | – | 53 -55 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 56 -60 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 61 -64 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

வைகாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சி. சிவபாலசிங்கம் (இளை. கிராம உத்தியோகத்தர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஆச்சிரமமானது பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். "ஞான பொக்கிஷமாக" விளங்கும் ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்று சபையில் இருந்த முருகன் அடியார்களுக்குக் கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில் ஞானச்சுடர் மலரானது பல்வேறு விதமான ஆக்கங்களைக் கொண்டு வெளிவந்தாலும், அவ் ஆக்கங்கள் மானிடர்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயன்படும் தன்மையைப் பெற்றுள்ளது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

197ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு துரை. கணேசமூர்த்தி (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மல்ரை மதிப்பீடு செய்வதென்பது யாராலும் இயலாத காரியம். அவ்வகையிலும் இச்சுடரை ஒரு வரையறைக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்கின்றேன் என்று கூறினார்.

அடுத்து அவர் பல நூல்கள் தோன்றி இடையிலே மறைந்துவிட்டன. ஆனால் ஞானச்சுடர் மலரானது விடாமுயற்சியினால் தொடர்ந்து பிரகாசித்து தனது ஒளியைப் பரப்பி வருகின்றது என்று கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் ஞானச்சுடர் மலரில் இடம்பெற்றுள்ள "சைவத் திருக்கோயிற் கிரியை நெறி" என்னும் பகுதியானது மாணவர் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு தேவையான விடயங்களைக் கொண்டு உதவியாக அமைந்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் சபையில் இருந்த வாசகர்களில் ஸ்ரீதரன் விமலாதேவி, மாணிக்கம் குட்டித்தம்பி ஆகியோர் "ஞானச்சுடர் பற்றிய கருத்துரைகளைக் கூறி அன்றைய ஞானச்சுடர் மலர் வெளியீட்டை இனிதே நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆன்மீகச் செயற்பாடு தொடர்பாக கருத்துக்களை வெளியிடுகின்றபொழுது பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற சொற்பதங்களை பல சந்தர்ப்பங்களில், பலரும் பயன்படுத்து வதை நாம் காணமுடியும்.

இந்த மூன்று சொற்பதங்களிலும் உள்ள கருத்துக்கள் மிகவும் பயனுடைய கருத்துக்களாக அமைந்துள்ளன. மேலும் இந்த மூன்று சொற்பதங்களிலும் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது எனவும் கூறமுடியாது. அதே வேளை இந்த மூன்று எண்ணக் கருக்களையும் அவரவர் தமது தகுதிக்கேற்ற வகையிலும் வசதிக்கேற்ற வகையிலும் நெகிழ்ச்சிப் போக்குடன் நடைமுறைப்படுத்த முடியும் என்பதையும் நாம் உணரமுடிகிறது.

இறைவனை வணங்கும்பொழுது உணவைத் தவிர்த்து அல்லது சுருக்கி வழிபடு வதுடன், தனியாக இருந்து அமைதியாக அடக்கமாக வழிபடுதல், இறை வழிபாட்டிற்காக காத்திருந்து பொறுமைபேணி இறைவழிபாடு செய்தல் போன்ற விடயங்கள் எல்லாம் பல கோணங்களில் இந்த மூன்று சொற்பதங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் இவ்வாறு செயற்படும்பொழுது இந்த மூன்று சொற்களிலும் உள்ள முதல் எழுத்துக்களை எடுத்துச் சேர்க்கும்போது "பதவி" என்ற உயர்ந்த ஒரு சொல் உருவாகும் தன்மையையும் நாம் காண முடியும்.

இரண்டாவதாகக் கூறப்படும் தனித்திரு என்று குறிப்பிடப்பட்ட விடயம் ஆன்மீக ஈடேற்றத்திற்கு மிகவும் அவசியமானதாகவும் உசிதமானதாகவும் இருப்பதை நாம் காணமுடிகிறது. இறைவனைப் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் வழிபட்டாலும் அமைதியாகவும், அடக்கமாகவும் இருந்து இறைவனை மனதில் உள்வாங்கி அவனுடன் மிக நெருங்கி உள்ளுணர்வுடன் வழிபடுவதற்கான சந்தர்ப்பங்கள் எல்லாம் இந்தத் தனித்திரு என்ற சொற்பதத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரச குடும்பத்தில் பிறந்து ஓர் இந்துவாக வாழ்ந்து உலகியலில் மனிதனுக்கு உண்டாகும் துன்பங்களை உணர்ந்து "தனித்திரு" தியானம் செய்து ஞான ஒளி பெற்றவரே புத்தபெருமான் ஆவார். நாம் ஒவ்வொருவரும் புத்தபெருமானாக மாறா விட்டாலும் தனித்திருந்து ஆன்மீக ஈடேற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதன்மூலம் நிச்சயமாக எம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள முடியும்.

ஆன்ம ஈடேற்றத்திற்கு மட்டுமன்றி அறிவியல் ரீதியாக ஒருவன் உண்மைகளைக் கண்டுபிடித்து இவ்வுலக மக்களை ஈடேற்றுவதற்கும் இந்த "தனித்திரு" என்ற தத்துவமே உதவியாக உள்ளதையும் நாம் காணமுடிகின்றது.

ஆன்மீக ஈடேற்றத்திற்கும், அறிவியல் உண்மைகளைக் கண்டறிவதற்கு மட்டுமன்றி ஒருவன் தன்னை முழுமையாக வழிப்படுத்திச் செல்வதற்கும் இந்தத் "தனித்திரு" என்ற தத்துவம் உதவியாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி முருகனைச் சார்வீர்



ஒரு முருகா சந்நிதியாய் என்றழைத்தால் – அந்த
உருகு குரல் கேட்டோடி வருவான் – மேலும்
வருவினைகள் வாராமல் காப்பான் – அவரை
வாழையடி வாழையாக வளர்ப்பான்.

தஞ்சமென்றால் அஞ்சேலென்று கையால் – உடனே
தானுயர்த்திக் காட்டிடுவான் – முருகன்
பஞ்சம் பசி பட்டினியை ஓட்டி – நிலத்தில்
பண்புடையா ராக்கிக்கை கொடுப்பான்

நஞ்சர்களை வேல்காட்டி நசிப்பான் – அந்த
நாயகனை நண்ணிவிட்டால் – நயப்பான்
மஞ்சுபடி விமான மூலக்கோயில் – சந்நிதி
மயில்வாகனன் சரணபாதம் மறவீர்

ஆறுபடை வீடுடைய அழகன் – உயர்ந்த
அருட்சந்நிதி கோயில் விட்டே அகலான்
கூறுபட சூரனையே பிளந்தான் – வெற்றியால்
கோழிக் கொடி வீசிச் சுற்றித் திரிவான்

மனிதரிலே மாணிக்கமாய்த் திகழும் – அந்த
மனிதருக்கு முருகனருள் கிடைக்கும்
அனுபவத்தில் உலகறிந்த விஷயம் – அதனால்
அன்பரவ ரென்று அருள் சொரிவான்

அதுசெய்வேன் இதுசெய்வே னென்றால் – அந்த
ஆறுமுகன் அருள் தருவான் தானோ? இல்லை
பொருளறிந்து அவன் பாதம் பணிந்தால்– மட்டும்
போற்றும் வகை யாவும் தருவானே

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(அளவெட்டி மத்தி)
**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)
**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(மான்ஸ் பாடசாலைவீதி, உடுவில்)
**த. ஜெகரெத்தினம்**
(விஜிதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
**கந்தையா ஏகாம்பரம்**
(புறூடிலேன், அரியாலை)
**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)
**சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)
**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)
**செல்வி S. ஐடா**
(புலோலி தெற்கு, புலோலி)
**அ. கணேசமூர்த்தி**
(உரும்பராய் வடக்கு, உரும்பராய்)
**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)
**திருமதி செ. தவமணி**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் / செயலாளர்
(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)
மார்க்கண்டு கருணாநிதி
(அச்சுவேலி)
ஆ. ஜெயக்குமாரன்
(கப்பூது, கரவெட்டி)
உரிமையாளர்
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
கு. சோதிராசா
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
ஆனந்தராசா மணிமாறன்
(அராலி மத்தி, அராலி)
உரிமையாளர்
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
T. மணிவண்ணன்
(மிருசுவில்)
மு. வைகுந்தநாதன்
(இலங்கை வங்கி, அச்சுவேலி)
S. விக்னேஸ்வரராசா
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்
(வடமராட்சி கணிதக்கல்வி மூலவள நிலையம், கரணவாய்)
மு. இராசேந்திரா
(தும்பளை, பருத்தித்துறை)
பொ. வெங்கடேஸ்வரன்
(நகரசபை, பருத்தித்துறை)
வ. பாலசிங்கம்
(கிராம சேவையாளர், கரணவாய்)
ம. ஸ்ரீஸ்கந்தராசா
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
உரிமையாளர்
(வேலழகன் இரும்புக்களஞ்சியம, சுன்னாகம்)
இ. சரவணபவன்
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)
சு. சிவனேசன்
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை தங்கராசா
(அன்னை இல்லம், உரும்பராய்)
வே. கணபதிப்பிள்ளை
(குலானை, கரவெட்டி)
திருமதி அகிலன் அருந்ததி
(போதராமடம், துன்னாலை)
சி. ஆனந்தராசா
(ஆலடி, பொலிகண்டி)
சி. சிறீகாந்தன்
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
நடராசா செவ்வேள்
(தணிகை, நெல்லியடி)
க. பூலோகரட்ணம்
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
நா. வடிவேஸ்வரன்
(தும்பளை, பருத்தித்துறை)
சு. கிருபானந்தன்
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
ச.சிவனேசன்
(கேணியடி, திருநெல்வேலி)
திருமதி அ. வினிதா
(நல்லூர், யாழ்ப்பாணம்)
கு. நித்தியானந்தன்
(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)
S. ராகவன்
(பிரம்படி, கொக்குவில்)
உரிமையாளர்
(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)
கோ. யோகலிங்கம்
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
சி. நவரெத்தினம்
(துவாரகை, கரணவாய்)
திருமதி அ. குணநாயகம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
ப. சிவராசா
(தூதாவளை, கரணவாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி தங்கராசா ஈஸ்வரி**
(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)
**உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
**இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**க. ஆனந்தராசா**
(நெல்லியடி, கரவெட்டி)
**இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
**சி. துரைராசா**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**செல்லையா புவனேந்திரம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
**திருமதி ப. பூமாவதி**
((முருகன் கோவில்வீதி, நெல்லியடி)
**வசந்தன் சிவஞானம்**
(அல்வாய் மேற்கு, திக்கம்)
**திருமதி திருத்தேவி ஏகாந்தன்**
(வல்வெட்டித்துறை)
**T. நாகராசா**
(நல்லூர் யாழ்ப்பாணம்)
**கா. தெட்சணாமூர்த்தி**
(பண்டத்தரிப்பு)
**திருமதி ப. இராஜேஸ்வரன்**
(கோண்டாவில்)
**பா. துவாரகன்**
(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)
**ஸ்ரீகாந்தன் நிஷானி**
(உரும்பராய்)
**ம. பேரின்பநாயகி**
(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ விரதங்களுள் நடேசரபிசேகத்தின் சிறப்பு

– செல்வி செ. ஜடா அவர்கள் –

ஒரு வருடத்தில் ஆறு நடேசரபிஷேகங்கள் வருகின்றன. சிவபெருமானுக்கு மிக விசேசமான இத்தினங்கள் சிவன் கோவில்களில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஏனைய ஆலயங்களிலும் சிவன் அதுவும் நடேசர் மூர்த்தம் இருக்குமானால் மிக அவசியமாக நடேசரபிசேகத் தினங்கள் கொண்டாடப்பட வேண்டும். ஓர் ஆலயத்தில் நித்திய, நைமித்தியங்கள் எவ்வளவு அவசியமோ அதேயளவுக்கு நடேசப் பெருமானின் திருவுருவம் உள்ள ஆலயங்களில் வேறெந்த விசேஷங்களையும் விட இந்த ஆறு தினங்களும் மிக விசேஷமாகக் கவனிக்கப்பட வேண்டும்.



நடராஜர் வடிவம் எமது சைவசமயம் ஆன்மீக உலகுக்கு மட்டுமன்றி அறிவியல் உலகுக்கும் வழங்கியிருக்கும் அற்புதமான செல்வம் உலக இயக்கம் நடராஜ தாண்டவத்தில் அடங்கியுள்ளது. சக்தித்தத்துவம், பிரபஞ்ச இயக்கம் யாவற்றையும் நுட்பமாக விளக்குவது இது. இதனால் சைவப்பெருமக்கள் யாவரும் இத்தினங்களில் சிவாலயம் சென்று நடேசரைத் தரிசித்து அருள்பெற வேண்டும்.

சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தசி, மார்கழித் திருவாதிரை, மாசிமாத வளர்பிறைச் சதுர்த்தசி ஆகிய ஆறு தினங்களுமே நடேசரபிசேக தினங்களாகும்.

இவற்றைவிட தைமாதப் பௌர்ணமியும், பூச நட்சத்திரமும் வியாழக்கிழமையும் இணைந்துவருமாயின் இது நடேசருக்கு மிக விசேஷமான நாளாகும். இந்நாள் அபூர்வமாகவே வரும்.

நடேசரபிஷேகங்கள் ஆறில் ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை இரண்டும் விசேஷ விரதநாட்களாக பக்தர்களால் அநுஷ்டிக்கப்படுவது வழக்கம். இவ்விரு நாட்களும் உதயகாலத்துக்குரியது. உதயத்துக்கு முன் இரவுப்பொழுது பிரியுமுன்னர் நடேசப்பெருமானுக்கு பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலியவற்றால் அபிஷேகஞ் செய்து ஸ்நபனாபிஷேகம் அல்லது ருத்ராபிஷேகம் என்பவற்றைச் செய்து நன்கு அலங்கரித்து விசேஷபூஜை வழிபாடுகள் செய்ய வேண்டும். இவ்விரு தினங்களும் உதயத்தில் நடேசர் தரிசனம் சொல்லப்படுகின்றது. ஏனைய நான்கு தினங்களிலும் பகற்காலத்தில் விசேஷ அபிஷேகமும் மாலைக்காலத்தில் தரிசனமும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதயத்தில் தூய்மை இல்லாதவன் இறைவனை அடையமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபத்திற்கு எந்த எண்ணெய் விட்டால் என்ன பலன்

நெய் :- தீபத்துக்கு நெய்விடுவது மிகச் சிறப்பு. சகலவித செல்வச் சுகத்தையும், வீட்டில் நலனையும் தருகின்றது.

நல்லெண்ணெய்:- இவ் எண்ணெய் விட்டு ஏற்றுவதால் எல்லாப் பீடைகளும் விலகி விடுகின்றது.

விளக்கெண்ணெய்:- இதில் தீபம் ஏற்றுவது மிகவும் தவறு. அந்த வீட்டில் நித்தியக் கடன், துக்கம், பயம், சோரநாசம், பீடை இவைகளே சேரும்.

## திரியின் வகைகள்

பஞ்சு:- இதில் திரியிடுவது மிகவும் நல்லது.

தாமரைத் தண்டு:- இதைத் திரித்து ஏற்றுவது முன்வினை பாவத்தைப் போக்கும். செல்வம் நிலைத்து நிற்கும்.

வாழைத் தண்டு:- இதை நூல் பாகமாகப் பக்குவப்படுத்தித் திரியிட குழந்தைச் செல்வம் உண்டாகும். தெய்வக்குற்றம், குடும்பச் சாபம் முதலியவை நீங்கி சாந்தியுண்டாகும்.

புதுமஞ்சள் சேலைத்துண்டு:- இதிலிருந்து திரிசெய்து ஏற்றினால் அம்மன் அருள் கிட்டி வியாதிகள் குணமாகும்.

சிவப்பு கலர் சேலைத்துண்டு:- திருமணதடை, மலட்டுத்தன்மை, வினைகள், தோஷங்கள் விலகும்.

புது வெள்ளை வஸ்திரம்:- இதில் பன்னீர் விட்டு காயவைத்து திரியாகப் பயன்படுத்த உத்தம பலனைக் காணலாம்.

## இறைவனுக்கு உகந்த எண்ணெய்

மகாலட்சுமி - நெய்
நாராயணன் - நல்லெண்ணெய்
கணபதி - தேங்காய் எண்ணெய்
ருத்ராதி தேவதை- இலுப்பை எண்ணெய்
தேவி - ஐந்து வகை எண்ணெய்களும்.
(நெய், விளக்கெண்ணெய், வேப்பம் எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய்)
சர்வ தேவதைகள்- நல்லெண்ணெய்

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யூலை | 02 | ஆனி | 18 | புதன் | மாணிக்கவாசகர் |
| ஆகஸ்ட் | 02 | ஆடி | 17 | சனி | மயில்வாகனம் சுவாமி |
| ஆகஸ்ட் | 03 | ஆடி | 18 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ்ட் | 09 | ஆடி | 24 | சனி | பட்டினத்தடிகள் |
| ஆகஸ்ட் | 23 | ஆவணி | 07 | சனி | நீலகண்ட சிவாச்சாரியார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி



**பதவுரை:-**

கற்றா மனம் கதறியும் பதறியும்- கன்றை ஈன்று அண்ணிய பசுவின் மனம்போலக் கதறுதலைச் செய்தும் பதறுதலைச் செய்தும், மற்று ஓர் தெய்வம் கனவிலும் நிலையாது- வேறு ஒரு தெய்வத்தைக் கனவினிடத்தும் நினையாமல், அருபரத்து ஒருவன்- அதற்கரிய மேன்மையையுடைய முதல்வனாகிய நீ, குருபரன் ஆகி அவனியில் வந்து அருளிய பெருமை- ஆசாரிய முதல்வனாய் இந்நிலவுலகத்தில் வலியவந்து எழுந்தருளியிருந்து அருளால் உபதேசஞ் செய்த பெருந்தன்மையை, சிறுமை என்று இகழாது- எளிதிற் கிடைத்தமை பற்றி அதனைப் புல்லிதாக நினைத்து இகழ்ந்து விடாமே, திரு அடி இணையை- அவ்வாசாரிய முதல்வனது திருவடிகள் இரண்டினையும், பிறிவினை அறியா நிழலது போல முன்பின் ஆகி- உருவினைவிட்டு நீங்கும் செயலினை அறியாத நிழலைப் போலப் பிரியாது முன்னாகவோ, பின்னாகவோ தொடர்ந்து, முனியாது அத்திசை- இடையூறுகளாற் பிரிய நேரினும் அதனால் வெறுப்புற்று மனத் தளர்ச்சி அடையாமல் குருபரன் எழுந்தருளிய திசையை நோக்கி வணங்கி, என்பு நைந்து உருகி நெக்கு நெக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கி- வன்பொருளாகிய எலும்பும் தன் வன்மை கெட்டு உருகி மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து இரங்கி, அன்பு எனும் ஆறு கரையது புரள- அன்பு என்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஆறு பெருகி இரு கரையும் புரண்டு ஓட, நல் புலன் ஒன்றி- நல்ல புலன்கள் ஐந்தும் ஒன்றுபட்டு, நாத என்று அரற்றி- தலைவனே என்று வாய்விட்டுப் புலம்பி, உரை தடுமாறி- சொற்கள் குளறி, உரோமம் சிலிர்ப்ப- மயிர்சிலிர்ப்ப, கரமலர் மொட்டித்து- மலர் போன்ற கரங்களைக் குவித்து, இருதயம் மலர- அகத்தாமரையாகிய நெஞ்சம் விரிய, கண் களிகூர- கண்கள் களிப்பு மிக, நுண் துளி அரும்ப- அதனால் கண்களில் நுண்ணிய ஆனந்த நீர்த்துளிகள் தோன்ற, சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்- கெடாத அன்பினை நாடோறும் தழைப்பிப்பவர்களை, தாயே ஆகி வளர்த்தனை போற்றி- தாயைப்போல நின்று வளர்த்தோயோ நினக்கு வணக்கம்.

கன்று+ஆ= கன்றா. "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற்றாகும்" (தொல் எழுத்து 414) என்பது விதி. கற்றா மனமெனக் கதறியும் பதறியும் என்றது ஈன்றண்ணிய பசு தன் கன்றைப் பிரிந்த விடத்துக் கதறியழைத்தலும், அதற்கு ஏதும் இடையூறு எய்தியதோவென மனம் பதறுதலும் போல மெய்யன்பர்களும் இறைவன் காட்சி நீங்கியபோது கதறியழைத்தலும் அக்காட்சி எய்துமோவென மனம் பதறுதலும் உடையவராவர் என்பதாம். "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (புலம்பல் 3) என அடிகள் மற்றோரிடத்துக் கூறுதலும் காண்க.

மெய்யன்பர்களின் மனம் முழுமுதற் கடவுளையன்றிப் பிறிதொரு தெய்வத்தையும் நினையாமையின் "மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது" என்றார்.

"உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே"
சத 2

"மற்றறியேன் பிறதெய்வம்" ஏசறவு 5

என அடிகள் பிறாண்டு கூறுதலும் காண்க. நினையாது (74) அன்பினைத் தழைப்பவர் (86) என முடிக்க. இனி நினையாது (74) அருளிய பெருமை (76) எனக் கூட்டிப் பிறதெய்வங்களை நினையாதபடி அருள்செய்த பெருமை எனவும் உரைக்கலாம். "யான் பிற வேத்தாவகை யிரங்கித், தன் கடைக்கண் வைத்த தண்டில்லைச் சங்கரன்" (298) எனத் திருக்கோவையாரினும் வருதல் காண்க. ஓர் தெய்வம்- ஒரு தெய்வம் என்பதன் விகாரம். கனவிலும் என்பதில் உம்மை எச்சவும்மை.

திருமால் பிரமன் முதலிய தேவர்களாலும் அறிதற்கருமையும் உயர்வுமுடைய ஒப்பற்ற முதல்வனாதலின் இறைவனை "அருபரத்தொருவன்" என்றார். "அரியயன் இந்திரன் வானோர்க்கரிய சிவன்", (தெள் 7) என வருதலுங் காண்க. பரம்- உயர்வு. குருபரனாகிய அவனியில் வந்து அருளிய பெருமை என மாற்றிக் கூட்டுக- சிவபெருமான் குருபரனாகிய அவனியில் எழுந்தருளி அருளியமை "இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும், அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி எந்தரமும் ஆட்கொண்டு" (அம்மானை 3) "அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின் மேல்.. வந்தாண்ட திறம்" (தெள் 6) "அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்" (திருப்பள்ளி 10) எனப் பிறாண்டும் வருவனவற்றாலுமறிக.

"கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபர னென்றோர் திருப்பெயர் கொண்டு" கந்தர் கலி 24

என வருதலுங் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனி- நிலம்; வடசொல். குரு- ஆசாரியன்.

பிறிவினை- பிறிதாகும் செயல். உருவினை விட்டு நிழல் நீங்குதல் எக்காலத்துமின்மையின் "பிறிவினை யறியா நிழல்" என்றார். "நிழல் தன்னை வீயா தடியுறைந் தற்று" (குறள் 208) என்றார் திருவள்ளுவரும். முனியாது- வெறாது.


அத்திசை என்றது குருபரனாகி எழுந்தருளியிருந்த திசையை, அத்திசை நோக்கி வணங்கி எனச் சில சொற்கள் வருவித்து முடிக்க. இடைவிடாது நிகழும் தன்மையும் மிகுதியும் பற்றி "அன்பெனும் ஆறு" என்றார். புலன் என்றது பொறிவழிச் செல்லும் ஐந்தறிவுகளை. அவை ஒன்றுபடுதலின் ஒன்றி" என்றார். "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்குஞ் சிந்தையே யாக" எனப் பெரியபுராணத்து (தடுத்தாட் 106) வருதலுங் காண்க. அரற்றுதல்- வாய்விட்டுப் புலம்புதல், மொட்டித்தல்- குவித்தல், தாமரை மலர் கூம்புதல்போல இரு கரங்களையும் சேரக் குவித்தலின் "கரமலர் மொட்டித்து" என்றார்.

கண்களி கூர நுண்டுளி யரும்ப என்றது குருபரனை மனத்தின்கண் நினைத்தலாற் கண்கள் களிப்பு மிகவும் நுண்ணிய ஆனந்தத் துளிகள் தோன்றவும் என்றவாறு. தழைப்பவர்- பிறவினை விகுதிதொக்க வினையாலணையும் பெயர். அதன் ஈற்றிலுள்ள ஐயுருபு தொக்கது.

எனைப்பல சூழவும் (58) என்னும் வினைக்குச் செயப்படு பொருளாகத் தழைப்பவர் (86) என்பதைக் குறிப்பதாகிய தம்மை என்னும் சொல் முன்னர் விரித்துக் கூறப்பட்டது. எனவே பெருமாயை தன்னைச் சூழவும் (58) சலியா மெழுகதுபோல (60) உளம் உருகி அழுது கம்பித்து (61) ஆடியும் அலறியும் பாடியும் பரவியும் (62) கொண்டது விடாதெனும் (64) படியேயாகி (64) பசுமரத்தாணி அறைந்தாற்போலக் (65) கசிவது பெருகி மறுகி (66) அகங்குழைந்து அனுகுலமாய் மெய்விதிர்த்துச் (68) சகம் தம்மைச் சிரிப்ப (68) நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை (69) கோணுதலின்றிப் பூணதுவாகக் கொண்டு (70) சதுர் இழந்து அறிமால் கொண்டு சாருங் (71) கதி அதிசயமாகக் (72) கதறியும் பதறியும் (73) கனவிலும் நினையாது (74) ஒருவன் அவனியில் வந்து அருளிய பெருமையைச் (76) சிறுமை என்று இகழாது (77) முனியாது (79) உருகி நெக்கு ஏங்கி (80) ஒன்றி அரற்றி (82) உரைதடுமாறி (83) மொட்டித்து மலரக் (84) கூர அரும்பத் (85) தழைப்பவர் (86) என வினை முடிபு செய்க.

தழைப்பவர் தாயேயாகி என இயல்பாகப் புணர்ந்தமை, "உயிரீறாகிய வுயர்திணைப் பெயரும், புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும், எல்லா வழியும் இயல்பென மொழிப" (தொல் எழுத்து 153) என்னும் விதி பற்றியதாகும்.

(தொடரும்...



விவேகானந்தரின் பொன் மொழிகள் :-

"தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்."

- சுவாமி விவேகானந்தர்

**உண்மையான கல்வி பெறுவது இரண்டாவது பிறப்பைப் போன்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் சைவ நெறியும்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

நமது நினைவிற்கெட்டாத காலத்திலிருந்தே "தெய்வம் உண்டு" என்னும் கொள்கை பாரதநாட்டில் நிலவி வந்துள்ளது. இவ்வுலகத்தைப் படைப்பது தெய்வம்; காப்பது தெய்வம்; அழிப்பதும் தெய்வம் என்னும் எண்ணம் பாரதத்தின் பழம்பெரும் சமயங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவானது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற உண்மை எல்லாச் சமயமும் ஏற்றுக்கொண்ட முடிபாகும்.

ஆயினும் அந்த "அவனுக்கு" ஆயிரத்துக்கு மேற்பட்ட பெயர்களையும் அவரவர் கற்பித்துக் கொண்டார்கள்.

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்கிறார் மணிவாசகர்.

சிவம் என்ற திருநாமத்துக்கு "மங்கலம்" என்ற பொருள் உண்டு. எல்லா மங்கலமும் தரும் பேரின்ப நிலையே "சிவகதி". அதுவே முத்திநிலை. சிவகதியைத் தருவது சிவநெறி; சைவநெறி. அதுவே சைவசமயம்.

சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கை, திருமூலர் சொல்லும் "அன்பே சிவம்" என்பதாம்.

"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவம் ஆவது யாரும் அறிகிலார்;
அன்பே சிவம் ஆவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவம் ஆய் அமர்ந்திருந்தாரே. (திருமூலர் திருமந்திரம்)

அன்பின் வழியது உயிர்நிலை; அன்பு வடிவான சிவனை அடைவதற்கு அன்பு தேவை; அன்பு சிவனருளைப் பெற்றுத் தரும்.

அருள் என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு (குறள் 757)

அறத்தைத் தூண்டுவதும் மறத்தை அழிப்பதும் அன்புதான்

அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (குறள் 76)

பெற்றோரிடம் தொடங்கிய அன்பு, உற்றார் உறவினர் உலகத்தார் என விரிந்து பரவுகிறது. முதிர்ந்த அன்பு காதலாகிறது. மக்களிடத்தில் மாத்திரமன்றி நாயன்மாரிடத்திலும் கடவுளிடத்தில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் அன்புநிலை இருப்பதை நாம் அறிவோம்; அது "அவன்" அருளைப் பெறுவதற்கு ஆகும்.

உயர்திணை உயிர்களிடத்திலன்றி அஃறிணை உயிர்களிடத்திலும் நாம் என்றும் அன்பு வைப்பது "கருணை" ஆகும். கருணை இருந்தால் உயிர்க்கொலை நிகழாது. உயிர்க்கொலையும் புலால் உண்ணலும் செய்யாத மக்களை உலகம் போற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (குறள் 260)

இனி, சைவநெறியில் சமயப் பொறுமை இருப்பது ஒரு சிறப்பு ஆகும். சிலப்பதிகாரம் தந்த இளங்கோ அடிகள் ஒரு சமணத் துறவி ஆவர். ஆயின் அவரது தம்பி சேரன் செங்குட்டுவன் சிறந்த சைவனாய் வாழ்ந்தவன். ஒரே குடும்பத்தில் இருவேறு சமயம் காண்கிறோம்.

ஆயின் சைவநெறியின் சமயப் பொறுமையைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தும் பிற மதத்தவரிடம் ஏமாந்து போகாமல் இருப்பது நல்லது.

மேலும் இறைவன் ஐந்தொழில் புரிந்து உயிர்களை ஈடேற்றுகிறான். இந்த ஐந்தொழிலையும் குறிக்கும் அபிநய தோற்றமாக நடராஜ வடிவம் தில்லைச் சிற்றம்பலத்தில் இருக்கின்றது. இந்த நடனத்தைக் கண்டு பாடுகின்றார் திருநாவுக்கரசர்:

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமுண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

என்பது அவரது தேவாரம். உலகம் போற்றும் இந்த நடனக் கோலத்தை, கலை வடிவத்தை நமக்குத் தந்தது சைவ சித்தாந்தம்.

இனி, சைவ சமயத்தில் ஆலய வழிபாடு முதன்மையாகக் கூறப்பெற்றிருக்கிறது. "ஆலயந்தானும் அரன் எனப்படுமே" என்பது சிவஞானபோதம். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்ற பழமொழிகள் தமிழில் இருக்கின்றன. மக்கள் நிலையாக குடிகளாக வாழத்தொடங்கிய காலத்தில், இயற்கையின் பயங்காரணமாக, சூரியனையும் பிற தெய்வங்களையும் கோயில்கள் அமைத்து வழிபடத் தொடங்கினர். அப்போது கோயில்களில் செய்யும் பல தொழில்களுக்காகவும் கலை வேலைப்பாடுகளுக்காகவும் கோயிலை மையமாகக் கொண்டு குடியேறினார்கள். பல விதமான வேலைகளைச் செய்து கலைகள் வளரும் இடமாக சிவனடியார் கூடும் இடமாகக் கோயில்கள் விளங்கின; இன்றும் விளங்குகின்றன.

திருவாரூரில் சிவனடியார் திருக்கூட்டம் (சங்கம்) சமய வளர்ச்சிக்காக அமைந்தது. இதனைத் தரிசித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அத்திருக் கூட்டத்தாருக்குத்தான் "அடியேன்" என்று திருத்தொண்டத்தொகை பாடினார். அதன்வழியில் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் தமிழில் பிறந்தது.

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார் (பெரியபுராணம்)

என்கிறார் சேக்கிழார்.

பிற உயிர்களிடத்தில் மக்கள் அன்பு செலுத்தும் மனப்பாங்கு வளர, சிவபெருமான், புலித்தோலை அரையிற் கட்டி, யானை உரிபோர்த்து, மிளிர்கொன்றையணிந்து விளங்க வைக்கிறார்கள் நாயன்மார்கள். பிள்ளையாருக்கு எலி வாகனம், முருகனுக்கு மயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனம், ஈசனுக்கு எருதுவாகனம் என கற்பித்துள்ளார்கள். விஷ்ணுவுக்கு துளசியும் விநாயகருக்கு அறுகம்புல்லும் அர்ச்சனைகளாக்கினர்.

இவ்வாறு தமிழால் சைவமும் சைவத்தால் தமிழும் வளர்ச்சியுற்று வந்திருப்பதை ஓரளவு விளக்கினோம். விரிந்து பரந்து கிடக்கும் மேலும் பல உண்மைகளைத் தேடிக் கற்போமாக.

## கூனியின் வஞ்சம்

இராமாயணம் காவியமாக விளங்குவதற்கு தலையாய காரணமாக அமைந்தவள் கூனி. அவள் இல்லாவிடில் இராமன் காடேக வேண்டியதில்லை. இராவண வதமும் நடைபெற்றிருக்காது.

கூனியின் இயற்பெயர் மந்தரையாவாள். அவளின் தோற்றம் கொண்டே அவள் கூனி எனப் பெயர் பெற்றாள். கைகேயி தசரதனை திருமணம் செய்து அயோத்திக்கு வந்தபோது கைகேயியின் தோழியாக கூனியும் கூடவே வந்தாள். மந்தரையானவள் அவளது முற்பிறவியில் தேவலோக அப்சரசியாக பிறந்திருந்தாள். அவள் மிகவும் அழகு வாய்ந்தவள். தனது அழகினால் ஆணவம் கொண்ட அவள் பல முனிவர்களினதும், ரிஷிகளினதும் தவத்தைக் கலைத்து வந்தாள் கோபமுற்ற முனிவர் ஒருவர் நீ பூலோகத்தில் அழகில்லாத பெண்ணாக கூன் உருவுடன் பிறப்பாய் என்று சபித்தார். அவளே கூனியாவாள்.

இராவண வதம் முடிவுற்ற பின்னர் இராமன் பட்டாபிஷேகம் நிறைவு பெற்ற பின்னர் சீதையானவள் கூனியைத் தனது அந்தப்புரத்தில் தனியே சந்தித்தாள். அவளிடம் சீதை இராமபிரானை நீ ஏன் அவ்வாறு பழிவாங்கினாய்? உனக்கு இம்மனக்கசப்பு ஏன் ஏற்பட்டது என்று வினவினார். அதற்கு அவள் தன்னை தாங்களும் இராமபிரானும் மன்னிக்க வேண்டும் என்று கூறி தனது வஞ்சத்திற்கான காரணத்தைக் கூறினாள்.

இராமபிரான் சிறுவனாக இருந்த காலத்தில் தனது கூன் முதுகின்மீது வில் கொண்டு கல் அடித்தான். என் கூனைப் பழிக்கும் வகையில் கல் எறிந்தமையால் அதனை மனதில் வைத்தே பழிவாங்கினேன் என்று விடை பகர்ந்தாள். ஒரு சிறு எறும்பிற்குக்கூட தீங்கு விளைவிக்க எண்ணாத இராமபிரான் ஏன் இவ்வாறான ஒரு காரியத்தைச் செய்தார் என மனஞ் சஞ்சலப்பட்டாள் சீதை. சீதை இராமபிரானிடத்தே சென்று கூனி கூறிய விடயத்தைக் கூறி அதற்கான சம்பவத்தை விளங்க வைக்குமாறு கேட்டாள். அதற்கு இராமபிரான், தான் சிறுவனாக இருந்து குருவிடம் வில்வித்தை பயின்றுகொண்டிருந்த காலத்தில் எனது குரு ஒரு வளைந்த வாளை தனது வில்லில் அம்பு பூட்டி அதனை எய்து வாளை நிமிர்த்தினார். அதனைப் பார்த்த நான் கூனியின் கூன் முதுகை நிமிர்த்தி அவளுக்கு அழகையும், சுகத்தையும் அளிப்பதற்காக வில்லில் கல் வைத்து அவள் முதுகின்மீது எய்தேன். ஆனால் கூன் நிமிரவில்லை. இதனைக் கூனி தவறாக நினைத்து விட்டாள். நான் அவளிடம் இச்செய்தி பற்றி மன்னிப்புக் கோருவேன் என்று கூறினார். சஞ்சலம் தீர்ந்த சீதை கூனியை அழைத்து நடந்ததைக் கூறினாள். இராமபிரான் கூனியிடம் மன்னிப்புக் கோரினார். நடந்த சம்பவத்தைக் கேட்ட கூனி தனது பிழையை உணர்ந்து இராமபிரானிடமும் சீதையிடமும் மன்னிப்புக் கோரினார்.

இராமபிரான் கூனியைத் தேற்றி நீ செய்த செயலால் பல நன்மைகள் நடைபெற்றிருக்கின்றன. அதனால் நீ புரிந்த செயல் நன்றே. நான் உன்னை மன்னிக்க வேண்டியதில்லை என்று தனது பெருங்கருணையைக் காட்டினார். *-எஸ்.எஸ். றஜீந்திரன்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



40. வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந்தவனே.

பொது நூலக சேவைகள் யாழ்ப்பாணம்.

## பதவுரை

சுனையோடு- சுனையினிடத்தும், அருவித் துறையோடு- மலையருவிகள் விழும் துறைகளிடத்தும், பசும் தினையோடு- பசிய தினைப்புனத்திடத்தும், இதணோடு- பரணிடத்தும், திரிந்தவனே- வள்ளிநாயகிக்கு அருள் செய்யும் பொருட்டுத் திரிந்த பெருமானே! வினைஓட விடும்- ஆன்மாக்களின் நல்வினை, தீவினை என்ற இரு வினைகளும் ஓடும்படி செய்கின்ற, கதிர்வேல் மறவேன்- ஞானஒளி வீசுகின்ற வேலாயுதத்தை ஒரு போதும் மறக்க மாட்டேன். மனையோடு தியங்கி மயங்கிடவோ- மனைவியுடன் கூடி வாழும் இல்வாழ்வில் கலக்கங்கொண்டு மயக்கங் கொள்ளலாமோ?

## பொழிப்புரை

சுனைகளிடத்திலும், அருவித் துறைகளிடத்திலும் பசிய தினைப்புனத்திலும், பரணிடத்திலும் வள்ளிக்கு அருள் செய்யும் பொருட்டுத் திரிந்த பரமனே! ஆன்மாக்களின் வினைகள் விலகுமாறு செய்யும் வேலாயுதத்தை ஒருபோதும் அடியேன் மறக்கமாட்டேன். அப்படியுள்ளவனாகிய நான் மனைவியுடன் கூடிய இல்வாழ்வில் கலங்கி மயங்கலாமோ? மயங்கக்கூடாது. அம் மயக்கத்தைப் போக்கி அருள் செய்வீராக.

## விரிவுரை

**வினை யோட விடும் கதிர்வேல் மறவேன்:-**

ஆன்மாக்களின் வினைகள் மாயும் பொருட்டு வேல் அருள் புரியும். "வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை" என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீசர்கடமோடெனது தீவினை யெலாமடிய
நீடுதனி வேல்விடு மடங்கல் வேலா"
-(ஆறுமுகம்) திருப்புகழ்.

வேலை வழிபடுவதையே வேலையாகவுடைய அடியார்க்கு வினைகள் தொடரமாட்டா.

"மூலமாம் வினையறுத் தவர்கள் வெம்பகையினை
முடித்து... வேலே" -வேல் விருத்தம் (5)

**மனையோடு தியங்கி மயங்கிடவோ:-**

ஞானவேலை மறவாதவனாகிய அடியேன் இல்வாழ்வில் தியங்கி மயங்கலாமோ? மயங்குதல் கூடாது. அம் மயக்கத்தைப் போக்கியருள் என்று வேலவனை வேண்டுகின்றார் அடிகளார்.

**சுனையோ டருவித்துறையோடு பசுந்தினையோ டிதணோடு திரிந்தவனே:-**

சுனையின் கண்ணும், துறையின் கண்ணும், தினைப்புனத்தின் கண்ணும், பரணின் கண்ணும் திரிந்தார் முருகர். ஏன்? தன்னை நோக்கித் தவஞ்செய்த வள்ளியை ஆட்கொள்ளும் பொருட்டு. வள்ளி பிராட்டி செய்த பயிர் ஞானப்பயிர். சுனையென்பது ஆனந்தவூற்று. அருவித்துறை- சத்திநிபாதம். இதண்- உறுதிப்பாடு. வள்ளி- பக்குவப்பட்ட ஆன்மா.

ஓடு என்ற உருபுகள் நான்கும் உருபு மயக்கம் இவை ஏழாம் வேற்றுமைப் பொருளில் (இடத்து) வந்தன.

மறவேன்- வினையாலணையும் பெயர். மனை, தினை என்பவை இடவாகு பெயர்கள்.

**கருத்துரை**

முருகா! வேலாயுதத்தை மறவேன். மனை வாழ்வின் மயக்கத்தை மாற்றியருள்.

(தொடரும்...

## பல்லாண்டு வாழ்த்தப் பணி

**வாயினில் சுடுசொல் வாராதிருக்க - உந்தன்
கோயிலை நாடிக் கும்பிட்டேன் - நாயிலும்
மிகக் கேவலமாக எனைக் கீழ்மைப்படுத்தினாலும் - எந்தன்
நாஅடக்க நல் அருளை நல்கு.**

**பச்சை மயிலேறிவரும் பாலகனே கந்தா
இச்சையுடன் நான்உன்னிடம் ஒன்றை இரந்து கேட்பேன்
இச்சகத்தில் நாஸ்திகர்என்னை நசுக்கினும் - எந்தன்
நாவில் ஆத்திரம் தன்னை அடக்கு.**

**சந்நிதியில் உறையும் நாயகனே கந்தா
எல்லோரும் எனை எடுத்தெறிந்து இல்லாத வசைச்சொல்
பழிச்சொல் சொல்லினும் கொல்லினும் சோர்வுபடேன்
எந்நாவரல் அவர்களைப் பல்லாண்டு வாழ்த்தப்பணி.**

*-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு வலிமை பெற வாய்த்த அவயவங்கள்

– அமரர் சிவ. சண்முகவடிவேல் அவர்கள் –

கல்லிற்குக் கண் இல்லை. காது இல்லை. மூக்கு இல்லை. வாயில்லை. நெஞ்சில்லை. கால் இல்லை. கை இல்லை.

மரத்திற்குக் கொம்பர் உண்டு. கிளை உண்டு. இலை உண்டு. பூவுண்டு. காய் உண்டு. கனி உண்டு.

மனிதனுக்கு வாயுண்டு. வயிறு உண்டு. கால் உண்டு. கை உண்டு. மனம் உண்டு. அறிவு உண்டு. அவயவங்கள் அனைத்தையும் அன்றாடம் தன்னுடைய அலுவல்கள் அனைத்தையும் ஆக்கிக்கொள்வதோடு அமைந்து விடலாகாது. அதற்கு அப்பாலும் ஒன்று உண்டு. அதனை மறந்து அருமந்த அவயவங்களுக்கு உயிருட்டிப் பிறவிப் பயனை பெறாது சேதனத்தை அசேதனமாக்கி விடுவதைக் குறிக்கோளாகக் கொண்டு விடலாகாது.

பிறந்தோம். உண்டோம். உறங்கினோம். மாண்டோம் என்று மதிமயங்கிவிடலாகாது. அது அறிவில்லாத அசேதங்களுக்குக் கடவுள் வகுத்தது. மனிதன் அறிவுடையவன். பகுத்து உணரும் பண்புள்ளவன். தன்னுயிர்போல மன்னுயிரையும் தலையளி செய்யும் ஆற்றல் அமைந்தவன்.

மனிதனுடைய உள்ளங் காலிலிருந்து உச்சந்தலைவரையில் எண்ணிப் பாருங்கள். எத்தனை எத்தனை அவயவங்கள் அமைந்துள்ளன. ஒன்றிற்கு மற்றொன்று மாறுபட்ட செயல் ஆற்ற வல்லன. அத்தனை அங்கங்களையும் அறிவினால் ஆட்டிப் படைத்துத் தன்னாணைப்படி நடத்தவல்ல நல்லறிவு மனிதனுக்கு உண்டு. மாறாக அவை விரும்பியபடி நடக்க பின்னடக்கும் புத்தியின்மையினால் புணர்க்கப்பட்டவன் மனிதன். "புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறி ஒழுகச் செய்யும் வல்லபம் அந்த ஆன்மாக்களுக்கு அருளும் பரம்பொருளின் கருணையை நாம் உதாசீனம் செய்துவிடலாகாது. அந்த வல்லப ஆற்றலை சமயாசாரியர்கள் தரும் திருமுறைப் பாடல்களுக்கு இடையிடையே தேனமுதம் போலத் தித்திக்கக் காட்டியுள்ளமையை நமது மறப்பெனும் சக்தி மறைத்துவிட நாம் நல்லது இழந்தவர்களாக நடுவீதியில் நலிந்து விடலாமா?

திருநாவுக்கரசு நாயனார் பன்னிரண்டு திருப்பாடல்களைக் கொண்ட ஒரு திருப்பதிகத் தைத் "திரு அங்கமாலை" என்ற பெயரில் நமக்கு அருளிச் செய்துள்ளார்.

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையிலாக நமக்கு அமைந்துள்ள அவயவங் களை விளிக்கின்றார். பணிவோடு அந்த அவயவங்களுக்குரிய பணிவிடையைப் பகருகின்றார். அப்படி வேறு எவரால் அப்பணிகளைப் பணிக்க இயலும்?

தலையே! கண்காள்! செவிகாள்! மூக்கே! வாயே! நெஞ்சே! கைகாள்! கால்களால் பயன் என்? ஆக்கையாற் பயன் என்? உதறார் ஆருளரோ? இறுமாந்திருப்பன் கொல்லோ? தேடிக் கண்டு கொண்டேன்!

அந்த அந்த அவயவங்களுக்கு உரிய பணியைத் தானே பண்போடு பழகக் கேட்கிறார். கண் செயல் காண்பது. காதின் செயல் கேட்பது. கண்ணைக் கேளு என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதைக் காண் என்று சொல்லுகின்றார்? இல்லை கண்ணால் நன்றாகக் காணு என்கின்றார். காதினால் இறைவன் புகழை நன்றாகக் கேளு என்கிறார். இவ்வாறு இல்லாத அவயவங்களுக்குப் பணி இடவில்லை. இருக்கின்ற அவயவங்களை அல்லாத பணியை அல்ல உள்ள பணியையே உரைக்கின்றார்? அதில் குற்றம் என்ன? குணத்தையே குறிக்கின்றார்.

திருநாவுக்கரசு நாயனார் ஞானாசாரியார் ஆதலினாலே நல்லறிவை நமக்கு நயமாக நாட்டுகின்றார். பிறிதோர் திருத்தாண்டகத்தில் பேசுகின்றார்:- தந்தை மைந்தனுக்கு நற்புத்தி புகட்டுமாறு போல் அல்லவா நெஞ்சைக் கூப்பிட்டுச் சொல்லுகின்றார்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

இறைவனே நமக்கு வாயும் நெஞ்சும் வாழ்த்தவும் சிந்திக்கவும் தந்தார் என்கிறார் நாயனார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை
என்றும்
நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே-
என்றும் உண்மையை உணர்த்துவார்.

பிறவியின் கட்டறுக்க நானும் உன்னைப் பரவுகின்றேன் திருவாதவூரடிகளார்.

"..... பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் நாளும் தீவினையில் கிடந்து நலியாமல் நல்வாழ்வினைப் பெறுவதற்கு ஒரு நலமான அருண்மொழி தருகின்றார்.

"பூ நாளும் தலை சுமப்பப் புகழ்நாமம்
செவி கேட்ப நா நாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே....."

இவ்வாறு ஞானாசாரியர்கள் எல்லாம் நல்வாழ்வு காட்ட நாம் தீவினையிலே கிடந்து உழலுகின்றோம் என்றால் அது யார் குற்றம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 13. வள்ளல் ரமணன்

சந்தோஷமோடு உபதேச சாரத்தைக் கொண்டு, சத்நிஷ்டனாக கும்மி கொட்டு, கொட்டு துக்கத்தின் நிவிருத்தியும், சதா ஆனந்தமும் இதில் கிடைக்கும். அதற்கு சந்தேகமேயில்லை. அன்பர்காள், நம்மை கஷ்டங்கள் சற்றும் தீண்டாதிருக்கவும், ஆனந்தம் கிடைப்பதற்காகவும் எல்லோரும் சேர்ந்து உபதேச சாரத்தைக் கொண்டு கும்மியடியுங்கள்.



திருமதி ரோடா மெக்கிவர், ஆச்சரியமான மனதை உருக்கும் சம்பவமொன்றைத் தெரிவித்தார். பகவானின் அந்திம நாட்களில் அனேக பக்தர்கள் அதன் தேகநிலை குறித்த கவலையினாலும், எப்படியாவது பகவானைக் குணப் படுத்த வேண்டும் என்ற தீவிர ஆசையினாலும், அவரவருக்குத் தெரிந்த மருந்துகளை அனுப்பினார்கள். எல்லா மருந்துகளும் தனித்தனியாக ஒரு அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந் தது. ஒருநாள் பகவான் ஒரு பெரிய ஜாடி கொண்டுவரச் சொல்லி, எல்லா மருந்துகளையும் அதில் கொட்டி, நன்றாகக் கலக்கச் சொன்னது. தினசரி காலையிலும், மாலையிலும் தான் அந்த அபூர்வக் கலவையை உட்கொள்ளப் போவதாக தெரிவித்தும் விட்டது. அலோபதி, ஹோமியோபதி, உலகிலுள்ள எல்லா "பதி"களின் மருந்துகளும், சித்த ஆயுர்வேத முதலிய கஷாயம், பஸ்மம், நெய் முதலியனவும் விதவித மான உருவம், நிறம், மணம், குணம் எல்லாம் அவற்றில் இருந்தன. சில விஷத்தன்மை கொண்டவைகூட! அதனால் நாங்கள் எல்லோரும் மிகவும் பயந்துவிட்டோம். "என்னிடமுள்ள அன்பினால், நான் எப்படியும் குணமடைய வேண்டும் என்பதற்காக அவர்கள் எவ்வளவோ ஆதரவுடன் சிரமப்பட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் திருப்திக்காக எல்லாவற்றையும் சாப்பிடத்தான் வேண்டும்" என்றது பகவான் திடமாக. அந்தக் கொலைக் கஷாயத்தைப் பார்த்த டாக்டரோ ஒரேயடியாகப் பயந்துவிட்டார். பகவானோ தன் உறுதியைக் கைவிடுவதாக இல்லை. கடைசியில் நாங்கள் எல்லோரும் பகவானின் நெறிமுறையைப் பின்பற்றி எங்களுக்கும் ஆளுக்கொரு ஸ்பூன் மருந்து வேண்டும் என்று உரிமைக்குரல் எழுப்பவே, பகவான் இரங்கித் தான் அதைச் சாப்பிடும் எண்ணத்தைக் கைவிட வேண்டிவந்தது.

* * * * *

பின்வரும் சுவாரசியமான விஷயம் குஞ்சு ஸ்வாமியிடமிருந்து சேகரித்தது.

"பகவானுடைய ஜீவித காலத்தில், பல தீவிர சாதகர்கள் பலாக்கொத்தில் இருந்தார்கள். நரசிம்ம சுவாமி, பால் பிரண்டன், யோகி ராமையா, முருகனார், முனகல வெங்கட்ராமையா, கோஹன் முதலியோர். ஒரு சமயம் அங்கு ஒரு ஜெர்மனியரும் கடும் சாதனை புரிந்து கொண்டிருந்தார். பகலில் பலாக்கொத்துக்கு வரும் பகவானை சந்திப்பதில் அவருக்கு ஆர்வம் அதிகம். தீவிர சாதனையில் இருக்கும் சிலருக்குத் தேவையான சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளும், குறிப்புகளும் பழைய ஹாலுக்கு வெளியே பகவான் தருவதுண்டு என்பது அனேகருக்குத் தெரியாது. அந்த ஜெர்மனியரும் தீவிர சாதகருள் ஒருவர்.

பகவான் அவருக்கு உதவி செய்திருக்கிறது என்பது குஞ்சு சுவாமிக்கு எப்படித் தெரிய வந்ததென்றால் ஒருநாள் தபால்காரர் ஜெர்மனியருடைய இரும்புக் கதவருகில் வெகுநேரம் தட்டிக்கொண்டேயிருந்தார். அந்தச் சத்தம் அக்கம்பக்கத்திலிருந்த குடிசை களிலிருந்து எங்களெல்லோரையும் எழுப்பிவிட்டது. நாங்களும் தபால்காரருடன் சேர்ந்து கதவை பலமாகத் தட்டினோம். இதற்குள் பகலில் பகவான் பலாக்கொத்திற்கு நடந்து வரும் நேரம் வந்துவிட்டது. நாங்கள் எல்லோரும் ஜெர்மனியரின் குடிலுக்கு வெளியில் ஏன் கூடியிருக்கிறோமென்று பகவான் கேட்டது. 'அவருக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. இத்தனை சத்தமும் அவரை எழுப்பவில்லை' என்றோம். பகவான் நகைத்துக் கொண்டே, 'நான்தான் குற்றவாளி. குடிசையைச் சுற்றி இருக்கும் சத்தம் அவருக்குத் தொந்தரவாக இருப்பதாகவும், அதனால் நீண்ட நேரம் ஆழ்ந்த தியானம் செய்ய முடிவதில்லை என்றும் புகார் செய்தார். நான் கொஞ்சம் தேன் மெழுகையும், பஞ்சையும் சேர்த்து காதில் அடைத்துக் கொண்டால் எதுவுமே கேட்காது. இவை நல்ல சப்தத் தடைகள் என்று சொன்னேன்' என்றது. இதற்குள் பகவானைச் சந்திக்கும் நேரம் வந்துவிடவே, ஜெர்மனியர் காது அடைப்பானை எடுத்துவிட்டு வெளியே வந்தார். பகவானையும், கூட்டமாக எங்களையும் கண்டு வியப்படைந்தார்.

அன்றிலிருந்து நாங்களும் தேன்மெழுகு பஞ்சு, காதடைப்பான்கள் செய்து வைத்துக் கொண்டோம். தீவிர சாதகர்களுக்கு இது நிசப்தமாக, சந்தடியின்றி தியானம் செய்ய உதவும் வரப்பிரசாதம்.

* * * * *

ஒரு சமயம் ஆந்திரத்திலிருந்து ஒரு அம்மா வந்திருந்தார். அவர் அடிக்கடி ஆச்ரமத்திற்கு வந்து சில நாட்கள் தங்கிப்போவது வழக்கம். இவர் நன்றாக வீணை வாசிப்பதோடு சங்கீதத்திலும் நல்ல பயிற்சி பெற்றுள்ளார். ஆச்ரமத்தில் பகவானுக்கெதிரில் உட்கார்ந்து பாடுவார். சில நேரங்களில் வீணையும் வாசிப்பார்.

இவருக்கு மனதில் ஒரு சந்தேகம் இருந்து வந்தது. பகவானைக் கேட்பதற்குச் சமயம் நேரவில்லை. ஒருநாள் காலையில் பகவான் ஹாலில் கூட்டம் அதிகமாயில்லை. இந்தம்மா பகவான் அருகில் சென்று, நமஸ்காரம் செய்துவிட்டு, "பகவானே! சங்கீதத் தினாலேயே முத்தியடைய முடியுமா? அல்லது வேறு சாதனையும் செய்ய வேண்டுமா?" என்று பணிவுடன் கேட்டார்.

பகவான் பதிலேதும் சொல்லாமல் மௌனமாகயிருந்தார். பகவானின் மௌனத்தைத் தெரிந்துகொள்ள முடியாமல் பேச்சை அவரே தொடர்ந்தார். "தியாகராஜாதிகளைப் போன்ற மகான்கள் சங்கீதத்தைப் பாடித்தானே முத்தியடைந்தார்கள்?" என்று கேட்டார்.

அதற்குப் பகவான், "தியாகராஜாதிகளைப் போன்ற மகான்கள் பாடிப்பெறவில்லை. பெற்றதைப் பாடினார்கள். அதனால்த்தான் அந்தச் சங்கீதம் ஜீவனுள்ளதாக நிலைத்து நிற்கிறது. அதைத்தான் நாதோபாசனை என்று சொல்லப்படுகிறது" என்று புன்முறுவலுக் கிடையே கூறியருளினார். எவ்வளவு பெரிய உண்மையை பகவான் எவ்வளவு எளிதாகக் கூறி, அந்தச் சிக்கலை தீர்த்து விட்டாரென்று நினைத்துப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு தெளிவாக வேறு யாரால் சொல்ல முடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானின் பதிலைக்கேட்ட அந்தம்மா ஆச்சரியத்துடன் சொன்னார்: "இத்தனை நாள் என்னை நானே ஏமாற்றிக் கொண்டு விட்டேன். பகவானின் அற்புதமான அருள் வாக்கினால் என் சந்தேகம் தீர்ந்தது. என் மனச்சுமையும் குறைந்தது" என்று கூறி பகவானைப் பணிந்து விடைபெற்றாள்.

* * * * *

ரங்கஸ்வாமி ஐயங்காரை கும்பகோணம் ஐயங்கார் என்றுதான் அனைவரும் அழைப்பார்கள். அவர் பகவானுடைய அத்தியந்த பக்தர். பகவானுடைய பெயரை ரமணா என்று உச்சரிக்கக்கூட மாட்டார், அவ்வளவு பயபக்தி. ரமண ஸ்துதி பஞ்சகம் போன்ற ஸ்துதிப் பாடல்களைப் பாடும்போது கூட ரமணா என்று வரும் இடங்களில் மௌனமாக இருந்துவிட்டு, தொடர்பவற்றை எல்லாம் சரளமாக உற்சாகமான பக்தியுடன் பாடுவார். உதாரணமாக அக்ஷரமணமாலையில் 90வது பாட்டில் "ரமணனென்றுரைத்தேன்" என்ற இடத்தில் ......... என்றுரைத்தேன் என்றுதான் ஆரம்பிப்பார். அவருடைய பக்தியை அறிந்தவரெல்லோரும் அவர்முன் ரமணா என்று உச்சரிப்பதைக் கூடிய மட்டும் தவிர்ப்பார்கள். ஒரு சமயம் பிரபல மனிதரொருவர் சந்நிதியில் ரமணா என்றழைத்துவிட்டார். மின்னலென விழுந்தது கன்னத்தில் ஓர் அறை! ஐயங்காருடைய கை அவரையறியாமலே தானாகச் செயல்பட்டது போலும்! அந்த மனிதரோ ஐயங்கார் சுவாமியின் பக்தியைப் புரிந்துகொண்டு மெச்சினார்.

(தொடரும்...

## மன அமைதியுடன் வாழ்வதற்கு வழி

மனம் அமைதியாக இருந்தால் வாழ்க்கையும் அமைதியாக இருக்கும். மன அமைதியின்றி இருந்தால் வாழ்க்கை கறைபடிந்த வாழ்க்கையாக களங்கமுள்ளதாக இருக்கும்.

மனதில் அமைதி நிலவுவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அது அறநெறிகளையும் இறைவனையும் மனம் பற்றியிருக்க வேண்டும் என்பதுதான். இளமைப் பருவத்திலிருந்து தெய்வ பக்தி, நற்பண்புகள், தொண்டு, தியாகம் போன்றவற்றை கடைப்பிடித்து வாழ்பவர்கள் வாழ்நாள் முழுவதும் மன அமைதியுடன் வாழ்கின்றார்கள்.

ஆடம்பரப் பொருட்களை நாம் அத்தியாவசியமானவை என்று கருதுவதால் தேவைகள் அதிகரிக்கின்றன. அதனால் நாம் மன அமைதியையும் இழந்து, அவதிப்படும் நிலை வருகிறது. விருப்பங்கள் குறையுமளவிற்கு நாம் நிம்மதியுடன் வாழலாம். எதன்மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் மன அமைதி நம்மைவிட்டுப் போய்விடும். தீயவை நம் நெஞ்சின் நிம்மதியைப் பறித்து விடுகின்றன. பிறரிடம் அன்பு செலுத்துவது நமக்கு மன அமைதியைத் தரும்.

நமது உள்ளம் உயர உயர மனஅமைதியும் பெருகும். இறைவனின் திருவடிகளில் மட்டுமே உண்மையான அமைதியும் ஆறுதலும் அடைக்கலமும் கிடைக்கும். "நான்", எனது என்பதை நம்மிடமிருந்து நீங்கினால் நமது ஆழ்மனதில் ஆத்மாவில் அமைதி நிலவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்தும் புறந்தொழாதவர்

– திரு முருகவேே பரமநாதன் அவர்கள் –

தொழுதல்- வணங்குதல், கும்பிடுதல், பிரார்த்தனை செய்தல் எனப் பொருள் கொள்ளலாம். புறந்தொழுதல் என்றால் என்ன? பிறரை வணங்குதல்- தொழுதல் எனவரும். யுத்தத்திலே தோல்வி கண்டோர் வெற்றித்தலைமையை அடிபணிவர். கும்பிட்டு வாழ்கிலேன் எனவும் சில கவிவரிகள் உண்டு. ஆனாற் சமய நோக்கில் புறச்சமயத் தெய்வத்தை வணங்கேனெனப் பொருள் விரிக்கலாம். புறசமயமென்பதைப் பரசமயமென்றும் குறிப்பிடுவர். திருஞானசம்பந்தரைத் தமிழாகரன், தமிழ்வேள்- பரசமயகோளரியென்று சமய இலக்கியங்கள் இனம் காட்டும். நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும் இப்படிப் பாடினர். "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க- பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள் நீங்க" என்ற தொடர்கள் சைவ சமயமல்லாத சமணம் பௌத்தம் என்பன போன்றவற்றைப் பரசமயமென்பர். இங்கேபுறந்தொழார் என்பது சைவசமயத்துத் தெய்வமாம் சிவனையன்றி வேறெத் தெய்வத்தையும் நாம் தொழோம் எனப்பொருள் பட நால்வரும் வாழ்ந்தனர். சைவ நாயன்மார்கள் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள். சைவத்தை அழிக்கும் புற தெய்வ வணக்கத்தை அவர்கள் நிராகரித்தனர். சைவப்பெருங்குடி மக்களும் நால்வர் வழியிலே சென்றனர். இக்கோட்பாடு ஒவ்வொரு சைவ சமயிக்கும் முக்கியமாம். இப்பார்வையிலே வைணவசமயிகள் இரு கோட்பாடுகளை கொள்கையை முன்னெடுத்துச் செல்வர்கள். ஒன்று, திருமாலையன்றி வேறெத் தெய்வத்தையும் வழிபடாதவர்கள். வழிபடாதவர்கள் என்பதை இன்னும் திருத்தமாகச் சொன்னால், மறந்தும் பிற தெய்வங்களை வழிபடார் என்பது ஒரு உறுதியான இலட்சியம் - குறிக்கோள். இரண்டாவது வைணவர்க்கோர் இடுக்கண் ஏற்பட்டால் விரைந்து உதவி செய்வார். இத்தெய்வ வணக்க உறுதிப்பாட்டைத் திருமழிசை பிரான் பாசுரமாகவே வடித்துள்ளார்.

"திறம்பேன் மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர், - இறைஞ்சியும்
சாதுவராயப் போதுமின்கள், என்றான், நமனுந்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு"

நான்முகன் திரு அந்தாதி 68.

ஸ்ரீமந் நாராயணன் பக்தியில் ஆழங்காற்பட்ட பக்தர்களின் பக்கமாக (இயம) தூதரைப் போக வேண்டா மெனக்கட்டளை இடுகிறான் காலன். நாரணன் பக்தர்களுக்கு இயமபயமில்லை என்பது வெளிச்சம். இப்பாசுரத்தில் "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்ற தொடர் "அட்சர லட்சம் பெறும்" இன்றைய சைவசமயிகள் மனதிற்பதிக்க வேண்டிய தொடர்.

எப்படி வைணவர்கள் புறந்தொழாரோ (மறந்தும்) நால்வரும் அந்த மார்க்கத்தையே கைக்கொண்டனர். அவர்கள் சிவனையன்றி வேறெத்தெய்வத்தையும் வணங்கவில்லை என்பதை அவர்களின் தெய்வப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இந்நால்வரில் மணிமொழியார் மறந்தும் புறந்தொழாதவராய் வாழ்ந்தார் என்பதை ஆவணப்படுத்துவதே இவ்வாக்கத்தின் நோக்கு. இதை ஆராயமுன் இந்த மறந்தும் என்ற பதப்பொருள் பற்றி மேலோட்டமாய்ப் பார்ப்போம்.

நினைவும் மறதியும் மனத்தின் தொழிற்பாடு. சிலருக்கு நினைவாற்றல்கூட, சிலருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவு. இன்னுஞ் சிலருக்கு இன்னும் குறைவு. இந்த ஞாபகம் பல இடங்களிலே பயன்தரும். சில இடங்களிலே மறதி பாரிய விளைவை, நன்மையைத் தரும்.

வாலியும் உடற்பிறப்பான சுக்கிரீவனும் பகையுணர்வோடு வாழ்ந்தனர். வாலி ராம பாணத்தால் உயிர்விடும் வேளையிற் தம் உட்பகையை மறந்து தன் மனைவியையும், மகனையும் சுக்கிரீவனிடம் அடைக்கலமாக ஒப்படைக்கிறான். இஃது மறப்பின் பயன். எம் பெற்றோர் இறந்தபோது கத்தினோம். கதறினோம். பல தசாப்தங்கள் கழிந்தபின் பழைய நிலையிற் கண்ணீரும் கம்பலையுமாய் வாழ்கிறோமா? இஃது பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயினவே. இந்தப் பட்டறிவைப் (படிப்பினையை) திருக்குறள் கொண்டு ஆய்வோம்.

மனிதநேயம், மனிதவிழுமியம் பேணல் ஒரு மனிதப் பண்பும், நாகரிகமுமாம். இந்த மறதியின் திறம் வள்ளுவர் வாக்கிற் பிரகாசிக்கிறது.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு.
குறட்பா 204.

பிறருக்குத் தீங்கு தரும் செயல்களை மறந்தும் நினைக்கக்கூடாது. நினைத்தால், அப்படி நினைத்தவனுக்குக் கேடு செய்ய அறம் நினைக்கும். மறந்தும் பிறர்க்குத் தீமை செய்யாதே. செய்தாயோ தர்மம் நின்னைத் தண்டிக்கும். இதற்கு மறுபுறமாகப் பிறர் செய்த நன்றியை நாம் மறக்கலாமோ. கனவிற்கூட மறக்கக்கூடாது.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"
குறட்பா 108

பிறர் செய்த நன்மையை மறப்பது தர்மம் ஆகாது. அவர் செய்த தீமையை உடனே மறந்துவிடல் உயர்வானது. இந்தச் சிந்தனையைக் காதலன் (தலைவன்) காதலி (தலைவி) மட்டத்தில் இனிச் சிந்திப்போம்.

தலைவன் வெளிநாடு சென்று திரும்பினான். அப்போ மனைவியோடு கலகலப்பாய்ப் பேசிக்கொண்டு இருக்கையிற் தலைவன் சொன்னான்," உன்னை நான் நினைந்தேன்" என்று அவள் பதில் இறுத்தாள். "மறந்ததால்த்தானே நினைந்தீர்கள்" என்று. அப்போ அவன் இப்பிறவியில் உன்னை நான் மறப்பேனோ என்றவனை அவள் கேட்டாள். "அப்படியானால் மறுபிறப்பில்" என்று வினாவினாள். இந்த மறப்பும் நினைப்பும் பழவடியார் களை வேறு விதமாக வாட்டியது. அப்பர் பாடினார்.

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங் கிலுமுன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
4:1.6

அப்பருடைய பார்வை ஒருவிதம். காரைக்காலம்மையார் என்ன கேட்டார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும் மறவாமை வேண்டும்.
பெரியபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகரோ சதா நின்நினைப்பு வேண்டும் எனச் சிவபெருமானிடம் இரக்கிறார்.

இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்

கோயில் திருப்பதிகம் 7

நின் தன்மை- உன்னுடைய இயல்பை, நினைப்பு
அறநினைந்தேன்- தற் போதத்தினாலே எதிரிட்டு
நினையாமல், அருள்வழியிலே நின்று
நினைந்தேன்

உரை ஜி. வரதராஜன்

சிவனை மறவாத சிந்தையரான மாணிக்கவாசக சுவாமிகள் பிறமதத் தெய்வங்களை உள்ளேன்- வணங்கேன் எனப்பல திருவாசகங்களிலே மிக இறுக்கமாகக் குறிப்பிடுகின்றார்.

உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லாது
எங்கள் உத்தமனே

திருச்சதகம் 2

எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோ என்
சித்தத்தா றுய்ந்தவாறு அன்றே உன்
திறம் நினைந்தே

திருஏசறவு 4 - ஏசறவு - கவலை

கற்றறியேன் கலைஞானம் கசிந் துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிற தெய்வம்

மேலது 5

மற்றுமோர் தெய்வம் தன்னை உண்டென
நினைத்தெம் பெம்மான்
கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சுமாறே

அச்சப்பத்து 1

வெருவரேன் வேட்கை வந்தால் வினைக்கடல்
கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா எம்பிரான்
தம்பிரானாம்
திருவுரு அன்றி மற்றோர் தேவரெத்
தேவரென்ன
அருவராதவ ரைக்கண்டால் அம்மநாம்
அஞ்சுமாறே.

அச்சப்பத்து 2

தொறுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ கண்டாய்

அருட்பத்து 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்பு சிவம் வேண்டார்
தமை நாளுந் தீண்டேன்

உயிருண்ணிப் பத்து 7


அத்தேவர் தேவர் தேவர் அவர் தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப்புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லா தென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ

திருக்கோத்தும்பி 6

திருவாசகத்தின் அகச்சான்றுகளின்படி, திருவாதவூரடிகள் மறந்தும் பிறதெய்வம் தொழாத மகான் என்பதை நிறுவியுள்ளோம். சிவனை வணங்கும் தகைசான்ற அருளாளர் என்பதைச் சைவசமயிகளாகிய நாம் உணர்ந்து சைவம் பேணுவோம்.

மார்கழி மகத்தான காலம் சைவசமயிகட்கும் வைணவர்க்கும். அண்மைக் காலங்களிலே மார்கழித் திங்களில் புத்தாண்டு கொண்டாடும் விப்ரரும் சைவர்களும் என்ன சமயத்தினர். டிசம்பர் 25, 31, ஜனவரி 1 இல் ஆலயங்களில் பிறமத வணக்கம் செய்து கொண்டாடும் இவர்கள் தீண்டத்தகாதவரே. இவற்றுக்கு முன்னுரிமை வழங்கும் புலம்பெயர் தேயங்களில் வாழும் சைவக்காரர் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பும் கொண்டாடுவர். வேறு எச்சமயத்தவரும் சைவப்பெரு நாட்களைக் கொண்டாடுவதே இல்லை. ஆயிரக்கணக்கான சிவாலயங்களை அழித்தற்குச் செய்யும் கைம்மாறுபோலும் சிந்திப்போம் செயற்படுவோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# வட இந்திய தல யாத்திரை

– செ. மோகனதாஸ் சுவாமிகள் –

இறைவழிபாடு என்பது மனம் ஒன்றிய நிலையில் இருந்து வழிபாடு செய்வதேயாகும். அந்த நிலையை எமது குழுவினர் அனைவரும் பஞ்சலிங்க தரிசனத்தில் அடையக்கூடியதாக இருந்தது. எம்மோடு வந்தவர்கள் எப்படியாயினும் பஞ்சலிங்க தரிசனம் செய்யவேண்டும் என்ற ஆவலிலும், இடமும் புதியது என்ற வகையிலும் கடற்கரையில் உள்ள கொட்டில்களால் அமைந்த கடைகளில் பூசைக்குரிய பொருட்கள் இருந்தும் வாங்கவேண்டும் என்ற சிந்தனை அற்று வெறும்கையுடனே வந்திருந்தார்கள். என்றாலும் பூசகர்கள் மனம் கோணாமல் தங்கள் வசதிக்கேற்ற வகையில் பூசை வழிபாடுகளை இயற்றினார்கள். இவர்கள் பூசை வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில் நானும், கார்த்திகேஜனும், ஆறுமுகானந்தனும், முத்துக்குமாரும் பின்புறம் அலை அடித்துக்கொண்ட கடலில் நீராடி பின் வந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டோம்.

நேரமோ ஒரு மணியை அண்மித்து விட்டது. எம் குழுவினர் எல்லோரும் கரையை நாடி போவதற்குரிய வகையில் செயற்பட்டார்கள். எங்களுக்கு முன்பே பூசை வழிபாடு ஆற்றுபவர்கள் தங்களுக்குரிய பொருட்களை எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக அவசர அவசரமாக கடற்கரையை நாடிப் போவதில் முன்னிலை வகித்தார்கள். நாங்கள் லிங்கங்கள் அமைந்த மேட்டில் நிற்கும்போது ஒரு கட்டுக்குள் நின்று மோதிக் கொண்டு இருந்த கடல்நீரானது நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதே படிப்படியாக அதுவும் விரைவாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கம் அமைந்த மேட்டினை மூடும் தன்மையில் நீர் பெருகத் தொடங்கியது. நாங்களும் உடனடியாக கரையைப் நோக்கி நடக்க ஆரம்பித்தோம். சுமார் 1கிலோ மீற்றர் தூரம் வெறும் தரையாகக் காட்சியளித்த இடம் எல்லாம் கடல்நீர் பெருகி வருவதைக் காணக்கூடியதாக இருந்தது. நாங்களும் அவசரமாகக் கரையை அடையும் எண்ணத்தில் வேகமாக நடக்கத் தொடங்கினோம். ஆனாலும் எமது வேகத்திலும் பார்க்க பெருகும் நீரின் வேகம் கூடுதலாக இருந்தது. நாம் கரையைச் சமீபிக்கும்போது இடுப்பளவு நீரில்தான் கரையை அடைந்தோம். என்ன மாதிரி இக்கடல்நீர் பெருகியது என்று பார்க்கும்போது அதுவும் அதிசயமாகத்தான் உள்ளது. சொல்லி வைத்தமாதிரி மதியம் 1மணியைத் தாண்டியதும் கடல் பெருகுவது ஒரு விநோதமான நிகழ்வாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

நாம் கரையை அடைந்து திரும்பிப் பார்த்தபொழுது பஞ்சலிங்கம் அமைந்த மேடு நீரால் மூடப்பட்டு அதனை அடையாளப்படுத்தும் முகமாக அமைந்த கூம்பின் அரைப் பாகம் வரை கடல்நீர் மட்டம் உயர்ந்து விட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தினசரி காலையில் கடல் பின்வாங்கி பஞ்சலிங்கங்கள் தெரிவதும் நண்பகலில் மீண்டும் கடல் பெருகி பஞ்சலிங்கங்களை மூடிக்கொள்வதும் வழமையாக நடைபெறும் அபூர்வ நிகழ்வாகும். இவ்விடம் பிரபல்யமடையாத காரணத்தாலும் நீண்டதூரம் பிரயாணம் செய்யவேண்டி இருப்பதாலும் தரிசனத்துக்காக வருகைபுரியும் அடியார்கள் மிகக்குறைவே. ஆனாலும் வரும் அடியார்கள் வசதி கருதி பேருந்து தரிப்பிடத்திலிருந்து கடற்கரை வரை சிறு சிறு வர்த்தக நிலையங்களைக் காணமுடிந்தது. எமது குழுவினரும் கடலுக்குள் நடந்த சோர்வு காரணமாக அங்குள்ள கடைகளில் தாக சாந்தியைத் தீர்க்கும் வண்ணம் இளநீர் முதலிய குளிர்பானங்களை வாங்கி அருந்தினர்.

கடல்நீர் பெருகியதைக் கண்ணாரக் கண்ட எமக்கு மறுநாட்காலை கடல்நீர் பின்வாங்குவதை மீண்டும் காணமுடியாமற் போனது ஒரு பெருங்குறையாகவே மனதை உறுத்திக்கொண்டு இருந்தது. அதன் பிரகாரம் எமது முகவர் ஸ்ரீரெங்கநாதனிடம் அங்கேயே தங்கி மறுநாட்காலை கடல்நீர் பின்வாங்குவதையும் காணவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தோம். ஆனாலும் வரையறுக்கப்பட்ட எமது பிரயாண ஒழுங்கு காரணமாகவும், எல்லோருக்கும் புதிய இடமாக இருந்தமையாலும் நேர அட்டவணையை சரியாக ஒழுங்கு படுத்தப்படாததாலும் நாம் உடனே திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் நாம் நின்ற கிராமத்தில் தங்கிநிற்கக் கூடிய வசதியும் இல்லாமல் இருந்ததும் எமது துரதிர்ஷ்டமே. எமது முகவர் உட்பட அனைவருக்கும் இது ஒரு கவலையளிக்கும் செயலாகவே இருந்தது.

ஆனாலும் இத் தரிசனத்தில் ஈடுபடவைத்த இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு 2மணி அளவில் பாவ் நகரை நோக்கி எமது பேருந்து விரைந்து சென்றது. வழியில் ஓர் இடத்தில் எமது மதிய உணவை முடித்து சிறிது ஆசுவாசப்படுத்திக்கொண்டு மாலை 5 மணியளவில் பாவ் நகரை அடைந்து எமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட விடுதியில் தங்கினோம். எல்லோர் மனதிலும் பஞ்சலிங்க தரிசனம் ஒரு நிறைவை ஏற்படுத்தியிருந்தது. இவ்விடயத்தில் நாம் ஸ்ரீரெங்கநாதனைப் போற்ற வேண்டும். உண்மையில் இத்தரிசனம் செய்வேன் என்று நினைக்கவில்லை. ஆனால் சந்நிதி வேலவன் ஸ்ரீரெங்கநாதனை ஒரு கருவியாக வைத்து இத்தரிசனத்தில் ஈடுபட வைத்தான். அதேபோன்று மறுமுறை நான் லிங்க தரிசனத்துக்கு வரும்போது இரண்டு தினங்களாவது அங்கே தங்கி இடம்பெறும் அதிசயங்களைப் பார்க்க வேண்டும் என்னும் திட சங்கற்பத்தோடு தான் திரும்பி வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.06.2013 திங்கள் காலை 6மணியளவில் பாவ் நகரிலிருந்து அடுத்த ஆலய தரிசனத்திற்காக அம்பாஜி என்னும் நகரை மாலை 5 மணியளவில் அடைந்தோம். எமது குழுவினர் அனைவருக்கும் இது ஒரு புதிய இடம். எமது தங்குமிடங்களை முன்கூட்டியே பதிவு செய்யக்கூடிய நிலை அமைய்வில்லை. ஆனாலும் ஒருசில சத்திரங்களை புதிதாக அமைத்து வரும் யாத்திரிகர்களுக்கு வசதியாக செயலாற்றிக் கொண்டிருந்தார்கள். நாமும் ஒரு சத்திரத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட அறைகளில் தங்கினோம். உடனடியாகவே எமது உணவு தயாரிப்பவர்கள் தமது பணியைச் செய்வதில் ஈடுபட்டனர். அந்தச் சமயத்தில் சத்திரத்து உரிமையாளரோடு நாம் கதைத்த வேளை தென் இந்தியாவிலிருந்து இங்கே வருகைபுரியும் யாத்திரிகர்கள் இல்லையென்றே சொல்லலாம். நீங்கள்தான் முதன்முதலாக வந்துள்ளீர்கள். இனிவருங் காலங்களில் தயங்காமல் வரலாம். வரும்போது அறிவித்துவிட்டு வந்தால் நல்லது என்றுகூறி தமது முகவரி அட்டையை ஸ்ரீரெங்கநாதனிடம் கொடுத்தார்கள். நீண்ட பிரயாணம் செய்த காரணத்தால் எமது குழுவினர் இரவு உணவை முடித்து தமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட அறைகளில் இரவுப் பொழுதைக் கழித்தனர்.

25.06.2013 செவ்வாய்க்கிழமை அன்று காலை அம்பாஜி நகரில் பிரசித்தமாக விளங்கும் அம்மன் ஆலயத்தில் வழிபாடு இயற்றும் வண்ணம் காலை 7 மணி அளவில் ஆலயத்தை அடைந்தோம். ஆலயம் முற்றுமுழுதாக சலவைக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. அத்துடன் 46 தங்கக் கலசம் கொண்ட பிரமாண்டமான ஆலயம் மிகவும் கட்டுப்பாடாகவும், ஒழுங்கான வழிபாட்டு முறையையும் கொண்டிருந்தது. வழிபாட்டிற்கு வரும் யாத்திரிகர்கள் அனைவரும் அச்செயற்பாட்டில் பங்குபற்றுவதற்குரிய முறையில் ஆலய செயற்பாடு அமைந்திருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குழுவினரும் வழிபாட்டில் ஈடுபடும் பொருட்டு வரிசையாக நின்ற அடியார் கூட்டத்துடன் இணைந்து கொண்டோம். பூசை வழிபாட்டுக்குச் செல்லும் வாயிற்கதவு திறக்கப்படாதபடியால் சிறிது நேரம் வெளியே நிற்கவேண்டி இருந்தது. ஆலய வழிபாட்டிற்கு காலைப் பொழுது சிறந்தது. காலையில் எமது உடலும் மனமும் தூய்மையுடன் இருக்கும். அந்நேரம் நாம் செய்யும் வழிபாட்டில் இறைசிந்தனை கூடுதலாகவே இருக்கும். அச்சிந்தனையுடன் எமது குழுவினர் அனைவரும் ஆலயத்தில் பூசை வழிபாட்டுக்குரிய பொருட்களை வாங்கி எப்போது ஆலயத்திற்குள் செல்வோம் என்ற எதிர்பார்ப்புடன் நின்றோம். அந்த நேரத்தில் என் மனதில் ஒரு எண்ணம் எழுந்தது. “நீண்ட தூரத்தில் இருந்து அம்மனாகிய உன்னைத் தரிசிக்க வந்திருக்கின்றேன் நீ எனக்கு என்ன தரப் போகின்றாய்” என்ற சிந்தனைதான் அது. அந்த நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருந்தேன். வரிசையில் ஒருவர் பின் ஒருவராக நான் நின்று கொண்டிருந்தாலும் ஏனோ தெரியவில்லை பூசை வழிபாட்டுக்குரிய ஒருவிதமான பொருட்களைக்கூட வாங்காமல் தரிசனம் செய்யும்போது என்ன நிகழும் என்ற எதிர்பார்ப்புடன் நின்றபொழுது நாம் உட்செல்லும் பாதையின் கதவினைத் திறந்து உள்ளே அனுமதித்தார்கள். என் மனதில் எழுந்த சிந்தனையின் பலன் கைமேல் கிடைத்ததா என்பதை அடுத்த மலரில்.....

(தொடரும்...

## ஞானச் சுடரேற்றி

ஞானச்சுட ரேற்றி  
ஞாலம் எங்கும்  
சைவத் தமிழ் வளர்க்கும்  
ஒப்பரிய உம் பணிக்கு  
என்றும் எம் தலை வணக்கம்  
உடற்பயிற்சி போக்கிடும்  
மடமாய் மட்டுமன்றி  
உள்ளமதை நிறைவிக்கும்  
உன்தை பணி சிறக்க  
உயிர்த் தமிழால்  
போற்றுகிறோம்  
பழம் பெருமை பேசி  
மட்டும் பயனில்லை  
கொஞ்சம்  
காலம் உணர்த்தும்

சில கருத்துக்களை  
சேர்ப்பித்து இன்றும்  
தந்திட்டால் ஞாலத்தில்  
உறைத்திடும்  
உம் பணி  
வாள் வெட்டுக்  
கொலைகளால்  
தற்கொலைகள்  
நிறைந்திட்ட எம்  
சமூக வெளியதை  
சீர்மைப்படுத்திடவும்  
சிறப்பாய் பணி செய்வீர்  
பிஞ்சு உள்ளங்களின்  
நஞ்சு விதைகளை களைய  
நெஞ்சாரப் பணி செய்வோம் வாரீர்

-புலோலியூர் வேல்நந்தன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை

– திரு சு. சிவராசா அவர்கள் –

என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி யென் தலை வைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனி யெல்லா மாளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவின்ன நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கு மறிய வொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மைதீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள் குருநாதன்

பெறுதற்கரியவினும் பெற்றது இம்மானிட யாக்கை. நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்றார் நாவலர் பெருமான். தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி உலக மாயா விகாரங்களில் இருந்து விடுதலை பெற்று இறைவனடி சேரவிரும்புபவர்களின் செயல்கள் மற்றவர்களிற்கு விளங்கமுடியாதனவாய் இருக்கும். எண்ணுவார் நெஞ்சினில் தானே நண்ணுவான் ஈசன். இறைபித்துக் கொண்டவர்களின் அநுபூதியை உலகத்தார் அறியும்போது அவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகிறார்கள்.



தவத்திரு சிவயோக சுவாமிகளும் இத் தகைய இறை அநுபூதி பெற்றவராய் ஈழத்துச் சித்தர் பரம்பரையில் ஒருவராய் வைத்துப் போற்றப்படுகிறார். யாழ்ப்பாணம் மாவிட்ட புரத்தில் அம்பலவாணர் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்குத் தெய்வக் குழந்தையாக 1872ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 29ஆம் திகதி அவதரித்தார். சிறுபராயத்திலேயே பெற் றோரை இழந்தார். சதாசிவன் என்னும் இயற் பெயரை உடையவர். மாமியாரின் அரவணைப் பில் வளர்ந்தார். யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிற் கல்வி கற்று கிளிநொச்சி நீர்ப் பாசன அலுவலகத்தில் களஞ்சியப் பொறுப் பாளராகக் கடமை புரிந்தார்.

இங்கேதான் அவருடைய பக்திநெறி ஆரம்ப மானது. திருமுறைகள், புராணங்கள், உபநிட தங்கள், பகவத்கீதை முதலிய பக்தி இலக் கியங்களைக் கற்றார். தாமரை இலைத் தண்ணீரபோல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டா மலும் வாழ்ந்தார். நீர்ப்பாசன திணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தின் பொறியியலாளரான பிறவுண் என்ற ஆங்கிலேயர் இவரை "கடவுளின் மனிதன்" என்று அழைத்தார்.

நல்லூர்த் தேரடிச் சித்தரான செல்லப்பா சுவாமிகளைத் தரிசிக்கப் பெற்றார். அவரே தனது ஞானகுரு எனக் கண்டு தெளிந்தார். ஞானதீட்சையும் உபதேசமும் பெற்றார். தமது தொழில் உறவுகள் அனைத்தையும் உதறித் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். இவ்வூர் மணியகாரர் இவரை யோகநாதன் என அழைத்தார். சதாசிவன் சிவயோக சுவாமிகள் என மக்களால் கொண்டாடப்பட்டார்.

சுவாமிகள் தமது அநுபூதியில் இருந்து திவ்விய மகா வாக்கியங்களை உலகத்தவருக்கு அருளியுள்ளார்.

ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை
அது அப்படித்தான்
நூதனமொன்றுமில்லை
சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை
காயமொரு சித்திரக் கோயில்

சுவாமிகள் தமது ஞானகுருவை கண்டவாறு இப்படிச் சொல்கிறார்.

"தேர் முட்டிப்படிமேலே - கிளியே
செல்லப்பன் என்ற சீமான்
ஆர்வமுடன் இருக்கின்றாண்டி - கிளியே
அங்கு போவோம் வந்திடடி"

தமக்கு அநுபூதி கிடைக்கப்பெற்ற நல்லூர்த் திருத்தலத்து முருகனை இப்படிப் பாடுகிறார்.

"நல்லூரான் திருவடியை - நான் நினைத்த மாத்திரத்தே
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி"

சுவாமிகள் தமது அன்பர்களின் இல்லங்களிற்கு சில வேளைகளில் செல்லுவார். வாழும் இல்லம் ஒரு கோயில். பூசையறையில் இருப்பவை வெறும் படங்களல்ல. மனதாரக் கும்பிட்டு வாவென்று கைநீட்டினால் முருகன் கைக்குள் வருவானென்று கூறுவார். இந்தப் பிரபஞ்சம் இறைவன் அணிந்திருக்கும் ஒரு தங்கப்பதக்கம் அதில் பதிக்கப்பட்டிருக்கும் பல்வேறு வண்ணமணிகளே மனிதர்கள் என்றும் எல்லாம் இறைவனது சிருட்டியே என்றும் உலகிற்குத் திருத்தமான கருத்துக்களைச் சொல்லுபவர்கள் அழுக்கைப் போக்கித் தன்னைக் கரைத்துக்கொள்ளும் சவர்க்காரம் போன்றவர்கள். வெறுமனே ஊருக்கு உபதேசம் யாருக்கும் பயன்தராது.

சமயம் என்பது கிரியைகளிலும் விழாக்களிலும் அடங்கிவிடுவதில்லை. சேலை துவைப்பதும் செம்பு மினுக்குவதும் ஆச்சார அனுட்டானம் ஆகிவிடாது. உள்ளம் சம்பந்தப்படாது உடம்பினால் மாத்திரம் செய்யப்படும் வழிபாட்டினால் பயன் ஏதும் இல்லை. உண்மையான வழிபாடு படிப்படியாக உலக விவகாரங்களிலிருந்து விடுபடவும் இறையன்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கவும் உதவவேண்டும். குறள்நெறியும் நாலடியும் கூறும்நிலையாமையை சுவாமிகள் இன்றைக்கிருந்தாரை நாளைக் இருப்பாரென்று எண்ணவோ திடமில்லை என்கிறார்.

வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர்களுக்கு தட்டுப்பாடும் முட்டுப்பாடும் இல்லை. பற்றுவிட்ட துறவிகளிற்கு வேந்தனும், துரும்பேயாம். சுவாமிகளிடம் தமது லௌகீக விஷயங்களிற்காக வருபவர்களிற்கு அதிகமாக ஏதும் கிடைப்பதில்லை. நீங்கள் சாத்திரக்காரர்களிடம் செல்லுங்கள் எதற்கும் நல்லூருக்குச் சென்று நன்றாகக் கும்பிடுங்கள் என்று அவர்களைத் திருப்பி விடுவார். ஆனால் சுவாமிகளின் வழிபாடுகளோடு சேர்ந்துகொண்டு திரும்புபவர்களிற்கு எல்லா நன்மைகளும் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

சுவாமிகள் மக்களை நல்வழிப்படுத்தவும் செயலூக்கப்படுத்தவும் பல காரியங்களைச் செய்தார். யோகர் சுவாமிகள் யாழ்ப்பாணம் செங்கலடி ஆகிய இடங்களில் சிவதொண்டன் நிலையங்களை அமைத்து அவற்றினூடாக பல பணிகளைச் செய்தார். சைவ சித்தாந்த வேதாந்த, புராண இதிகாச வகுப்புக்களை நடாத்துதல், சமய விழாக்களைக் கொண்டாடுதல், மற்றும் மது விலக்கு பிரசாரப்பணி, விவசாயமேம்பாட்டுப் பணி முதலியன குறிப்பிடத்தக்கன.

யோகர்சுவாமிகளிற்கு பலர் சீடர்களானார்கள். மார்க்கண்டு சுவாமிகள் (கைதடி) சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் (அமெரிக்கா) சாந்தா சுவாமிகள் (இங்கிலாந்து) செல்லத்துரை சுவாமிகள் (சரசாலை- இலங்கை), கௌரிபாலா சுவாமிகள் (ஜேர்மனி), சந்திரபாலா சுவாமிகள் (பிரான்ஸ்) நரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்திரேலியா), வடிவேல் சுவாமிகள் (கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம்) முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சுவாமிகளிற்குப் பின்னர் சிவதொண்டன் நிலையங்களைப் பொறுப்பேற்று நடாத்திய தவத்திரு செல்லத்துரை சுவாமிகளாவார். யோகர் சுவாமிகள் கொழும்புத்துறையில் 1964ஆம் ஆண்டு பங்குனி (மார்ச்) 23ஆம் திகதி ஆயிலிய நட்சத்திரத்தில் சமாதியடைந்தார். கடலும் ஒரு தரம் கலங்கித் தெளியும் என்பார்கள். சுவாமிகளும் தமது குருநாதரிடம் இப்படிச் சொல்கிறார்.

செல்வக்குருநாதா! செல்வக்குருநாதா!
சிந்தைதடுமாறுதெடா! திருவருளைத் தந்திடெடா!
அல்லலெல்லாம் நீக்கி யாளாக்க வேண்டுமெடா
எல்லையில்லா வின்பத்திலே யெனை யிருத்திவைத்திடெடா!

சுவாமிகளது அடியார்களும் சைவப்பெருமக்களும் அவருடைய குருபூசையை வருடந்தோறும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள். இவ்வருடம் 50ஆவது குருபூசை தினமாக அமைவதால் வெகு சிறப்பாக சிவதொண்டன் நிலையத்திலும் துர்க்காமணி மண்டபத்திலும் சித்திரை (ஏப்ரல்) 10ஆம் திகதி (01.04.2014) வியாழன் அன்று கொண்டாடப்பட்டது. சுவாமிகள் அநுபூதியால் அருளப்பட்ட "நற்சிந்தனை" முற்றோதலும் நடைபெற்றது. குருவருளின்றி திருவருளில்லை. சுவாமிகளின் திருவருளால் எல்லோரும் எல்லா நன்மைகளும் பெற்று வாழ திருவடிகளை சிந்தித்து வழிபடுவோம்.

உகந்து மனங்குவிந்து ஒன்றுக்கு மஞ்சா
தகந்தை அவா வெகுளி யாற்றிச் - சகந்தனிலே
தாமரையிற் றண்ணீர்போற் சாராமற் சார்ந்துநற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## துரியோதனனின் குற்றம்

நடுவுஇன்றி நன்பொருள் வெ·.கின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். (குறள்: 171)

நல்ல வழியில் பிறர் அடைந்த பொருளை எவனாவது மனச் சமநிலை கெட்டு அபகரிக்க எண்ணினால் அவனுடைய குடும்பம் கெட்டுவிடும். குற்றமும் சேரும்.

பழிக்கஞ்சி நடுநிலை கெடாமல் நாணத்தோடிருப்பவர், எந்த நல்ல பயனை விரும்பியும் பிறர் பொருளைக் கவரமாட்டார். அறத்தால் உண்டாவது பேரின்பம் என அறிந்தவர், நிரந்தரமற்ற - பின்னால் துன்பமாகும் சிற்றின்பம் நாடி தீய செயல்களைச் செய்யார். புலனடக்கம் பெற்ற தூய அறிவுடையவர் "தம்மிடம் ஒன்றும் இல்லையே" என்று பிறர் பொருளை அடைய ஆசைப்பட மாட்டார். பிறர் பொருளை அபகரிக்க, தகாத செயலைச் செய்வதால், அறிவிருந்தும் பயனில்லை, என்கின்றன வள்ளுவரின் குறளும் சாத்திரங்களும்.

பொருளாசையே குற்றங்களின் காரணம்.

துரியோதனன் மண்ணாசை கொண்டான். தனக்கு முடிசூட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டான். இதைத் தவறு என்று சொல்ல முடியாது என்பர் சிலர்.

இதிகாச காலப்படி மூத்தவனுக்கே முடி சூட்டப்படும். திருதராட்டினன் பிறவிக் குருடனான மூத்தவன். ஊனமுள்ளவன் அரசனாக முடியாது என்பது சாத்திரச் சட்டம். அதனால் பாண்டுவான இளையவன் பட்டத்திற்கு வந்தான். பாண்டு வனமேகும்போது இடைக்கால அரசனாக திருதராட்டிரன் பொறுப்பு வகித்தான். பாண்டு திரும்பி வராமல் மாண்டு விட்டான்.

பாண்டுவின் புத்திரர்களான பாண்டவரில் மூத்தவரான தருமருக்கு பட்டம் என்ற நிலை இருந்தது. இளவரசுப் பட்டம் ஏற்ற தருமர் முதலானவர் மிகவும் சிறுவர்களாக இருந்தனர். திருதராட்டிரனே அரசுப்பொறுப்பில் ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

ஊனமில்லாத துரியோதனன் வயது வந்ததும் "நான் ஏன் மன்னனாகக் கூடாது?" என்று கேட்டான். அரசனாக விரும்பினான். "தந்தைக்குக் குருடன் என்றதால் கிடைக்காத ஆட்சியுரிமை தனக்குக் கிடைக்கவேண்டும்" என்று கோரினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை முறை என்றே சிலர் ஆதரிப்பர்; இப்படி அரசனாக விரும்பியதை யாரும் அவன் குற்றமாகக் கூறவில்லை. ஆனால், அப்படி எழுந்த ஆசையால் அவன் செய்த தப்பான செயல்களையே குற்றம் என்பர். துரியோதனனைக் கெட்டவன் என்னும் பழிவந்து சேர்ந்தது.

அருளை விரும்பி நல்வழிச் செல்பவனும், பொருளை விரும்பித் தகாததைச் செய்தால் கெட்டுப்போவான். ஆகவே, நல்லவர் பொருளைக் கொள்ளார். நியாயமான ஆசை என்பதையே குற்றங்களுக்குக் காரணமாக அமைந்துவிடும் என அஞ்சி விடுவர். பிறர் செல்வத்தை விரும்பி சூழ்ச்சியால் பெற்றாலும் நன்மை தராது. உண்மையில் செல்வம் குறையாதிருக்க பிறன்பொருளை அபகரிக்க விரும்பாதிருக்க வேண்டும். பிறன்பொருள்மேல் ஆசையின்றி அறவழியில் வாழ்பவரிடம் இலக்குமி விரும்பிப் போய் வசிப்பாள். பழியை நினைத்துப் பாராமல் பொருளை மட்டும் அபகரிக்க எண்ணுவது அழிவைத்தான் தரும். அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாததே பெருமை தருவதாகும்.

பாண்டவரைப்போல கௌரவருக்கும் அரசுரிமை உண்டு எனப் பேசப்பட்டது. ஆனாலும் துரியோதனனோ தனக்கு மட்டுமே அரசுரிமை உண்டு என பாண்டவர் உரிமையையும் பறிக்க நினைத்தான். இதுதான் அவன் குற்றம். இதனால் தகாத செயல்கள் பலவற்றைச் செய்தான். அவற்றின் பயனாகத் தானும் தன் சகோதரர்களோடு அழிந்தான்.

சிறு வயதில் விளையாடும்போதே பீமனைக் கொல்லத் தந்திரம் செய்தான். ஆற்றில் அவன் குதிக்கும் இடத்தில் ஈட்டிகளைக் குத்தி வைத்தான். சோற்றில் நஞ்சைக் கலந்து தரச் செய்தான். அரக்கு மாளிகையில் எரித்து ஐவரையும் கொல்ல முயன்றான்.

பீஷ்மர், விதுரர், துரோணர் முதலியவர் கூடிப்பேசி, திருதராட்டிரனின் முன்பு குருதேசத்தை இரண்டாக்கி அஸ்தினாபுரத்தை துரியோதனனுக்கும், இந்திரப்பிரஸ்தத்தை தருமருக்கும் தந்து சமாதானம் செய்தனர்.

தங்கள் பராக்கிரமத்தால் தருமர் சக்கரவர்த்தியானார். பாண்டவர் செல்வம் பெருகியது. இராஜசூய யாகம் நடத்தினார் தருமர். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அருள் அவர்கள் பக்கமிருந்தது.

அப்போது பாண்டவர் செழிப்பை, செல்வத்தை, செல்வாக்கைக் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன் அவர்களின் ராஜ்யத்தை அபகரிக்க விரும்பினான். சகுனி துணை செய்தான். கர்ணன் தைரியம் தந்தான். வஞ்சகமாக சூதாட அழைத்தான். போராடுவதுபோல சூதாடுவதும் சத்திரியர் தருமம்தான். சகோதரருள் போரையும் அதனால் ஏற்படும் அழிவையும் தவிர்க்க எண்ணிப் பெரியோர் பெயரால் அழைக்கப்பட்டு சூதாடப்போன தருமர் கௌரவரின் வஞ்சனையை அறிந்தே மனைவியுட்பட தன்னையும் அனைத்தையும் பணயம் வைக்க சகுனியால் குறிப்பிடப்பட ஒப்புக்கொண்டு தோற்றார். அளவிற்கு மேல் திரௌபதியை, பாண்டவரை அவமானம் செய்தான் துரியோதனன். வனவாசத்திற்குப் பிறகு 13 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்ரீ கிருஷ்ணரின் உதவியோடு பாண்டவரால் கௌரவர் குருஷேத்திரப் போரில் மிச்சமின்றி அழிக்கப்பட்டனர். அவர்களைப் பெரும் பழியும் சூழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரை சொல்ல வந்தால் ஊரே திரளும்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

இறைவனின் தூதுவர்களாக, காலத்திற்குக் காலம் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட திருவருட் செல்வர்கள் பலர். அவர்கள் எல்லோரையும் பற்றிய குறிப்புக்களை யாவரும் எழுத முன்வரவேண்டிய தேவையுண்டு. அந்த வகையில் கொக்குவில் த. குமாரசாமிப் புலவர் அவர்கள் நாவலருக்குப் பின்பு எமக்கு வாய்த்த காவலராவார். கந்தபுராண கலாச்சாரத்தினை பங்கமேற்படாத வண்ணம், பாங்குறவும், பலிதமுறவும், பிரவாகிக்கச் செய்த கைங்கரியத்தைப் புலவரவர்கள் ஏற்றிப்போற்றியிருக்கிறார்கள்.

1895-08-17இல் பிறந்த இவர், மரபுவழியாக, தந்தையாரிடமும், தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனத்தின் அனுசரணையுடன் பண்ணிசை, இலக்கியம், இலக்கணம், கதாப்பிரசங்கம், புராணபடனம், எழுத்தறிவித்தல், பாடசாலை நிறுவுதல் முதலாக, நாவலர் ஆர்வம் காட்டிய அத்தனை துறைகளிலும் வெல்பவராகத் திகழ்ந்தார்.

தேவாரங்களைப் பண்ணோடு பாடுவதே பக்தியின் வரப்பிரசாதமாகக் கருதிய புலவர், புராணபடனத்தையும் நாவலர் காட்டிய வரையறைக்குள் நின்று உயிர் கொடுத்தவரெனலாம்.

அழகான சரீரமும், ஆழ்ந்த பண்பட்ட சாரீரமும் உடைய புலவர், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் யாவற்றையும் அக்குவேறு ஆணிவேறாக, மிகுந்த தாடனம் கொண்டவராய் விளங்கினார். பதவுரை, பொழிப்புரை, விஷேட உரை என்னும் ஒழுங்கிலே, நயம்பட இவர் பயன் சொல்லும்போது, தேவையான மேற்கோளையும் காட்டி, இலக்கணமாகவும், இணக்கமாகவும் எளிதுற எடுத்தியம்புகின்ற வாலாயத்தை சோடை போகாமல் ஆற்றுவார். இத்தகு சைவ சமய விழுமியங்களை இலயித்துக் கேட்பதற்காகவே ஊரெல்லாம் திரண்டு வரும். கேட்டவர்கள் எல்லோரும் புராணக்கதைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாகவே திகழ்ந்தார்கள். பெரும்பாலானவர்கள் கேள்விஞானமுடையவர்களாகவும், இசைஞானம் உடையவர்களாகவும் இருந்ததனால் அவைக்கு ஏற்றவாறு புலவர் அவர்களும், இராகங்களை சுவைபட இசை சொட்டச் சொட்டத் தேனாகவும், தேனாக்கியும் ஆற்றுவாராயினர்.

இதனால் இவர், புராணவித்தகர் என்று அழைக்கப்படலானார். ஈழ நாட்டிற்கே சிறப்பாக உரித்தான கந்தபுராணக் கலாச்சார மகிமைக்கு யாழ்ப்பாண மண் நாவலராலும், புலவராலும் வரம்பெற்றதெனலாம். புலவர் இசையால் மெருகூட்டினார்.

எமது பண்பாட்டிலே, புராணபடன மரபு- என்பது ஒருவகைக் கல்விமுறையே. இதனாற் போலும் எமது சமயம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமத்துவ முறையிலான போதனா முறையினை ஆலயங்களிலிருந்தே அதுவும் புராணப் படிப்பிலிருந்தே ஆரம்பித்திருக்கின்றது. காலம் பெண்களை ஒருபோதும் கைவிட்டதில்லை. இப்போது கூட பெண்களே புராணம் படிக்கின்ற ஆலயங்களைப் பார்க்கும்போது நாவலரையும், புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவையும் கையெடுத்து ஒருமுறை என்ன பலமுறை கும்பிடலாம். ஆகம விதிப்படியமைந்த ஆலயங்களில் இப்போதும் புராணம் கேட்டு அனுபவிக்கின்ற ஊர்களைப் பார்த்து நாமும் வணங்குகின்றோம்.

போட்டிகளோடு மட்டும் நின்றுவிடாது, இளைய தலைமுறைகளை ஈடுபட வைக்கக்கூடிய வாழ்வாதாரமான பொருளாதார ஊக்குவிப்புக்களை ஆலய வளங்களூடாக வழங்கக்கூடிய திட்டமிடலை, ஒவ்வொரு ஆலயங்களும் பின்பற்றுவார்களாயின், புராண படனம், பண்ணிசை, கதாப்பிரசங்கம், எழுத்தறிவித்தல் போன்ற யாவும் மீளெழுச்சி பெற்று, மீண்டும் ஊரே திரளும் வகையில் நாமே வழிசமைக்கலாம். யாழ்ப்பாணம் முழுமையாக கட்டிடங்களாகவும், கோயிலாகவுமே நிறைந்திருப்பது முன்னோர் சொன்னதும் செய்ததுமான புண்ணியங்களேயாகும். இளையோர்களும் பெண்களும் வாசித்து (பதவுரை கடினமெனின்) பொழிப்புரையையாவது பார்த்து சொல்லக்கூடியதாக, எல்லாவற்றிற்கும் பிழையையே கண்டுபிடித்துச் சொல்லும் சம்பிரதாயத்தை சற்று சமாதானப்படுத்தி அவர்களை வெல்ல வைக்க முனைந்தாலொழிய அடுத்துவரும் சந்ததிக்கென்று நாம் என்னத்தைத்தான் விட்டுவைக்கப் போகின்றோம்? நேரத்திற்கு வேலை, சம்பளத்திற்குச் சமயம் என்ற யுகத்தினில் அகப்பட்டு விட்டோம். சமூகங்களுக்குள்ளே சென்று கதைக்கவோ, பிரார்த்திக்கவோ, வழிபடவோ, உரையாற்றவோ, வாழ்த்தவோ எம்மனம், எம்மதம் இறங்குமாயின் எமது சமயம் நல்லதோர் தலைமைத்துவத்தைச் சிரம்தாழ்த்தி வணங்கும். மூலை முடுக்கெல்லாம் ஊரே வந்து திரளும்.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 52

-இராஜையா குகதாசன்-

**பல்லவி**

எந்நிதி யும்தருவான் சந்நிதியான் - வாழ்வில் பாதம்
தன்நிதி யென வேயித் தாரினிற் துதிப்போர்க்கு

**அநுபல்லவி**

நன்நிதி வாரியென்றே நாடெலாம் போற்றிடவே
பன்நிதி யும்வாரும் பரம்பொருளா யிருந்தே (எந்நிதி)

**சரணம்**

நின்நிதி தேவிதெய்வி மூலஸ்தானத் திருக்க
பின்நிதி யானவள்ளி பெருவீதி கொலுவிருக்க
தன்நிதி யாமருளை தரணியெலாம் வாரி
மன்நிதி யாகவிந்த மாநிலத்தே யருளி

(எந்நிதி)

துன்நிதி கொண்டோரும் தூயவன் முன்வந்தால்
வன்நிதி நிலைமாற்றி வாழ்வினைத் தந்திடுவான்
முன்நிதி யாய்வந்தே மூழ்வினை நிலைமாற்றி
தொன்நிதி யெனும்வாழ்வை தொல்லுலகில் வாழ

(எந்நிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்
அருளிய
# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 5. மூவகைத் திருமேனி கொள்பவன்

அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்.

**பொருள்:**

இறைவன் ஞானியர்க்கு அறிவே வடிவாய் விளங்குகின்றான். ஏனையோர்க்கு அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளை உடையவனாய் இருக்கின்றான்.

**சொற்பொருள்:**

உடையான்- எல்லாப் பொருள்களையும் தனது உடைமையாகக் கொண்டவனாகிய இறைவன், அறிஞர்க்கு- மெய்யுணர்வு பெற்ற ஞானியர்க்கு, அறிவாம் உருவும்- அறிவே வடிவான திருமேனியையும், அருவும் உருவும்- (ஏனையோர்க்கு) அருவத் திருமேனியையும், உருவத் திருமேனியையும், உளன்- உடையனாய் இருப்பான்.

**விளக்கம்:**

**உண்மை நிலையும் பொது நிலையும்:**

இறைவனுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று உண்மை நிலை. மற்றொன்று பொதுநிலை.

இறைவன் இயல்பிலே தனக்கென உருவம், பெயர், தொழில் ஒன்றும் இல்லாதவன். இதுவே அவனது உண்மை நிலை. இதனை வடமொழியில் சொரூபம் என்பர்.

இத்தன்மையனாகிய இறைவன் உயிர்களின் பொருட்டு உருவம் முதலியவற்றை மேற்கொள்வன். இஃது அவன் அடையும் பொதுநிலையாகும். இதனைத் தடத்தம் என்பர்.

இறைவனது உண்மை நிலையை ஞானியரே அறிதல் கூடும். அவர்க்கு அவன் அறிவே வடிவாய் விளங்குவான். அதனை அறிந்த அப்பெரியோர் ஆராத இன்பத்தையே நுகர்ந்து நிற்பர்.

இறைவனது உண்மை நிலையை உணர மாட்டாதவரே ஏனையோர். அவர்களும் தன்னை மனம் மொழி மெய்களால் உணர்ந்து வழிபட்டு உய்தல் வேண்டி அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொள்வன்.

"நானாவித உருவாய் நமை யாள்வான்" (1,9,5) என்று ஞானசம்பந்தர் அருளியுள்ளமை காணலாம்.

ஆசிரியர் உமாபதி சிவம் தமது மற்றொரு நூலான சிவப்பிரகாசத்தில் இறைவனது இயல்பைச் சொல்லும்போது "நிலவும் அரு வுரு இன்றி" (செ.13) என்றார். அவ்வாறு அங்கே சொன்னவர் இங்கே "அருவும் உருவும் உளன்" என்கிறார். சிவப்பிரகாசத்தில் சொன்னது இறைவனது உண்மை நிலையை நோக்கி எனவும், இங்கே சொன்னது அவனது பொதுநிலையை நோக்கி எனவும் உணர்தல் வேண்டும்.

இனி, அருவம் முதலிய மூவகைத் திருமேனிகளின் தன்மையை விளக்குவோம்.

**அருவம்:**

இறைவன் உயிர்களிடத்து நுண்ணிய மொழி வடிவாய் நின்று அவற்றிற்கு உணர்தல் தன்மையை உண்டாக்குகிறான். இக்கருத்தமைந்த,

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்னும் திருவாசகத் தொடர் ஆழ்ந்து உணர்தற்குரியது.

இஃது இறைவனது அருவ நிலையாகும். அருவத் திருமேனி என்று சொல்லப் பெறும் இது கட்புலனாகாது கருத்தினாலேயே உணரப்படுவதாகும்.

**உருவம்:**

அருவத் திருமேனி போலன்றிக் கட்புலனாகக்கூடியது உருவத்திருமேனியாகும். இது முகம், கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய வடிவமாகும். ஆயினும் இவ்வுருவம் பக்குவமில்லாத நம்மவர் கண்ணிற்குப் புலப்படாது; தவத்தோர் கண்ணிற்கே புலப்படுவதாகும். அடியார் பலருக்கும் பல சமயங்களில் தோன்றி அருள்புரிந்த திருமேனிகள் எல்லாம் உருவத்திருமேனிகளே.

உருவத் திருமேனியைப் போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என மூன்றாகச் சொல்வர். உலக இன்பத்தைத் தருதற் பொருட்டு மணக்கோலம் கொள்ளுதல் அம்மையும் அப்பனுமாய் இருத்தல் போன்றவை போக வடிவம் எனப்படும். ஞானத்தைத் தருதற் பொருட்டுத் தட்சிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருத்தல் போன்றவை யோக வடிவம் எனப்படும். தேவர்க்கும் ஏனை உலகத்தார்க்கும் உண்டாகும் துன்பத்தைப் போக்குதற்குப் போர்க்கோலம் கொள்ளுதல் (திரிபுரம் எரித்தல், காலனை உதைத்தல்) போன்றவை வேக வடிவம் எனப்படும்.

இறைவன் செய்யும் ஐந்தொழில்களை முந்திய செய்யுளில் அறிந்தோம். அவற்றுள் அருளல் தவிர மற்றைய நான்கு தொழில்களையும் செய்யும் நிலையில் உருவத் திருமேனி அவனால் கொள்ளப்படும்.

**அருவுருவம்:**

இனி, அருவம் உருவம் என்னும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாக அருவுருவம் என்பது உண்டு. செய்யுளில் அருவும் உருவும் என இரண்டே கூறப்பட்டுள்ளன. ஆயினும் இடைக் கண்ணதாகிய அருவுருவம் என்பதையும் நாம் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவுருவம் என்பது முகம் முதலிய உறுப்புக்கள் இல்லாது பிழம்பு மாத்திரமாகக் காணப்படுவது. ஒளி வடிவமே இது. முகம் முதலிய உறுப்புக்கள் இல்லாமையால் அருவம் எனவும், கட்புலனுக்குத் தோன்றுவதால் உருவம் எனவும், சொல்லும்படியாக நிற்றலால் இது அருவுருவம் ஆயிற்று.

தோன்றி மறைகின்ற ஒளிச்சுடர்போல அருவுருவத் திருமேனியும் ஓரொரு சமயமே தோன்றிப் பின் தோன்றாது நிற்கும். இதுவே ஐந்தொழில்களுள் அருளலைச் செய்வதாகும். அது பற்றியே திருக்கோயில்களில் மூலஸ்தானத்தில் மூலமூர்த்தியாய் வைத்து வழிபடப்பெறுகிறது. இது சிவலிங்கத் திருமேனி எனவும், சதாசிவ மூர்த்தி எனவும் பெயர் பெறும்.

**அருள் திருமேனி:**

இதுகாறும் கூறியவற்றால் இறைவன் கொள்ளும் மூவகைத் திருமேனிகளின் இயல்பு ஒருவாறு விளங்கும். முடிவாக ஒன்றைச் சொல்ல வேண்டும். நம்முடைய உடம்பெல்லாம் மாயையினால் ஆகிய சரீரம். இறைவன் கொள்ளும் திருமேனியோ மாயையினால் ஆனதன்று. அ∴து அருளால் ஆனது. ஆகவே அருள்திருமேனி எனப்படும். அவ்வருள் திருமேனிகள் பிறரால் படைத்துத் தரப்படுவன அல்ல. அவன் தானே தனது இச்சையாற் கொள்வன என்பதை உளங்கொள்ளுதல் வேண்டும்.

**6. அவனுக்கு மேலானதொரு பொருளில்லை**

பல்லாருயிர் உணரும் பான்மையென மேல் ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை.

**பொருள்:**

உயிர்கள் எண்ணற்றவை; அறியும் தன்மை உடையவை. ஆனால், அவை தாமே அறியமாட்டா; வேறொரு துணை அறிவிக்கவே அறிவன. அவ்வுயிர்களைப் போன்றனவல்லன் எம் இறைவன். அவன்தானே எல்லாவற்றையும் அறிபவன்; தன்னை அறிவித்தற்குத் தனக்கு மேலாக ஒருவனை உடையவன் அல்லன்.

**சொற்பொருள்:**

பல் ஆர் உயிர்- எண்ணற்றனவாய் நிறைந்த உயிர்கள், உணரும் பான்மையென- தாமே அறிய மாட்டாமல், தமக்கு மேலோன் ஒருவன் அறிவிக்கவே அறிந்து வருதல்போல, எங்கள் இறை- எம் இறைவன், மேல் ஒருவன் இல்லாதான்- தன்னை அறிவித்தற்குத் தனக்கு மேலானவனாக ஒருவனை உடையவனல்லன். (அவன்தானே எல்லாவற்றையும் அறிபவன்)

**விளக்கம்:**

**உயிர்கள் உணரும் பான்மை:**

உயிர்கள் தாமே தனித்து நின்று பொருள்களை அறிவதில்லை. உடம்பின் புறத்திலும் அகத்திலும் அமைந்திருக்கும் கருவிகளைத் துணையாகக் கொண்டே அறிகின்றன. கண், செவி முதலிய ஐம்பொறிகள் புறத்தில் உள்ள கருவிகள். மனம் முதலியவை அகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கருவிகள். இக்கருவிகள் இல்லையென்றால் உயிருக்கு அறிவு நிகழாது என்பதை அனுபவத்திற் காணலாம்.

உறங்குங் காலத்தில் இக் கருவிகள் செயற்படாமையால் உயிர் அறிவின்றிக் கிடக்கிறது. விழிப்புக் காலத்தில் இக் கருவிகள் செயற்படுவதனால் அவற்றின் துணைகொண்டு உயிர் அறிவு பெறுவதாகின்றது. இவ்வனுபவம் எதைக் காட்டுகிறது? உயிர் கருவிகளின் துணையைப் பெறும் போதுதான் அறியும் நிலையை எய்தும் என்பதைத்தானே காட்டுகிறது.

மேற்கூறிய மனம் முதலிய கருவிகள் உலகப் பொருள்களை அறிவதற்கு மட்டுமே துணையாகும். உயிர் தன்னியல்பை உணர்ந்து கொள்வதற்கு அவை துணை செய்யா; மெய்ப்பொருளாகிய இறைவனை உணர்தற்கும் அவை துணை செய்யா. அதற்கு ஞானாசிரியரது அருள் உபதேசமே இன்றியமையாத துணையாகும். இப்படி எப்பொருளை அறிவதற்கும் வேறொரு துணை உயிருக்கு வேண்டியிருக்கிறது.

உடம்பும் கருவிகளும் ஆகிய துணைகளையும், மற்றும் காலம், வினை போன்ற துணைகளையும் உயிர்களுக்குக் கூட்டி அறிவிக்கின்றவன் இறைவனே. அவன் உயிர்களுக்குக் கட்டு நிலையில் இக் கருவிகளின் வழியாக அறிவிக்கின்றான்; முத்தி நிலையில் நேரே அறிவிக்கின்றான். எனவே எந்நிலையிலும் அவன் அறிவிக்கவே உயிர்கள் அறிகின்றன. முடிவாகப் பார்த்தால் அவன் ஒருவனே உயிர்களின் அறிவுக்கு முழுமையான துணை என்பது விளங்கும். இம்முறையில் எல்லா உயிர்களும் தம்மை அறிவித்தற்கு மேலோன் ஒருவனை உடையனவாய் இருக்கின்றன.

**மேலொருவன் இல்லாதான்:**

இனி, இறைவனது அறிவு எத்தகையது என்பதைப் பார்ப்போம். இறைவனது அறிவு தானே விளங்குவது; அஃதாவது, அறிவிக்கின்ற துணை ஒன்றை வேண்டாது தானே அறிவது. தானே விளங்கி நிற்கின்ற அறிவு ஆதலின் அது சுயம்பிரகாசம் எனப்படும்.

அவன் தானே அறிபவன். எனவே அவனுக்கு அறிவிக்க மேலோன் ஒருவன் இல்லை என்பது சொல்லாமலே விளங்கும். அவனே மேலோனாய் இருந்து எல்லாவற்றையும் ஒருங்கேயறிந்து எல்லாவுயிர்களுக்கும் அறிவித்து வருகின்றான்.

இச் செய்யுளில், இறைவனே சுதந்திர அறிவுடையவன் என்பதையும், உயிர்களது அறிவு சுதந்திரம் இல்லாதது என்பதையும் வெளிப்படையாகக் கூறி, உயிர்கள் யாவும் அவனுக்கு ஆட்பட்டு ஒழுகுதற்கு உரியன என்பதையும் குறிப்பாக உணர்த்தியுள்ளார் ஆசிரியர்.

காத்திரமான கட்டுரையும் கனதி நிறைந்த கவிதையும்
தாங்கி வரும் "ஞானச்சுடரே!" வாழ்க! வாழ்க!!
தோத்திரமே செய்து நிதம் தூய்மையான மணம் பரப்பி
சீக்கிரமே சைவம் வளர சிறப்பான பணி செய்கின்றாய்!
பாத்திரமறிந்து பிச்சை இடு என்று பண்புள்ளோர் சொன்னதுபோல்
காத்திரமாய் நீ மலர்ந்து ஒளிவீசி நிற்கின்றாய்!
சாத்திரமும் சரித்திரமும் உன்புகழே பேசி மகிழ
சந்ததமும் அருள் பரப்பிச் சுந்தரமாய் வாழியவே!

-இராசையா ஸ்ரீதரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய குறுகிய வரலாறு

– திரு யோ. சிவஉமாகரன் அவர்கள் –

சைவமும் தமிழும் தழைத்து செழித்து வளர்ந்து கொண்டிருக்கின்ற ஈழத் திருநாட்டிலே யாழ்ப்பாணம் ஒன்றாக விளங்குகின்றது. இந்தக் குடாநாட்டிலே வடக்கு நோக்கிச் செல்கின்றபோது நகரத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இருப்பது பரமேஸ்வராச்சந்தி. இந்தப் பரமேஸ்வராச்சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகச் சென்றால் நாச்சிமார் கோவில். இந்த இரண்டு சந்திகளுக்கும் இடையில் அமைந்திருப்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்தப் பல்கலைக்கழகமானது ஏறக்குறைய கி.முற்பட்ட காலத்தில் அதாவது நாமே அறியாத காலத்தில் யாழ் பரமேஸ்வராக் கல்லூரியாக விளங்கியது. யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளில் ஒன்றாக விளங்கியது எனலாம். ஏனென்றால் எம்முன்னோர்கள் கல்விகற்று விளங்கிய காலமாகும். இப்பொழுது எம்மவர்கள் கல்வி கற்கின்றார்கள். இந்தப் பரமேஸ்வராக் கல்லூரியின் சிறப்புக்கள் ஏராளமாக இருந்தாலும் பரமேஸ்வரன் ஆலயத்தினுடைய சிறப்புகள் ஏராளம். இந்தக் கல்லூரி பின்னர் யாழ்ப்பாணத்தில் சிறந்த ஒரு பல்கலைக்கழகமாக பெயர் பெற்று விளங்குவதை யாவரும் அறிவர். இந்தப் பல்கலைக்கழகத்தில் அனைத்து கல்விச் செயற்பாடுகளும் முன்னிலைப்படுத்தப்பட்டு வருவதை நாம் எமது கண்முன்னே காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது பல்கலைக் கழகம் என்பது பல கலைகளும் கற்று செல்கின்ற இடமே பல்கலைக்கழகமாக விளங்கு கின்றது.

இங்கு எத்தனையோ திணைக்களங்கள் இருக்கின்றன. எத்தனையோ மாணவர்கள் கல்விகற்று வெளியேறுகின்றனர். இன மத மொழி வேறுபாடின்றி ஒற்றுமையாக, மகிழ்ச்சி கரமாக அனைவருடனும் ஒன்றாகக் கலந்து செல்கின்ற ஒரு இடமாக இப்பல்கலைக்கழகம் விளங்குகின்றது. "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்று சொல்வார்கள். அதேபோல யாழ்ப்பாணத்தில் இக்கழகம் விளங்குகின்றது.

இப்பல்கலைக்கழகத்தினுள்ளே அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் ஓர் இடமாக இருப்பது பரமேஸ்வரன் ஆலயமாகும். இவ்வாலயமானது ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்னர் சைவப் பெரு வள்ளலார் சேர் பொன். இராமநாதன் அவர்களால் அமைத்த ஸ்ரீ பார்வதிஸமேத பரமேஸ்வரன் ஆலயம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதயம் போல் விளங்குகின்றது எனலாம். இவ்வாலயம் யாவருக்கும் இன்னருள் சுரக்கின்ற ஓர் தெய்வீகத் திருத்தலமாக விளங்குவதை நாம் காண்கின்றோம்.

இதேபோன்று ஈஸ்வரங்கள் ஈழத்தில் ஐந்து காணப்படுகின்றன. இந்த ஈஸ்வரங்கள் போலவே இப்பரமேஸ்வரனும் இன்று தன்தெய்வீக திருக்காட்சியுடன் அருள்பாலித்துக் கொண்டிருப்பதை அனைவரும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாலயம் பரமேஸ்வரனாக காட்சி கொடுக்கும் அற்புதக் காட்சியினை நாம் காண்கிறோம். இவ் ஆலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையிலே இலிங்கம் ஒன்று காணப்படுகின்றது. அதாவது இலிங்கத்தின் தோற்றம் இச்சிவனுடைய தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு ஆலயத்தினுடைய தோற்றமும் அதன் வரலாற்று சிறப்புக்களும் அதனுடைய மகிமையும் அங்கு எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் பெருமையினை எடுத்துக் காட்டுபவையாகவே உள்ளன. அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது போலவும், சிவன் இன்றி சக்தி இல்லை சக்தி இன்றி சிவன் இல்லை என்பதைப் போலவும் இவ் ஆலயங்கள் விளங்குகின்றன. இறை பக்தியும் ஒழுக்கமும் மிக மிக அருகில் காணப்படும். இவ்வேளையில் எம்பிரானின் சிந்தனையில் இருந்து நல்ல மனிதர்களாக வாழ்ந்து சிவகதி அடைவதற்கு இந்த ஆலயங்கள் நன்மை பயக்கின்றமை எனலாம்.

இவ்வாலயத்திற்கு பரமேஸ்வராக் கல்லூரியின் இயக்குனர் சபையுடன் இயங்கிவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆலய பரிபாலன சபையினரால் எச்சரீக்கை, பராக்கு, லாலி, மங்களம் வெளியிடப்பட்டதோடு திருவூஞ்சல் பாமாலையும் வெளியிடப்பட்டது. இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடப்பெற்று எம்பெருமானை துயிலிலிருந்து எழுப்புவதற்காக பாடப்படுகிறது. அதேபோல எம்பெருமானை ஊஞ்சலிலே வைத்து மகிழ்ச்சிகரமாக ஆட்டிப்படைக்கின்ற ஒரு நிகழ்வாகவே இப்பாடல்கள் பாடப்படுவது இத்தகை ஆக்கங்களிலே இறைபக்தி, இசைநயம் மட்டுமன்றி இலக்கிய நயமும் நன்கு செறிந்து விளங்குகிறது. இசை நடனம் மட்டுமன்றி தமிழ் வடமொழி இந்துசமய மரபுகள் முதலியவற்றிலும் நம் நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான கோயில்களுக்கு திருவூஞ்சல் பாமாலை மற்றும் காவியங்கள் பாடப்படுவதை நாம் காண்கிறோம். மேலும் முன்னைய பரமேஸ்வராக் கல்லூரியின் முதன்மை வித்துவானாக விளங்கிய க. வேந்தனார் அவர்களின் "பரமேஸ்வரம் எனப் பணிவோம்" எனும் பாடலும் "ஸ்ரீ பார்வதி ஸமேத பரமேஸ்வர" எனத் தொடங்கும் கீர்த்தனையும் இதற்குள் அடங்குகின்றன. இதுபோன்று எம் காதுகளிலே பலநூறு தோத்திரப் பாமாலைகள் உள்ளடக்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலயம் புகழ்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பரமேஸ் ஆலயத்தில் தினந்தோறும் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைவரும் பங்காளராகவும், பக்தர்களாகவும் ஆலயத்தில் தொண்டுகள் பல புரிந்து வருகின்றனர். தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற வேறுபாடு இல்லாமல் பல்கலையில் பயிலும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரும் அதிகாலையில் தமது கடமையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவருடைய பாதக்கமலத்தில் சிரசு வைத்து தமது கடமையை ஆரம்பிப்பார்கள். அப்படிப்பட்ட ஓர் ஆலயமாக இப்பல்கலைக் கழகத்தின் நடுவிலே இதயம் போல எமது மக்களைக் காத்து தன் இன்னருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாலயத்தில் அனைத்து விழாக்களும் மிக கோலாகலமாக நடைபெறுகின்றன. எம்பிரான் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தில் தலைவராக இருந்து இன்னருள் புரிவதை நாம் கண்களால் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

(தொடர்ச்சி...

– உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் –

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

நந்தி:

சிவாலய வழிபாட்டில் திருநந்தி தேவருக்கு முக்கிய இடம் உண்டு. நந்தியைப்பற்றிய வரலாறுகள் புராணங்களில் எடுத்தோதப்பட்டுள்ளன. நந்தியில்லாத சிவாலயம் சிவாலயமாகாது. நந்தியின் உருவம் சுவாமியின் சந்நிதியிலேயே இடம்பெறும். தென்னிந்திய கோவிலில் பிரகாரங்களைக் கடக்குந்தோறும் பிரமாண்டமான உருவங்களையுடைய பல நந்திகளைப் படிப்படியாகக் கடந்து உள்ளே செல்கிறோம். பூசைக்கு உரிய நந்திதேவர் இறைவன் சந்நிதானத்தில் இறைவனுக்கு நேரே அமர்ந்திருக்கக் காண்கிறோம். நந்தியின் உருவம் இடபத்தின் உருவத்தை நிகர்க்கும். சிவன் சந்நிதியில் அமர்ந்து காவல் புரிவது நந்தியின் பணி. தேவர்கள் இறைவனைக் காணத் திருக்கைலாயம் சென்ற வேளைகளில் நந்தியின் அனுமதிபெற்றே உள்ளே நுழைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இதே நிலைதான் திருக்கோவிலிலும் காணப்படும்.

நந்தி கணங்களுக்குத் தலைவன். வித்தியுன் மாலி என்னும் அரக்கனுக்கெதிராக கணங்களின் படைக்குத் தலைமை தாங்கி அணிவகுத்துச் சென்றதைப் புராணங்கள் கூறுகின்றன. வீரகன் உமையினால் மைந்தனாகக் கொள்ளப்படுவதும், அவனே நந்தியாவதும் புராணங்கூறும் வரலாறுகள். நந்தி, பதவியை வகுக்குமுன் சிலாதர் என்பவர்க்குப் புத்திரராய்ப் பிறந்து வேதங்களிலே வல்லவனாகிச் சிவபக்தி மேலிட்டுச் சிறு பிராயத்திலே கடுந்தவம் புரிந்தனன். நந்தியின் பக்தியை மெச்சிய இறைவன் அவன் வேண்டியவாறு சிவபக்தியினை அவனிடம் பெருகச் செய்தான். மீண்டும் மீண்டும் தவஞ்செய்து இறைவனிடம் சிவபக்தி ஒன்றினையே அவாவினான். இறைவனும் அவனது உள்ளன்பினை மெச்சி, தன் கணங்களுக்குத் தலைவனாய் நியமித்தனன். ஆகமங்களையும் சிவதருமம், சிவஞானம் ஆகியவற்றையும் மணிகங்கணன் வேண்டுகோட்கிணங்கி அவனுக்குப் போதித்த வரலாற்றை இலிங்கபுராணம் கூறியுள்ளது. சிவாகமங்களில் நந்திக்குரிய தேர்ச்சியினையே இப்புராணம் எடுத்துரைக்கின்றது.

விஷ்ணு:

சிவாலயங்களில் விஷ்ணு பரிவார தெய்வங்களுள் ஒன்றாக விளங்கக் காண்கிறோம். இங்கு விஷ்ணுவின் விக்கிரகங்களை நிறுவி வழிபடவேண்டிய முறையினைச் சிவாகமங்கள் எடுத்துக் கூறுகின்றன. விஷ்ணுவை நிறுவும் கருவறை வைஷ்ணவ மரபினைத் தழுவி அமைக்கப்படலாம் எனக் காரணாகமம் கூறும். வழிபாடும் வைஷ்ணவர்களின் பாஞ்சராத்திரமும் வைகாநசமும் கூறுவதுபோல் அமையலாம் எனவும் விதி கூறப்பட்டுள்ளது.

விஷ்ணுவின் உருவம் சிவாலயத்தில் விமானங்களிலும், கோபுரங்களிலும், தூண்களிலும் இடம்பெறக் காண்கிறோம். இவ்வாறு இடம்பெறும் உருவங்கள், விஷ்ணு சிவனின் பரிவார தெய்வம் என்னும் அடிப்படையிலேயே அமைகின்றன. இவ்வாறமையும் உருவங்களுள் சிவபிரான் மாலுக்குச் சக்கரமருளிய நிகழ்ச்சியினைச் சித்தரிக்கும் சிற்பமும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்டேசுவரர்:**

சைவாகம முறைக்கிணங்க அமையும் சைவவழிபாட்டில் விநாயகருக்கு உரிய முக்கியத்துவம் சண்டேசுவரருக்கும் உண்டு. கிரியைகள் தொடங்கும்பொழுது விநாயகரை வழிபடுதல் அவசியம். இன்றேல் கிரியை பூர்த்தியாகாது. சிவபூசை முடிவில் சண்டேசுவரரை வழிபடுதல் வேண்டும். இவ்வாறு வழிபடாதொழியின் சிவபூசை நிறைவு பெறாது. சிவபூசையின் பலனைச் சண்டேசுவர பூசையே அடைப்பிக்கும். சிவபுராணத்தில் கைலாசசம்ஹிதையில் சிவபிரானே இவ்வாறு குறிப்பிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. சிவபூசை முடிந்ததும் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பொருள்களான சிவநிர்மாலியம் சண்டேசுவரரிடம் சமர்ப்பிக்கப்படும். சிவபூசையில் சதா ஈடுபட்டு மெய்மறந்திருப்பவரைக் கைதட்டி வணங்கும் மரபு உண்டு. சண்டேசுவரரின் திருவுருவம், கருவறையை அடுத்து மிகவும் நெருங்கி இடம்பெற்றுள்ள சிறு தனிக்கோவிலொன்றில் இடம்பெறும். இதன் வாயில் கருவறையை நோக்கியவாறு இருக்கும். இது இறைவனை நெருங்கியிருந்து சிவபூசையில் ஈடுபட்டிருத்தலையே சுட்டுகின்றது.

எம்பிரான் சண்டிகேசுவரருக்கு அருளுங் கோலம் சண்டேசுவரானுக்கிரக மூர்த்தியாக உருப்பெற்று அறுபத்துநான்கு திருவுருவங்களுள் ஒன்றாய் விளங்குவது நோக்கற்பாலது.

**சூரிய சந்திரர்கள்:**

சிவனின் சந்நிதானத்தில் மகா மண்டபத்திலோ அல்லது அதற்கு வெளியேயுள்ள மண்டபத்திலோ வாயிலில் இரு பக்கங்களிலும் சூரியனும் சந்திரனும் பரிவாரத் தெய்வங்களாக இடம்பெறுவர். இவர்கள் இருவரது விக்கிரகங்களும் இறைவனை நோக்கியவாறே நிறுவப்படும். தினந்தோறும் பகலில் நிகழும் பூசை சூரிய பூசையுடனும், இரவில் நிகழ்வது சந்திர பூசையுடனும் தொடங்கும்.

**பைரவர்:**

பிரதான வாயிலையடுத்து எல்லா மண்டபங்களுக்கும் வெளியே வடகிழக்கிற்கும் வடக்குக்கும் இடையில் பைரவர் கோவில் இடம்பெறும். பைரவருக்கு க்ஷேத்திரபாலகர் என்னும் பெயரும் உண்டு. க்ஷேத்திரம் என்பது கோவிலைக் குறிக்குஞ் சொல். பாலகர் என்பது காப்பவர் எனப் பொருள்படும். பைரவர் கோவிற் காவலாளி. நாயை வாகனமாக உடைய இப்பரிவாரத் தெய்வத்தின் உருவம் பயங்கரம் வாய்ந்ததாக இருக்கும்.

**நவக்கிரகங்கள்:**

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது எனப் பெயர் பெற்றவை ஒன்பது கிரகங்கள். இக்கிரகங்கள் வழிபாட்டில் இடம்பெறுவன. பிரதிஷ்டை முதலிய கிரியைகளில் நவக்கிரக பூஜை நிகழுமாறு முன்னர் கூறப்பட்டது. தீங்குகளை நிகழாது தடுப்பதற்காக நவக்கிரக வழிபாடு நிகழ்வது வழமை. பெருந் தெய்வங்களுடன் தொடர்புபடுத்தப்படும்பொழுது இக்கிரகங்களின் நிலையும் உயர்ந்து விளங்குகின்றது. புராணங்கள் செவ்வாயை முருகனாகவும், புதனை நாராயணனாகவும் இவ்வாறே ஏனைய கிரகங்களைத் தனித்தனி தெய்வங்களுடன் தொடர்பு கூறுவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாது பெருந்தெய்வங்களே நவக்கிரக வழிபாடு நிகழ்த்தியதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

**சிவனடியார்கள்:**

சைவ வழிபாட்டில் சிவனடியார்க்கும் இடமுண்டு. இவர்கள் செயற்கரிய செய்த பெரியார்கள். இப் பெரியார்களின் வரலாறு கூறுவது பெரியபுராணம். இவர்களனைவரும் தென்னாட்டைச் சார்ந்தவர்கள். இவர்கள் நாயன்மார் எனவும் குறிப்பிடப்படுவர். நடராசர் சந்நிதியில் இவர்களுக்கு ஆலயம் நிறுவி நித்திய நைமித்திக வழிபாடு நிகழும். பெரியபுராணங் கூறும் விபரங்களுக்கேற்ப இவர்களது உருவங்கள் அமைக்கப்படவேண்டியன. இவர்கள் உயர்நிலை எய்திய தினங்களில் இவர்களுக்குத் திருவிழாக்கள் நிகழ்த்துதல் மரபு.

**ஏனைய பரிவாரங்கள்:**

அநந்தர், சூஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்னும் **அஷ்ட வித்தியேசுவரர்களும்**, நந்தி, மஹா, கானர், பிருங்கி, விநாயகர், விருஷயர், கந்தர், தேவிசண்டர் முதலிய **சிவகணங்களும்**, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமா, விஷ்ணு ஆகிய திக்கு பாலகர்களும், இவர்களது ஆயுதங்களும், சிவபெருமானின் **ஆவரண** தெய்வங்கள்; சிவபூசை நிகழும் பொழுதெல்லாம் இவ்வாவரண தெய்வங்களைப் பூசிப்பது இன்றியமையாதது. இவர்களுள் ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்குத் திருவுருவம் நிறுவுவது மரபில்லை. வசதியை ஒட்டியே இம்மரபு தோன்றியிருக்கலாம். ஆனால் உரிய இடங்களில் அவர்கள் மானசீகமாக நிறுவப்பட்டுப் பூசிக்கப்படுகின்றனர்.

பிரமாண்டமான சிவாலயம் முழுவதும் சிவாம்சம் பெற்றது; சிவமயமானது. தேவாலயத்தின் ஒவ்வொரு உறுப்புக்குமே அதிதெய்வம் உண்டு. சிவபிரானை நடுவிற்கொண்டு, கோவிலின் அம்சங்கள் எல்லாவற்றையும் அதிட்டித்து அதிதெய்வமாக இறைவனைச் சூழ்ந்து இடம்பெறும் தெய்வங்களும் பரிவாரத் தெய்வங்களே.

இப்பரிவாரத் தெய்வங்களின் பூசையில் பிரயோகம் பெறும் தியான சுலோகங்கள் இவர்கள் தோற்றத்தினை வருணிக்கின்றன. இவை அருச்சிப்பவர், அவர்களை மனக்கண்ணால் கண்டு அருச்சித்து வழிபடப் பெரிதும் துணை நிற்பன.

இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட பரிவாரங்கள் நாற்புறமும் தத்தமக்குரிய இடங்களில் புடைசூழ்ந்து இறைவனுக்குத் தத்தம் கடமைகளைச் செய்ய, நடுவே வீற்றிருக்கும் இறைவன் திருக்கோவிலுக்கு மட்டுமன்றிச் சராசரங்கள் அனைத்திற்கும் பேரரசனாகத் திகழ்ந்து, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களை ஆன்மாக்கள் மீதுகொண்ட கருணையினால் நிகழ்த்தும் பேருண்மையினையே சைவக்கிரியை முறை தெளிய வைக்கின்றது.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

292. பத்திர புஷ்பம் எப்படி எடுத்தல் வேண்டும்?

சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துச், சந்தியா வந்தனம் முடித்து இரண்டு கைகளையும் கழுவித் திருப்பூங் கூடையை எடுத்து, ஒரு தண்டு நுனியிலே மாட்டி, உயரப் பிடித்துக் கொண்டாயினும், அரைக்கு மேலே கையிலே பிடித்துக்கொண்டாயினும் திருநந்தவனத்தில் போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திர புஷ்பமெடுத்து, அவைகளைப் பத்திரத்தினாலே மூடிக்கொண்டு, திரும்பி வந்து, கால்களைக் கழுவிக் கொண்டு, உள்ளே புகுந்து, திருப்பூங்கூடையைத் தூக்கிவிடல் வேண்டும்.

293. பத்திர புஷ்பம் எடுக்கும்போது செய்யத் தகாத குற்றங்கள் எவை?

பேசுதல், சிரித்தல், சிவபெருமானுடைய திருவடிகளிலே அன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தல், கொம்புகள் கிளைகளை முறித்தல், கைகளை அரையின் கீழே தொங்க விடுதல், கைகளினாலே உடம்பையேனும் வஸ்திரத்தையேனும் தீண்டுதல் என்பவைகளாம்.

### திருமாலை கட்டுதல்

294. திருமாலை எப்படிக் கட்டல் வேண்டும்?

திருமாலைக் குறட்டைச் சலத்தினால் அலம்பி இடம்பண்ணித் திருப்பூங்கூடையிலுள்ள பத்திர புஷ்பங்களை எடுத்து அதில் வைத்துக்கொண்டு, மௌனியாய் இருந்து சாவதானமாக ஆராய்ந்து, பழுதுள்ளவைகளை அகற்றிவிட்டு, இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு முதலிய பலவகைப்பட்ட திருமாலைகளைக் கட்டல் வேண்டும்.

### சுகந்த தூபமிடுதல்

295. சுகந்த தூபம் எப்படி இடுதல் வேண்டும்?

வாசனைத் திரவியங்கள் கலந்து இடிக்கப்பட்ட சாம்பிராணி கொண்டு சுகந்த தூபமிடல் வேண்டும்.

### திருவிளக்கேற்றுதல்

296. திருவிளக்கு என்ன நெய் கொள்ளத் தக்கது?

திருவிளக்குக் கபிலைநெய், உத்தமத்தின் உத்தமம்; மற்றைப் பசுநெய் உத்தமத்தின் மத்திமம்; ஆட்டுநெய், எருமைநெய் உத்தமத்தின் அதமம்; வெள்ளெள்ளினெய் மத்திமத்தின் உத்தமம். மரக்கொட்டைகளினெய் அதமத்தின் அதமம்.

(கபிலை- கபில நிறமுடைய பசு; கபில நிறம்- கருமை சேர்ந்த பொன்னிறம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

297. திருவிளக்குத் திரி என்ன நூல் கொண்டு எப்படிப் பண்ணல் வேண்டும்?

தாமரை நூல், வெள்ளெருக்கு நூல், பருத்தி நூல் என்பவைகளுள் இருபத்தோரிழை யாலேனும் பதினாறிழையாலேனும், பதினான்கிழையாலேனும் ஏழிழையாலேனும் கர்ப்பூரப் பொடி கூட்டித் திரிபண்ணல் வேண்டும்.

298. மாவிளக்கு எப்படி இடுதல் வேண்டும்?

பகலிலே போசனஞ் செய்யாது, சனிப்பிரதோஷத்திலும் சிவராத்திரியிலும் செஞ்சம்பாவரிசி மாவினாலே அகல் பண்ணிக் கபிலநெய் மூன்று நாழியேனும் ஒன்றரை நாழியேனும் முக்கால் நாழியேனும் வார்த்துக் கைப்பெருவிரல் பருமையுடைய வெண்டாமரை நூல் திரியிட்டுத் திருவிளக்கேற்றல் வேண்டும்.

### தோத்திரம் - பாடல்

299. எந்தத் தோத்திரங்களை எப்படிப் பாடல் வேண்டும்?

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களை மனம் கசிந்துருகக் கண்ணீர் வார, உரோமஞ் சிலிர்ப்பப் பண்ணோடு பாடல் வேண்டும்.

### ஆனந்தக் கூத்தாடல்

300. ஆனந்தக் கூத்து எப்படி ஆடல் வேண்டும்?

உலகத்தார் நகைக்கினும் அதனைப் பாராது, நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர் பொழிய, மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கைகளைக் கொட்டித் தோத்திரங்களைப் பாடிக் கால்களைச் சதிபெற வைத்து, ஆனந்தக் கூத்தாடல் வேண்டும்.

### பூசைத் திரவியங்கள்

301. திருமஞ்சனத்திலே போடற்பாலனவாகிய திரவியங்கள் எவை?

பாதிரிப்பூ, தாமரைப்பூ முதலிய சுகந்த புஷ்பங்களும் செங்கழுநீர் கோஷ்டம், ஏலம், இலாமச்சம் வேர், வெட்டிவேர், இலவங்கப்பட்டை, சந்தனம், கர்ப்பூரம் என்னும் பரிமளத் திரவியங்களுமாம்.

302. பாத்தியத் திரவியங்கள் எவை?

வெண்கடுகு, இலாமச்சம் வேர், சந்தனம், அறுகு என்னும் நான்குமாம்.
(பாத்தியம்- பாதபூசை)

303. ஆசமயநீயத் திரவியங்கள் எவை?

சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகப்பூ மொட்டு, பச்சைக் கர்ப்பூரம் என்னும் ஆறுமாம்.

304. அருக்கியத் திரவியங்கள் எவை?

(அருக்கியம்- மந்திரநீர் இறைத்தல்) சலம், பால், தருப்பைநுனி, அக்ஷதை, எள், யவம், (கோதுமை), சம்பாநெல், வெண்கடுகு என்னும் எட்டுமாம்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| திரு யமுனாதீரன் | உடுப்பிட்டி | 500. 00 |
| இனேஷ் இன்பநாதன் | அமெரிக்கா | 500. 00 |
| K.V. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 2000. 00 |
| பெற்றா ஏசென்ஸ் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| த. சுரேஷ் அனுராதா | இணுவில் கிழக்கு | 1000. 00 |
| ந. கமல்ராஜ் தென்றலகம் | சங்கானை | 1000. 00 |
| அர்வின் புலிசேகரன் | கனடா (ஆவரங்கால்) | 5000. 00 |
| துரை ராசலிங்கம் | சுன்னாகம் | 1000. 00 |
| இ. சத்தியேஸ்வரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| சி. சிவகங்கை | இணுவில் | 10000. 00 |
| A. முரளிதரன் | திருநெல்வேலி | 9000. 00 |
| ஸ்ரீலெட்சுமி | தொண்டைமானாறு | 300. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | சொயிசாபுரம் | 500. 00 |
| ந. பாலசுப்பிரமணியம் | நீர்வேலி | 500. 00 |
| செ. முரளிதரன் | அச்சுவேலி | 1000. 00 |
| S. இராஜரட்ணம் | லண்டன் | 10800. 00 |
| திருமதி அ. சாவித்திரிதேவி | பருத்தித்துறை | 5000. 00 |
| அ. ஆறுமுகம் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| கந்தப்பு ஆறுமுகம் துன்னாலை மேற்கு | கரவெட்டி | 21000. 00 |
| நவரட்ணம் மல்லிகாதேவி குடும்பம் | மல்லாகம் | 5000. 00 |
| விமலா ஸ்ரீகாந்தன் | மல்லாகம் | 3000. 00 |
| S.M. பாலசுப்பிரமணியம் | மல்லாகம் | 1000. 00 |
| நவராஜா ஜனார்த்தனன் | நீர்வேலி | 1000. 00 |
| அ. கமலநாதன் | மட்டக்களப்பு | 2000. 00 |
| Dr சிவபாலன் | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| திரு இராசதுரை குடும்பம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| V. லஷ்மன் | லண்டன் | 5000. 00 |
| சந்திரப்பிரகாசம் யதுகுலன் ஆத்தியடி | பருத்தித்துறை (கல்விப்பணி) | 3000. 00 |
| சீனிவாசகம் இராமநாதன் | கொழும்பு | 2000. 00 |
| வெங்கடாசலம் | இடைக்காடு | 1000. 00 |
| செ. கேதீஸ்வரன் | மன்னார் | 10000. 00 |
| தர்ஷினி மகேந்திரம் | திருநெல்வேலி | 3000. 00 |
| Dr ஐங்கரன் கணேசராசா | U.K. | 5000. 00 |
| சின்னையா சிவமலர் | சுன்னாகம் | 10000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு துரைச்சாமி ஐயர் | மல்லாகம் | 1000. 00 |
| இராசநாயகம் சத்தியேஸ்வரன் | திருநெல்வேலி (பிரான்ஸ்) | 10000. 00 |
| K.P. ஆனந்தன் | திருகோணமலை | 1000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 3000. 00 |
| சி. செல்லையா | நெல்லியடி | 1000. 00 |
| தேவச்சந்திரன் தயாளினி | நவிண்டில் | 12000. 00 |
| திரு ரவீந்திரன் | வட்டுக்கோட்டை | 1500. 00 |
| திரு மயில்வாகனம் | சுன்னாகம் | 2500. 00 |
| க. ரவீந்திரதாஸ் சாமியன் அரசடி | கரவெட்டி | 1000. 00 |
| சி. மணிவாசகன் | கொழும்பு | 10000. 00 |
| ஸ்ரீதரன் புவனேஸ்வரி | கனடா | 300 டொலர் |
| சி. குமாரசாமி ஆசிரியர் | பத்தமேனி | 1000. 00 |
| கணபதிப்பிள்ளை சாந்தகுமாரி | கரவெட்டி | 5000. 00 |
| விஜிதன் பொன்னுச்சாமி | கனடா | 18100. 00 |
| வாணி ரெக்ஸ் | அப்புத்தளை | 2000. 00 |
| சண்முகலிங்கம் பத்மாவதி | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| கு. தியாகராசா | தெகிவளை 300 | அமெரிக்க டொலர் |
| கிருஷாந்தி பாலச்சந்திரன் | U.S.A | 10000. 00 |
| சிவசுப்பிரமணியம் அருட்செல்வராசா | ஏழாலை வடக்கு | 5000. 00 |
| பாலசுந்தரலிங்கம் ரதிவதனி மாயக்கை | புலோலி | 10000. 00 |
| திரு துரைராசலிங்கம் | இடைக்காடு | 1000. 00 |
| காந்திமதி தனலட்சுமி | குப்பிளான் (கனடா) | 5000. 00 |
| பாபு வெதுப்பகம் புன்னாலைக்கட்டுவன் | | 4மூடை அரிசி, 1மூடைதேங்காய் |
| தாவடி நடராஜா மூலம் சின்னத்துரை புஷ்பராஜா | U.K | 10000. 00 |
| சி. வல்லவைஅம்மா | கெருடாவில் | 2000. 00 |
| R. சிவகுமாரன் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| S. மங்கையற்கரசி | நாவற்குழி | 3000. 00 |
| கு. தியாகராஜசர்மா | நீர்வேலி | 1மூடை அரிசி 2000. 00 |
| சிவதாஸ் சதீசன் | | 5000. 00 |
| சி. பத்மநாதன் மூலம் வே. கமலநாதன் | பருத்தித்துறை | 4500. 00 |
| செ. சக்திதரன் | கொழும்பு- 13 | 1000. 00 |
| விமலன் அம்பிகா<br>விமலன் ஜெய்காஷ் } | கரவெட்டி | 10000. 00 |
| சண்முகலிங்கம் புனிதவதி குடும்பம் | கரணவாய் | 10000. 00 |
| அன்ரி அம்மா மூலம் சுப்பையா தியாகராசா | கனடா கெருடாவில் | 5000. 00 |
| வே. துரைராசசிங்கம் | இடைக்காடு | 1500. 00 |
| பு. தியாகராசா | கொழும்பு- 10 | 5000. 00 |
| திருமதி நல்லம்மா வடிவேலு (அமரர் வடிவேலு ஞாபகார்த்தம்) | U.K | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள் –

விடுதிக்கு 9.30 மணிக்குத் திரும்பி இரவு உணவு முடித்தவேளை மறுநாள் அதிகாலை செல்லக்கதிர்காமம் செல்ல உள்ளதாக அறிய முடிந்தது. இரவு உணவு முடித்ததும் படுக்கைக்குச் சென்றவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மனதிற் பட்டவற்றைக் கலந்துரையாடிய வண்ணம் இருந்தனர். ஆனால் என் மனமோ இத்தனை வசதிகள் வாய்ப்புக்கள் இருந்தபொழுதிலும் அந்தநாளைய காட்டுச் சூழலில் கதிர்காமத்தான் இருந்த கோலத்தில் அந்த முன் முகப்பை காட்டுத் தடிகளாலும் குழைகொடிகளாலும் அமைத்திருந்ததினை வியந்த வண்ணமே என் மனம் இருந்தது. அது சென்ற முறை திருவிழாவின் பொழுது அமைத்த பந்தர்போலும். இந்தமுறை புதிதாகச் செய்ய இருந்தார்கள் என்பதையும் அறியமுடிந்தது. அதுமட்டுமல்ல அந்தநாளைய பாணியில் எளிய பண்டிகை வேலையற்ற ஒரு மணிக்கோபுரமும் காட்சி தர அடியவர்க்கெளியவனான கந்தன் என்றும் தன் பாணியினை மாற்றாது அருள்புரியும் அற்புதம் இதுவென என் மனம் எண்ணியது. உண்மையும் அதுதான். இதனை எமது வைகாசிமாதச் சுடர் மிகத் தெளிவாக அற்புதமாக படமாக்கித்தந்ததனை மீட்டுப்பாருங்கள் உண்மை புரியும்.



ஆம்! இப்போ இங்கே அமைத்துக்கொண்டிருக்கும் இரும்புக்கேடர்களாலான விதானம் அதனைச் சூழ 50,000க்கு மேற்பட்ட மின்குமிழ் அலங்காரம். எம் பெருமானுக்கு ஓர் அழகிய சிற்பம் நிறைந்த தூபி அமைந்த மூலஸ்தானம் அமைப்பதற்கு இதன் செலவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தில் ஒரு பங்கு போதுமானது. ஆனால் காட்டினிற் கதிர்காமருக்கு காட்சி காட்டிய கதிர்காமத்தான் இன்றும் அதே பாணியில் இருந்து அருள அடியவர்கள் அவன் அருளில் திளைக்கும் வண்ணம் பழமை மாறா பண்டைய முருகனாக அவன் உள்ளது தனிச்சிறப்பு எனலாம். என்றிவ்வாறு என்னுள் வளர்ந்த கற்பனை நித்திரையாகி முடிய அதிகாலை வழமைபோன்று 4.30 மணிக்கு விழித்துவிட்டேன். என்னுடன் சேர்ந்து சிலர் விழித்திருந்தனர். அந்த நாட்களின் விடுதி அனுபவம் தூண்ட யாருக்கும் இடைஞ்சலில்லா வகையில் நானும் எம்முடன் சேர்ந்த அடியவர்களிற் சிலரும் காலைக்கடன்களை முடித்து குளித்து வர ஏனையவர்களும் விழித்து தம் கடமைகளிற்குச் செல்லவும் சரியாக இருந்தது. இதனால் கழிப்பறைகளிலும் குளிப்பறைகளிலும் உள்ள நெருக்கடிகளைத் தவிர்த்து எல்லோரும் காலை ஆகாரத்தை முடித்து செல்லக்கதிர்காமத்தை நோக்கிப்புறப்பட ஆயத்த மானோம். எம்மில் சிலர் காலை ஆகாரம் எடுக்காது விரதமனுட்டித்தும் இருந்தனர்.

சரியாகக் காலை 8.00 மணிக்கு ஊர்தியில் புறப்பட்டோம். ஊர்தி பறந்து செல்லக் கதிர்காம ஆலயச் சூழலில் நின்றது. வானளாவும் பெரும் காட்டுமரங்கள், மலை அடிவாரம் என்று சொல்வதற்குமில்லை. ஆனால் மேடுபள்ளமான கருங்கற் பாறைகள் சூழ்ந்த நில அமைப்பு. மாணிக்ககங்கை நெளிந்து வளைந்து ஓடுகிறது. அகலம் 8-10 மீற்றர்தான். கங்கைக் கரையோரத்திலும் கற்கள் பாறைகள் மலிந்தே இருந்தன. சில சில இடங்கள் குளிப்பதற்கு வசதியாக சமதரைக் கரையோரங்களை உடையதாக இருந்தது. நாம் சென்றவேளை கங்கையில் நீர் பாயவில்லை. சுமாரான நீரோட்டம். பகுதி பகுதியாக பெண்கள் வேறு ஆண்கள் வேறாக நீராடத் தொடங்கினோம். உண்மையில் எனக்குப் பனிக்காலங்களில் குளித்தால் நடுங்கும். நான் பயந்த வண்ணமே மலை அருவிநீர் குளிர்வேறு - உதறுமோ என மனப்பதறலுடன் ஏனைய அடியாருடன் சேர்ந்து முருகனுக்கு அரோகரா என்றவாறு இறங்கினேன். ஜில்லென்ற நீர் உடலுக்கு மிக இதமாக இருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறவுமில்லை நடுங்கவுமில்லை. திரும்பிப் பார்த்தேன் ஒரு வயோதிபத் தாய் மாணிக்கப்பிள்ளையாரைக் கும்பிட்ட திக்கை நோக்கினேன். ஆம்! அப்பொழுதுதான் செல்லக்கதிர்காமத்தில் மூலமூர்த்தி மாணிக்கப்பிள்ளையார் என்பதை என்னால் அறிய முடிந்தது.

ஒரு பக்கம் தரையோடு தளம் மறுபக்கம் மாணிக்க கங்கையில் காலூன்றியதுபோல கொங்கிறீற் தூண்களில் தளம் எழுப்பி அமைத்திருந்தனர். இதுவும் பெரிய படாடோபமான ஆலயமல்ல. ஆனால் எங்கள் சந்நிதியானின் பிள்ளையார் ஆலய அளவில் சிற்பம் நிறைந்த சிறு பண்டிகை கொண்ட கருவறையாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. அர்த்தமண்டபம் மகாமண்டபங்களில் பாதுகாப்பிற்காக வெள்ளிப் பைப்புகளினால் ஆன கிறாதிகள் போட்டிருந்தனர். கங்கையில் நீர் நிறைந்து ஓடும்பொழுது கிறாதிகளின் கீழ் மட்டம்வரை தண்ணீர் உயருமாம். அப்படித் தண்ணீர் உயரும்பொழுது ஆலய வளாகம் முழுவதும் நீரால் மூடப்பட்டிருக்கும். அந்தக் காலங்களில் பூசை வழிபாடுகள் இடம் பெறுவதில்லை என்றும் கூறினார்கள். எமது குழுவினர் அனைவரும் பூசை வழிபாட்டை முடித்துவிட்டு ஆலய முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தபொழுது ஆச்சிரம சுவாமி அவர்கள் கடந்த வருடம் கதிர்காம உற்சவகாலம் வருகை புரிந்ததாகவும் மிகுந்த அடியார் கூட்டத்தின் மத்தியில் மாணிக்கப்பிள்ளையாரை வழிபாடு செய்ததையும் கூறி அன்று நடந்த சம்பவத்தை எமக்குக் கூறினார்.


கடந்த வருடம் தாங்கள் கங்கையில் நீராடி பூசை வழிபாடுகளை இயற்றி முன்மண்டபத்தில் பபாசாமி உட்பட அமர்ந்திருந்தபொழுது காலை உணவிற்கான நேரம் கடந்துவிட்டது. பசி வயிற்றை நெருடியது. ஒரு காலமும் இல்லாத வகையில் பசிக்கின்றது. பிள்ளையார் என்ன செய்யப் போகிறார் என்ற சிந்தனையுடன் அமர்ந்திருந்த பொழுது இராணுவத்தில் கடமையாற்றும் ஓர் உயர் அதிகாரி பூசை வழிபாட்டை முடித்துவிட்டு வழிபாட்டிற்குரிய பழவகையடங்கிய பெரிய தட்டை சுவாமிகளிடம் கையளித்தார். அதனைக் கண்டவுடன் எமது பசியைப் போக்குவதற்கு பிள்ளையார் முன்வந்ததையிட்டு அவரது அருட்திறத்தைப் போற்றினோம். ஆனால் இன்று உற்சவம் இல்லாத காலம் நாம் வருகை புரிந்துள்ளோம். ஆலய சுற்றாடல் வெறிச்சோடிக் கிடக்கிறது. பிள்ளையார் என்ன செய்யப் போகிறார் என்ற சிந்தனைதான் எனக்கு என்று கூறினார். சுவாமி அவர்களைச் சூழ நாம் அமர்ந்திருந்தோம். அந்தச் சமயத்தில் ஆலய உட்பிரகாரத்திலிருந்து அங்கே கடமை புரியும் ஒரு பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் ஒரு அப்பிள் பழத்தை துண்டங்களாக நறுக்கி சுவாமி அவர்களிடம் கொடுத்தான். இச்செயற்பாடு எமக்கு அதிசயமாகத் தெரிந்தது. நாம் ஒருவரும் கேட்காமலே அப்பிள்பழத் துண்டுகள் எமது கைக்குக் கிடைத்தது. பிள்ளையாரின் கருணையே. அதனை வியந்த வண்ணம் ஆலயத்தின் சுற்றாடலை உற்றுக் கவனித்தேன்.

பிள்ளையாரின் வாசற்புறத்திற்கு நேராக எதிர்த்தாற்போல ஓர் பிரமாண்டமான கட்டிடத் தொகுதியும், பௌத்த தாதுகோபுரமும், அதனுள்ளே வெள்ளை வெளேரென்று அமைந்த அழகு மண்டபங் கொண்டு காளி ஆச்சிக்கும் ஓர் ஆலயம் அமைத்திருந்தனர். நாமும் அங்கு சென்று காளி ஆச்சியையும் புத்த பெருமானையும் தரிசித்து மீண்டு வந்து ஓர் அற்புதமான திருவருட் சூழலை பிரியமனமின்றி எமது தலயாத்திரையின் தேவைகருதி ஊர்திமூலம் 11.00 மணியளவில் மீண்டும் கதிர்காமத்தானிடம் வந்தோம். மதிய உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வானை மடத்தில் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்ததால் கந்தனை வணங்கி மடத்திற்குச் சென்றோம். அங்கும் சற்றுத் தாமதித்து இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டதால் அருகிலுள்ள ஆலய வளாகத்தில் தங்கியிருந்தோம். எங்கும் எங்கள் சிங்களச் சகோதரர்களே நிறைந்து காணப்பட்டனர். அவர்கள் தங்களுக்கேயுரிய பாணியில் வணங்கிக் கொண்டிருந்தனர்.



எமது முறை வந்தது. சாப்பிட வரும்படி அழைத்தனர். அங்கே எங்களுக்குப் பிரத்தியேகமான வகையில் வாழையிலை வழங்கப்பட்டது. எமது தொண்டர்கள் மோகனதாஸ் சுவாமிகள் உட்பட உணவு பரிமாற அனைவரும் அருந்தினோம். இச்சந்தர்ப்பத்தில் எமது சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணியின் பெருமையினையும் அருமையினையும் உணரமுடிந்தது. ஆச்சிரமப் பணியில் எல்லாச் சிரமங்களையும் தாங்கி தனியொரு மனிதனாக இயங்குபவன் அந்த ஆற்றங்கரையானே என்பதை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆவலுறுகிறேன். ஈற்றில் பரிமாறிய தொண்டர்கள் தட்டிலேயே உணவு உட்கொண்டனர். எல்லோரும் மீண்டும் எமது ஜாகைக்கு ஏகினோம். அங்கு சற்று இளைப்பாறியபின் மீண்டும் 3.00 மணியளவில் நேர்த்தியின் பொருட்டு மாவிளக்குப் போடுவதற்காக வள்ளியம்மன் வாசலுக்குச் சென்றோம். பெருந்தெரு கடந்து கதிர்காம வாசலை அடைந்தால் சற்றுத் தூரத்தில் வலது புறத்தில் ஓர் பெரிய பௌத்த ஆலயத்தின் அருகில் அமைந்துள்ளதே வள்ளியம்மன் ஆலயம். இதுவும் ஓர் சிறு ஆலயமே. வாசலில் மாவிளக்குப் போடுவதற்கு வசதியாக எமது வனிதையர்கள் கூட்டிப்பெருக்கி துப்பரவு செய்ய எம்போன்றவர்கள் மாவிளக்குப் போடுவதற்காக ஆயத்தமானோம். இதற்கென சுவாமிகள் சுத்தமான தினைமா (தாமே தயாரித்து) சுத்தமான பசுநெய், சுத்தமான தேன், பருத்தித்துணி, வாழைக்குலை (பழம்), பலாப்பழம் என்பவற்றைச் சேகரித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கு ஒன்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டேயாகவேண்டும். எமது சைவ மக்களின் நிவேதனப் பொருட்கள், ஓமத் திரவியங்கள், சமித்துகள், பழவகைகள் சுத்தமானவையாக இருப்பின் அவை விஞ்ஞான விளக்கங்களைத் தரக்கூடிய ஆயுர்வேத மூலிகை மருத்துவத்திற்குச் சமனான பலனைத் தரவல்லன. இதனாற்தான் நேர்த்தி முறைப்படி செய்வோரின் பிணிகள் நோய்கள் நீங்குகின்றன. ஓமத்திரவியங்கள் சமித்துக்களின் தூபத்தால் மழை பெய்கிறது. இவை மாசுறும்பொழுது சடங்குகள் பொய்யாகி விடுகின்றன. போலியாகி விடுகின்றன.



இப்படி மிகப் புனிதமாகத் தேடிப் பெறப்பட்ட பொருட்களைக் கொண்டு மாவிளக்கு ஏற்றி வழிபட்டுக்கொண்டிருக்கும் வேளை கொழும்பிலிருந்து வந்த ஓர் பௌத்த குருவும் வள்ளியம்மன் ஆலயத்தின் பிரதமகுருவும் எமது வழிபாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். அவர்களது பிரசன்னத்தில் எமக்கே உரிய பாணியில் மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில் வழிபாடு ஆரம்பமானது..... (தொடரும்...

## ஆன்மீகச் சிந்தனைகள்

* அபரிமிதமான உற்சாகத்துடனும் விடாமுயற்சியுடனும் மனதை ஒருமுறை உன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமானால் அதன் பின்னர் உன்னால் அடையமுடியாதது ஒன்றுமில்லை.

* மனம் என்னும் ஆற்றில் தொடர்ந்து கலப்படமேதுமின்றி தூய எண்ணங்கள் வீழ்ந்து கொண்டிருந்தால்த்தான் மனம் தூய்மை அடைந்திருகிறது என்று பொருள். ஆன்மீக சாதனை செய்வதே இதற்காகத்தான்.

-ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி வழங்கல்...



இதயத்தில் தூய்மை இல்லாதவன் இறைவனை அடையமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...




நியாயம் இருபக்கங்களிலும் இருக்கும். ஆனால் நீதி ஒருபக்கம்தான் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



உயர்ந்த எண்ணங்களை உடையோர் ஒருநாளும் தனித்தவராகார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிர்காம பாத யாத்திரை
ஆரம்ப நிகழ்வு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிப் பெருவிழா - 2014

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா 13-06-2014 வெள்ளிக்கிழமை காலையில் ஆச்சிரம மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பெருவிழா ஆரம்பமானது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்க, சிவகுரு பத்மநாதன் அவர்கள் (இளை. பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி) வாழ்த்துரை கூற, க.கு.க. சிவபாலன் அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு ச. லலீசன் அவர்களின் விசேட சொற்பொழிவும், தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் வைகாசிப் பெருவிழாவின் முத்தாய்ப்பு நிகழ்ச்சிகளாக அமைந்தன.









## 2014ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உரும்பராய் | 2500. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 5000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) | சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| மகாராணி புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வ. இராசையா | கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 1020. 00 |
| Dr சி. இராசலிங்கம் இளை வைத்திய பொறுப்பதிகாரி | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் மாலிசந்தி | அல்வாய் | 2000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் கரணவாய் | கரவெட்டி | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் | பொலிகண்டி | 2000. 00 |
| Dr E. கனகரெத்தினம் கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | ஆவரங்கால் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் துவாரகா வெதுப்பகம் | கரணவாய் | 2500. 00 |
| க. சொர்ணவடிவேல் | அளவெட்டி | 1000. 00 |
| லிங்கம் கூல்பார் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| தலைவர் மருதடி | மானிப்பாய் | 1000. 00 |
| ஜெகதீஸ்வரன் தர்மவதனி | லண்டன் | 10000. 00 |

# ஆற்றங்கரை வைபவம்

ஆற்றங்கரையின் தலமோங்கு ஆறுதிருமுகவன்
வீற்றிருக்கும் திருக்கோவில் செல்வச்சந்நிதியில்
ஏறுமயில் ஏறும் விளையாடல் விட்டு இறங்கி
வண்டாடும் மலர் சோலை மலி வீதிகளில்
பண்ணோடு இசை கூட்டி குமரன் திருப்புகழ் பாடி
எண்ணம் செயல் விட்டு கும்பிடுவார் கூட்டத்தில்
கண்டார் அறியாமல் கலந்து சிறந்திருப்பான்
ஆறுதலை வைத்த அப்பன் மனம் மகிழ
தேறும் உபதேச மந்திரம் விரித்துரைத்தான்
ஊறுதரும் நோய் பிணியால் வாடும் அடியவரின்
உளம் மகிழ அவை மாற்றி வாழ வைப்பான்
குன்றுகளை தான் இருக்கும் கோயிலாக கண்டவன்
குணமுடைய அடியவரின் நெஞ்சில் இடம் கொண்டவன்
குன்றும் சூரனும் கூறுபட வேல் எறிந்து
அன்று தேவரை சிறை மீட்டு வாழ வைத்தான்
கூறும் அடியாரின் பசி பிணிக்கு மருந்தாகும்
சோறு தருகின்ற அன்னதான கந்தன் அவன்
மாறிலா எந்நிதியும் தருகின்ற சந்நிதியான்
நீறுபட வினைகள் நிம்மதியாய் நீர் நிலம் வாழ
வள்ளி தெய்வானையுடன் இனிதிருப்பான் இங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஸ்ரீ கருட புராணம்



–திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்–

எமலோகத்தில் எமதர்மராஜனுக்கு உயிர்களின் பாவபுண்ணியங்களை எடுத்துரைப்பவர்கள் பன்னிரு சிரவணர்கள் ஆவர். அவர்களைப்பற்றி கருடாழ்வாருக்கு எழுந்த சந்தேகங்களை வினாக்களாக, அந்த சிரவணர்கள் யார்? அவர்கள் வைவஸ்வதாரியான எமலோகத்தில் இருக்கவேண்டிய அவசியமென்ன? பூலோகத்தில் மானிடர் செய்யும் பாவ புண்ணியங்களை அவர்கள் எவ்வாறு அறிகின்றனர்? போன்ற வினாக்களுக்கு விடையளிக்குமாறு பரந்தாமனைக் கேட்டு நின்றான். சர்வ வல்லமை படைத்த பரந்தாமரும் மனமுவந்து விளக்கம் அளிக்கிறார்.

சகல உலகங்களிலும் பிரளயம் ஏற்பட்டு எல்லா உயிரினங்களும் மடிந்து போயின. உலக நாயகனான மகா விஷ்ணு அனைத்து ஜீவராசிகளையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு எங்கும் நிறைந்திருந்த நீர் நிலையில் ஒரு பக்கம் ஆதிஷேசன்மீது யோக நித்திரை புரிந்து கொண்டிருந்தார்.

அச்சமயம் அவரது உந்திக்கமலத்திலிருந்து நான்முகனான பிரம்மதேவன் தோன்றினார். பின் அவர் மகாவிஷ்ணுவைக் குறித்து நீண்டகாலம் தவம் புரிந்தார். அவர் வேத சாத்திரங்களையும் படைப்புத் தொழிலையும் அறிந்து ஒவ்வொன்றையும் படைக்கத் தொடங்கினார்.

அவ்வாறு அவர் படைத்ததும் உருத்திரன் முதலான தேவர்களும் அஷ்டதிக்கு பாலகர்களும் தத்தம் தொழில்களைப் புரியத் தொடங்கினார்கள்.

தேவர்களில் மிகவும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்த எமதர்மராஜன் "ஜைமினி" என்ற நகரத்தை அடைந்து அதன் அரசனாகி ஜீவன்கள் செய்யும் பாவ புண்ணியங்களை

பொய் பேசுவோரிடமும், தூற்றித் திரிவோரிடமும் தொடர்பு கொள்ளாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய வேண்டும் என்று ஆராயத் தொடங்கினான். ஆனால் பாவபுண்ணியங்களை எமதர்மனால் அறிய இயலவில்லை. அதை எப்படியாவது அறியவேண்டும் என்று முயன்று பார்த்தும் முடியவில்லை. அதனால் யமதர்மன் பிரம்மதேவனிடம் சென்று தன் இயலாமை பற்றி முறையிட்டான். இந்நிலையில் உயிர்கள் செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்ப தண்டிக்கவும் காத்தருளவும் சக்தி இன்றி இருக்கிறேன். அதற்கான வழியைக் காட்டுங்கள் என்று வேண்டிக்கொண்டார்.

எமதர்மராஜனின் வேண்டுகோளைக் கேட்ட பிரம்மதேவன் தன் கைகளால் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து எறிந்தார். அதிலிருந்து பன்னிரெண்டு புதல்வர்கள் தோன்றினர். அவர்களே சிரவணர்கள்.

இந்தப் பன்னிருவர்களும் நீண்ட கண்களும் அழகிய தோற்றமும் உள்ளவர்கள். மனக்கண்ணால் யாவற்றையும் அறிந்துகொள்ளும் தனி ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் தம் ஆற்றலால் உலகில் பிறந்த ஜீவன்கள் அனைவரும் நினைப்பது, பேசுவது, செயல்புரிவது போன்று அவர்களின் எல்லாச் செயற்பாடுகளையும் அறிந்து கொள்ள வல்லவர்கள்.

சிரவணர்கள், எமதர்மராஜனுடன் இருந்து உயிர்கள் புரியும் புண்ணியங்களை அறிந்து எடுத்துக் கூறினார்கள். அதற்கேற்ப உயிர்களைத் தண்டிக்கவும் காத்தருளவும் முடிந்தது.

பூமியில் தம் இறுதிக்காலத்தை முடித்துக் கொண்டவர்கள் வாயு வடிவத்தில் எமதூதர்களால் எமபுரியை நோக்கி இழுத்துச் செல்லப்படுவார்கள். பாவம் புரிந்தவர்கள் கால்நடையாக இழுத்துச் செல்லப்படுவார்கள். புண்ணிய ஆத்மாக்களுக்கு இந்நிலையில்லை. பல்வகையிலும் தானதர்மங்கள் புரிந்த உத்தமர்கள் தரும மார்க்கமாகவே அவரவர் புரிந்த புண்ணியத்திற்கேற்ப அழைத்துச் செல்லப்படுவார்கள்.

உயிர்கள் தாம் பூமியில் வாழும் காலத்தில் சிரவணர்களை வழிபட்டால், அந்தச் சிரவணர்கள் இவர்கள்மீது கருணை கொள்வர். பூமியில் எல்லா உயிர்களும் சிரவணர்களைப் பூஜிப்பதில்லை. அவ்வாறு சிரவணர்களை வழிபடுபவர்களின் மனம் தெளிவுடனிருக்கும். எவ்வித பாவச் செயல்களுக்கும் அவர்கள் மனம் இடந்தராது.

பன்னிரு சிரவணர்களையும் வழிபடுவது மிக எளிதாகும். பன்னிரு கலசங்களில் நீர் நிறைத்து, அவற்றில் சோறு சமைத்து அந்தக் கலசங்களை அந்தந்த சிரவணர்களைக் குறித்து ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். பன்னிரெண்டு சிரவணர்களைப் பற்றிய தோற்றம் மற்றும் அவர்களின் குணநலன் வழிபாடு போன்றவற்றை அறிபவரின் பாவம் நீங்கும்.

இந்தச் சிரவணர்கள் யாருக்கெல்லாம் உதவுவார்கள்? என கருடன் பரமாத்மாவிடம் கேட்டான். இதற்கு பரமாத்மா பதில் கூறினார்.

புருடாத்தங்கள் நான்கு வகைப்படும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாகும். இந்த நான்கு வழிகளில் தர்ம காரியங்களைச் செய்தவர்கள் தர்ம மார்க்கத்தில் சிரமமின்றி யமபுரி செல்வார்கள். பொன்னையும் பொருளையும் பெரியோருக்கும், அறவோருக்கும் வழங்கியவர்கள், விமானத்தில் ஏறி யமபுரி செல்வார்கள். வேண்டுவோரின் வேண்டுதலுக்கு ஏற்ப விரும்பியவற்றைத் தருமம் செய்தவர்கள் குதிரைச் சவாரி செல்வர். மோட்சத்தை மட்டுமே அடைய வேண்டும் என்று உறுதி செய்துகொண்டு வேதம், சாத்திரம், இதிகாசம், புராணம் இவைகளை அறிந்து பக்தி செலுத்தி இறைவனின் நாமத்தையே நினைத்து பக்தி செலுத்துபவர்கள் தேவ விமானத்தில் ஏறி தேவர் உலகத்தை அடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமதர்மனிடம் சித்திரகுப்தன் என்ற கணக்கன் ஒருவன் இருக்கிறான். அவன் பன்னிரெண்டு சிரவணர்கள் மூலம் உயிர்களின் பாவபுண்ணியங்களை அறிந்து யமதர்மராஜனுக்கு அறிவித்து, அதற்காக ஆன்மா அடைய வேண்டிய பலன்களைப் பற்றியும் கூறுவான். அதற்கான தண்டனைகளை நிறைவேற்றி வைப்பவர்கள் எமதூதர்கள்.

ஒருவர் செய்த பாவ புண்ணியங்களின் தன்மைக்கேற்பவே தண்டனை நிர்ணயிக்கப் படுகிறது. உயிர்கள் எந்த உறுப்பால் தவறு செய்கிறதோ அந்த உறுப்பு மூலமாகவே தண்டனையை அடையவேண்டும். வாக்கால் செய்த செயல்களுக்கு வாக்காலும், மனதால் செய்தவற்றுக்கு மனத்தாலும், உடலால் செய்தவற்றுக்கு உடலாலும் அனுபவிக்க வேண்டும்.

அடியார்களையும், துறவிகளையும் போற்றி மரியாதையுடன் உபசரிப்பாருக்கும், பெரியோர்கள் மூத்தவர்களை மதித்துப் போற்றுதல், வேத இதிகாச புராணங்களை பக்தியோடு படித்தல், கேட்டல் போன்ற புண்ணிய செயல்களைப் புரிந்தவர் தம் வாக்கு வன்மையால் நன்மை பெறுவர். அவ்வாறின்றி பெரியோர்களை அவமதித்தல், தூற்றுதல் போன்ற பாவகாரியங்களைப் புரிந்தவரின் வாயிலிருந்து புழுக்கள் வெளிவந்துகொண்டே இருக்கும்.

புனிதப் பயணம் மேற்கொண்டவர்கள், புண்ணிய நதிகளில் நீராடியவர்கள், இறைவனை வழிபடும் நல்லுபதேசம் செய்யும் பௌராணிகர்கள், குருமார்கள் போன்று தெய்வீக விடயங்களை உபதேசிப்பவர்கள், முனிவர்கள் போன்றவர்களை வணங்கியவர்கள் தங்களுக்கு விருப்பமான சரீரத்தைப் பெற்று மகிழ்வர்.

பிற பெண்களைச் சேர்ந்தவர், பிற உயிர்களைத் துன்புறுத்தியவர்கள் கொடூரமான உடலைப் பெற்றுத் துன்புறுவர்.

இறைவழிபாடு செய்தவர்களும், தியானம் வேள்வி புரிந்தவர்களும், பிறருக்கு நன்மையே செய்தவர்களும், ஊருக்கு உழைத்த உத்தமர்களும், உலக நன்மைக்காக தம்மை அர்ப்பணித்தவர்களும் எப்போதும் மகிழ்ச்சி கொள்ளும் மனமுடையவர்களாக இருப்பார்கள். அவ்வாறின்றி மற்றவருக்கு தீமையே நினைத்துக் கொண்டிருப்பவரும் எப்போதும் வேதனைப்படும் மனமுடையவர்களாகவே இருப்பார்கள்.

இதனால் இறந்தவர்களுக்கு, உரியவர்கள் அன்னதானம், தீபதானம், கோதானம், பூதானம் முதலான தானங்களைச் செய்தல் வேண்டும்.

அன்னதானம் புரிவதால் இறந்தவரின் உயிர் தமது எமலோகப் பயணத்தின் போது பசிதாகம் எடுக்காமல் செல்லும். தீபதானம் செய்தால் இருள் நிறைந்த இடத்திலும் வழி தெரிந்து துன்பமின்றிச் செல்லும். கார்த்திகை மாதத்தில் சுக்கிலபட்ச சதுர்த்தியில் தீபதானம் செய்தாலும் விருஷோற்சர்க்கம் செய்தாலும் அந்த ஜீவன் மேலுலகில் நற்கதி அடையும். நீர் குடத்தை தானம் செய்வதால் எமதூதர்கள் திருப்தி அடைவார்கள். ஆனால் தாம் இழுத்துச் செல்லும் உயிர்களை துன்புறுத்தமாட்டார்கள்.

பரந்தாமன் கருடாழ்வாருக்கு "பாத்தானம்" செய்வது குறித்து விவரிக்கிறார். குடை, தண்டம், வஸ்திரம், மோதிரம், நீர்குடம், ஆசனப்பலகை, சோறு, வழிபாட்டிற்குரிய பொருட்கள், பூணூல், தாமரச்செம்பு, அரிசி போன்றவற்றை தகுதி உடையவர்களுக்குத் தானம் செய்வதே பாத்தானம் எனப்படும் என விளக்கமளிக்கிறார்.

பறவைகளுக்கு அரசனான கருடன், ஸ்ரீமத் நாராயண மூர்த்தியை வணங்கி பாவம் செய்தவர்கள் அடையக்கூடிய நரகங்களைப் பற்றி விரிவாகக் கூறுமாறு வேண்ட அவரும் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் செய்தவர்களுக்கு எமதர்மராஜனால் ஏற்படுத்தப்பட்ட இடமாய் விளங்குவது நரகங்களாகும். நரகங்கள் ஒன்று, இரண்டல்ல, எண்பத்து நான்கு இலட்சம் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை பாவம் செய்தவர்களைத் தண்டிக்கும் இடமாகும். இவற்றில் இருபத்தெட்டு நரகங்கள் மிகவும் கொடியனவாகும். அவை:

| | |
|---|---|
| 01. தாமிஸ்ரம் | 15. அந்தாமிஸ்ரம் |
| 02. ரௌரவம் | 16. மகாரௌரவம் |
| 03. கும்பிபாகம் | 17. காலசூத்திரம் |
| 04. அசிபத்திரம் | 18. பன்றிமுகம் |
| 05. அந்தகூபம் | 19. கிருமிபோஜனம் |
| 06. அக்கினிக்குண்டம் | 20. வஜ்ஜிரகண்டம் |
| 07. சான்மனி | 21. வைதரணி |
| 08. பூயோதம் | 22. பிராணரோதம் |
| 09. விசாஸனம் | 23. லாலாபட்சம் |
| 10. சாரமேயாதனம் | 24. அவீசி |
| 11. பரிபாதனம் | 25. சஷாரகர்த்தமம் |
| 12. ரகேஷாகணம் | 26. ஆலரோதம் |
| 13. தந்தஆகம் | 27. வடரோதம் |
| 14. பர்யாவர்த்தனகம் | 28. ஆசிமுகம் |

இவை போன்ற கொடிய நரகங்கள் எமதர்மராஜனுடைய அதிகாரத்தின் கீழ் உள்ளன. அங்கு பாவம் செய்தவர்களுக்கு ஆயுதபயம், விலங்கு பயம் போன்ற பலவகையான பயங்களும், துன்புறுத்தல்களும் உண்டு.

**தாமிஸ்ரம் என்ற நரகம்:-**

பிறர் மனைவி, குழந்தை போன்றவர்களை அபகரித்தவர்களுக்கு பொன், பொருள் முதலானவற்றை கொள்ளையடித்தவர்களுக்கானது.

**அந்தாமிஸ்ரம்:-**

கணவன் அல்லது மனைவி இவர்களில் ஒருவர் மற்றவரை வஞ்சித்து வாழ்ந்தவர் அடையுமிடம். கண்கள் இருள் அடைந்து மூர்ச்சித்து விழுமிடமாகும்.

**ரௌரவம் நரகம்:-**

பிறர் வாழ்க்கையைக் கெடுத்து வலுக்கட்டாயமாக பொருள்களைப் பறித்து தாம் வாழ்ந்தால் போதுமென்று சுயநலக்காரர்கள் அடையுமிடம்.

**மகா ரௌரவம் நரகம்:-**

இவ்விடத்தில் குரு என்ற ஒருவகை மான்கள் உண்டு. பயங்கர தோற்றமுடைய மிருகங்களால் பாவிகள் துன்புறுத்தப்படுவர்.

**கும்பிபாகம்:-**

தன் சுயநலத்திற்காக உயிர்களை வதைத்தும், அவற்றைக் கொடுமைப்படுத்தியும் வாழ்ந்து பின்னர் இறந்தவர் அடையும் நரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கால சூத்திரம்:-**

பெற்றோரையும், வயதிலும் அறிவிலும் முதிர்ந்த பெரியோர்களையும் அவமதித்தும், துன்புறுத்தியும் வந்தவர்கள் அடையும் நரகம்.

**அசிபத்திரம்:-**

தெய்வங்களை நிந்தித்தும் தமக்குரிய தர்மங்களை கடைப்பிடிக்காத அதர்மம் புரிந்தவர்கள் அடையக்கூடிய நரகமாகும்.

**பன்றி முகம்:-**

அநியாயமாக பிறரைத் துன்புறுத்தியும் ஆணவத்தால் அநீதிகளையும் கொடுமைகளையும் புரிந்த அக்கிரமக்காரர்களுக்குரிய இடமாகும்.

**அந்த கூபம்:-**

துரோகம், கொலை போன்ற கொடிய செயல் புரிந்தோர் அடையக்கூடிய நரகமாகும்.

**கிருமி போஜனம்:-**

தான் மட்டும் உண்டு பிறரைத் துன்புறுத்தியும், சுயநலத்துடன் வாழ்ந்து, பக்தியின்றி, நியமத்துடன் வாழாமல் ஒழுக்கமில்லாமல் வாழ்ந்து இறக்கும் பாவிகள் அடையுமிடம்.

**அக்கினிக் குண்டம்:-**

சுயநலக்காரர்களாக பிறர் உரிமைகளையும் உடைமைகளையும் தன்னுடைய வலிமையில் பலாத்காரமாகப் பறித்து வாழும் பாவிகள் அடையும் நரகம்.

**வஜ்ஜிர கண்டம்:-**

ஒழுக்கம் தவறியவரும் சேரத்தகாத ஓர் ஆணையோ, ஒரு பெண்ணையோ கட்டித் தழுவி மோகம் கொண்ட வெறியர்கள் தண்டிக்கப்படும் நரகமாகும்.

**சான்மணி:-**

நல்லது கெட்டது, உயர்வு தாழ்வு என்று தரமறியாது யாருடன் வேண்டுமானாலும் எப்படியும் கூடி மகிழும் காமவெறி பிடித்தவர்கள் அடையும் நரகமாகும்.

**வைதரணி நரகம்:-**

அதிகார வெறியாலோ, கபட வேடத்தாலோ, வஞ்சக எண்ணத்தாலோ நல்வழிக்கு மாறாக அதர்மத்திற்குத் துணை புரியும் அதர்மவான்கள் அடையக்கூடியது.

**பூயோதம்:-**

கூச்சமில்லாது இழி மகளைக் கூடியும், ஒழுங்கீனத்துடனும் எந்த ஒரு இலட்சியமின்றியும் விலங்குகள் போன்று சுற்றித்திரியும் கயவர்கள் அடையக்கூடிய நரகம்.

**பிராண ரோதம்:-**

விலங்குகளைத் துன்புறுத்தியவரும், கொலை புரிந்த கொடுமைக்காரரும் தண்டிக்கப்படுமிடமாகும். (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருத்தணி (ஐந்தாவது படைவீடு)

– வல்வையூர் அப்பாண்ணா –

"பாத கம்பல செய்தவ ராயினும் பவங்கள்
ஏதும் வைகலும் புரிபவ ராயினும் எம்பால்
ஆத ரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமிய ரெவற்றினு மிக்கார்"

என முருகப்பெருமான் வள்ளியம்மனுக்கு எடுத்துக் கூறியதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

வெகு தொலைவிலிருந்த போதிலும் யாரொருவர் திருத்தணியின் பெயரைக் கேட்டாலும், சொன்னாலும், நினைத்தாலும், இதன் திசையை நோக்கித் தொழுதாலும் அவர்கள் பல பிறவிகளிலும் செய்துள்ள வினைகளெல்லாம் நீங்குவதோடு அவர்களுக்கு மட்டற்ற இன்பமும் கிட்டுமென தணிகை புராணம் விளக்குகிறது.

மேற்குறித்த கூற்றினை மெய்ப்பிப்பதுபோல அருணகிரிநாத சுவாமிகளும் தமது தணிகைத் திருப்பதியில் "தூரத் தொழுவார் வினைசிந்திடு தணியம் பதி" எனச் சிறப்பித்தது மட்டுமல்லாமல், "பணிதிகழ் தணிகையில் உறைவோனே", "வயல்பதி நயம்படு திருத்தணி", "மெய்தவத்தவர் வாழ் திருத்தணி" எனத் திருத்தணியையும், திருத்தணி முருகனையும் சிறப்பித்து 65 திருப்புகழ் பாடியுள்ளார்.

எப்படி அருணகிரிநாதர் தீராக் காதலுடன் 65 திருப்புகழ் பாடினாரோ அதேபோல திருத்தணி முருகனை நினைந்து நினைந்து உருகி அப்பெருமானையே ஞான தேசிகனாகக் கொண்டு வாழ்ந்த திருவருட் பிரகாச வள்ளலார் எனும் ஜோதி இராமலிங்க அடிகளாரும் தமது திருவருட்பா- பிரார்த்தனை மாலையில் இவ்வாறு பாடியுள்ளார்.

"சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந் திகழ்கடம்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களுந் தாமரைத் தாள்களுமோர்
கூர்கொண்ட வேலு மயிலுநற் கோழிக் கொடியுமருட்
கார் கொண்ட வன்மைத் தணிகா சலமுமென் கண்ணுற்றதே"

திருத்தணி மலையின் அடிவாரத்திலிருந்து 365 படிகள் ஏறி மேலே கோவிலுக்குச் செல்ல வேண்டும். வருடத்தின் 365 நாட்களையும் குறிக்கும் இத்திருத்தணிப் படித்திருவிழா மிகப் பிரசித்தமானது. வருடத்தின் இறுதி நாளில் (டிசம்பர் 31) மேலே திருத்தணி கோவிலில் தீபம் ஏற்றியதும் அடிவாரத்தின் முதற்படிக்கட்டில் ஆரம்பித்து ஒவ்வொரு படிக்கட்டிலும் தேங்காய் உடைத்து, தீபம் ஏற்றி, திருப்புகழ் பாடி ஆராதித்து 365 படிகளையும் தாண்டிச் செல்ல மறுநாள் (ஜனவரி 1) காலையாகிவிடும். 31.12.1917இல் இரவில் ஆரம்பித்து 01.01.1918 காலையில் நிறைவுபெற்ற இத் திருப்படித் திருவிழாவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து வைத்தவர் வள்ளிமலைச் சுவாமிகளே. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட திருப்படித் திருவிழா தலைமுறை தலைமுறையாக இன்றுவரை தொடரப்பட்டு வருகிறது.

இதே வள்ளிமலை சுவாமிகளின் வாழ்நாளின் பிற்பகுதியில் திருத்தணி முருகன் நிகழ்த்திய அற்புதம் மிகச் சுவையானது. காலைவேளைகளில் சுவாமிகள் தனது பக்தர்களுடன் திருத்தணி மலையைத் திருப்புகழ் பாராயணத்துடன் வலம்வரும்போது இடையிடையே "வேலும்மயிலோனுக்கு அரோகரா" என அடியார்களுடன் ஆனந்தக் குரலெழுப்புவார். அடியார் கூட்டத்திலிருந்த ஓர் அன்பர் பசி பொறுக்கமாட்டாதவராக "இட்லி காப்பிக்கு அரோகரா" என முழங்கினார். சிறிது தூரம் சென்றதும், பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்ற எண்ணிய முருகன், மலைப்பாதையில் ஒரு வயோதிபர் வடிவில் வந்து காலைச் சிற்றூண்டி அளித்து மறைந்ததாக ஸ்தல வரலாறு கூறுகிறது.

மேலே குறிப்பிட்ட ஆங்கிலப் புதுவருடத் திருப்படித் திருவிழாச் சிறப்புப் போன்று, தமிழ்ப் புத்தாண்டு தினத்தில், கீழேயுள்ள ஆறுமுகசாமி கோவிலிலிருந்து "முருகனுக்கு அரோகரா" எனும் கோஷத்துடன் பக்தர்களால் சுமந்து செல்லப்படும் 1008 பாற்குடங்களால் மலைமேலுள்ள மூலவருக்கு நடைபெறும் அபிஷேகம் கண்கொள்ளாக் காட்சியாகும் என நேரில் பார்த்து அனுபவித்த அன்பர்கள் கூறினார்கள்.

இந்த இடத்தில் இன்னொரு குறிப்பும் பொருத்தமானது எனக் கருதுகிறேன். "மருதமலை மாமணியே" எனும் திரைப்படப் பாடலைப் பாடிய மதுரை சோமு, வருடந்தோறும் டிசம்பர் 31ஆம் தேதி இரவு தொடங்கி மறுநாள் அதிகாலை 4.30 மணிவ்ரை இடைவிடாது பக்திப் பாடல்களைப் பாடி பக்தர்களைப் பரவசப்படுத்துவார். தனது ஆயுட்காலம் முழுவதும் இதனைக் கடைப்பிடித்து வந்தார் மதுரை சோமு.

சூரன் முதலான அசுரர்களோடு செய்த பெரும் போரும், வள்ளியம்மனின் சுற்றத் தவர்களான வேடர்களோடும் புரிந்த சிறு போரின் சீற்றம் தணிந்து முருகப்பெருமான் இங்கு வந்தமர்ந்ததனால் இந்த ஸ்தலம் "செருத்தணி" (செரு- கோபம், தணி- தணிதல்) எனும் காரணப் பெயர் பெற்று, பின்னர் மருவி "திருத்தணி" என்றாயிற்று. இதனையே கந்தபுராணம்,

"செங்கண் வெய்யசூர்ச் செருத்தொழி லீனுஞ்சிலை வேடர்
தங்க ளிற்செயுஞ் செருத்தொழி லினுந்தணிந் திட்டே
இங்கு வந்தியாம் இருத்தலினால் "செருத்தணி" யென்றோர்
மங்க லந்தரு பெயரினைப் பெற்றதிவ் வரையே"

என்று முருகவேள் வள்ளியம்மனுக்குக் கூறியதாக மொழிகின்றது. முருகவேள் இங்கு சாந்தமாகக் கோயில் கொண்டிருப்பதால் இங்குவரும் பக்தர்களுக்கும் அமைதியைத் தந்தருளுகிறார். இதனாலேயே சூரசம்ஹாரம் இங்கு நடைபெறுவதில்லை. கந்தசஷ்டி ஒரு ஐதீக விழாவாகக் கொண்டாடப்பட்டு ஒரு யந்திர பூசையுடன் மட்டுமே நிறைவுக்கு வருகிறது.

வேலூருக்கு அருகே "திருவலம்" எனும் சிவஸ்தலம் அமைந்துள்ள ஊரிலிருந்து சுமார் 10 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது "வள்ளிமலை". (வள்ளி மலை முருகன் ஸ்தலம் பற்றிய முழு விபரமும் பின்னர் ஒரு கட்டுரையில் பார்க்கலாம்) வள்ளிமீது காதல் கொண்ட முருகனின் திருவிளையாடல்கள் அனைத்தும் நடைபெற்ற இடம் இந்த வள்ளிமலையாகும். மாசி மாதத்து பூச நட்சத்திரத்துடன் கூடிய நன்னாளில் முருகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி திருமணம் திருத்தணியில் நடந்தேறியது. திருத்தணியை நோக்கித் தினமும் வரும் பல நூற்றுக்கணக்கான பால் காவடிகளும் புஷ்பக் காவடிகளும் சூழ வரும் பக்தர்கள் "வேல் முருகனுக்கு அரோகரா" "ஆறுமுகனுக்கு அரோகரா", "கந்தனுக்கு அரோகரா" என ஆனந்தக் குரலெழுப்பும் காட்சி அனைவரையும் பக்திப் பரவசத்தில் மெய்சிலிர்க்க வைக்கும் தன்மையதாகும். பக்தர்கள் நேர்த்திக்காக பல்வேறு வகையான காவடிகளை எடுத்து வந்தாலும், நீண்ட தடியில் ஒரு புறம் புஷ்பமும், மறு முனையில் அர்ச்சனைப் பொருட்களும் கட்டி எடுத்துவரும் காவடி திருத்தணியில் பிரசித்தமானது.

சுமார் 4000 வருடங்கள் பழமை வாய்ந்த இத் திருக்கோவில் திருத்தணி நகரின் நடுவே 400 அடி உயரத்தில் தணிகைமலையில் அமைந்துள்ளது. இம்மலையின் இரு புறமும் வேறு மலைத் தொடர்களும் காணப்படுகின்றன. தணிகைமலையின் அடிவாரத்தில் முருகவேள் தனது சிவபூசைக்காக வரவழைத்த குளம் "கங்கா தீர்த்தம்" என அழைக்கப்படுவதாக புராண வரலாறு கூறுகிறது. தணிகை மலையின் உச்சியில் நான்கு பிரகாரங்களுடன் கூடிய எழில் மிகுந்த ஆறுமுகப் பெருமானின் சந்நிதிக்குச் செல்ல, மலை அடிவாரத்திலிருந்து 365 படிகள் மேலேறிச் செல்ல வேண்டும். (மலையின்மீது கார், உந்துருளிகள், பேருந்துகள் செல்வதற்கு இலகுவான தார்சாலை தனியாக உள்ளது) வருடத்தின் 365 நாட்களையும் குறிக்கும் இந்த 365 படிகளையும் கடந்து நாம் மேலேறினால் தேரோடும் பெரு வீதியான நான்காம் பிரகாரத்தை அடையலாம். இந்தப் படிக்கட்டு வழிப்பாதையில் "பிரமசுனை" என வழங்கப்படும் பிரம்ம தீர்த்தமும், அதனருகே விநாயகர், பரமலிங்கம் சந்நிதிகள் உள்ள பரமேஸ்வரர் ஆலயமும் உள்ளன. நான்காம் பிரகாரத்தில் வாகன மண்டபமும், கல்யாண மண்டபமும் உள்ளன. இந்த ரதவீதியின் கிழக்குப் பகுதியில், தினந்தோறும் பூசை வேளைகளிலும் உற்சவ காலங்களிலும் முஸ்லீம் மக்கள் வாத்தியம் வாசிக்கின்ற "நவாப் வாத்திய மண்டபம்" உள்ளது. இந்த மண்டபம் "காதர்" எனப்படுகின்ற ஒரு இஸ்லாமியப் பெருமகனால் கட்டப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

நான்காம் பிரகாரத்தின் கிழக்கு வாசல் வழியாக சில படிகள் ஏறிச்சென்று மூன்றாம் பிரகாரத்தை அடையலாம். இம் மூன்றாம் பிரகாரத்தின் கிழக்குப் பக்கத்தில் துவஜ ஸ்தம்ப விநாயகரையும் (கொடிமர விநாயகர்), ஐராவதம் எனும் யானையையும் (கொடிமரம் அருகே நந்தி இருப்பதைப் போன்று), தெற்குப் பக்கத்தில் உமாமகேஸ்வரர் சந்நிதியையும் மேற்குப் பக்கமாக உச்சிப்பிள்ளையார் சந்நிதியையும் கண்டு தரிசிக்கலாம். இந்த "ஐராவதம்" மூலவர் சந்நிதியை நோக்காது கிழக்கு நோக்கியபடி உள்ளது. இங்கு மயிலுக்குப் பதிலாக யானையே முக்கிய வாகனமாகத் திகழ்வதும் தனிச் சிறப்பான அம்சமாகும். முருகன் தேவ சேனையைத் திருமணஞ் செய்த வேளையில் இந்திரனால் கொடுக்கப்பட்ட சீதனப் பொருள்களில் இரண்டு முக்கியமானவை. ஒன்று: மேற்குறித்த "ஐராவதம்" எனும் யானை. இரண்டு: பெரிய சந்தனக் கல். (விபரம் அடுத்த பந்தியில்)

மூன்றாம் பிரகாரத்திலிருந்து இரண்டாம் பிரகாரத்திற்குச் செல்லும் வாயிலின் தென்புறம் ஸ்ரீகாமாட்சியம்மன் சமேத ஸ்ரீ ஏகம்பேஸ்வரர் சந்நிதி, மேற்குப்புறமாக ஆறுமுகசாமி சந்நிதி, வடபுறம் ஸ்ரீ குமரேச்வர லிங்க சந்நிதி ஆகியன உள்ளன. தேவசேனைக்கு இந்திரனால் கொடுக்கப்பட்ட பெரிய சந்தனக் கல் இப் பிரகாரத்தில் யாகசாலைக்கு எதிரில் உள்ளது. இந்தச் சந்தனக் கல்லில் அரைக்கப்படும் சந்தனமே முருகப் பெருமானுக்குச் சாத்தப்பட்டு, பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுகளாக உபயோகத்திலிருக்கும் இச் சந்தனக்கல் தேய்வுறாது இருக்கும் அதிசயத்தை திருத்தணி முருகனைத் தரிசிக்கச் செல்வோர் அவசியம் ஒருமுறை பார்க்கவேண்டும். இப்பிரகாரத்தின் கிழக்கில் உற்சவ மூர்த்திகள், ஆபத்சகாய விநாயகர், வீரபத்திரர், அருணகிரிநாதர், நவவீரர்கள் மற்றும் சூரியபகவான் ஆகியோர் சந்நிதிகளைத் தரிசிக்கலாம். இங்கு பள்ளியறை பூஜையின்போது ஒருநாள் வள்ளிதேவியுடனும், மறுநாள் தேவசேனா தேவியுடனும் பள்ளியறைக்கு எழுந்தருளும் முறைமை வேறு எந்த முருகன் தலத்திலும் இல்லாத சிறப்பாகும்.

இரண்டாம் பிரகாரத்தின் கிழக்குப் பக்கமிருந்து "பஞ்சாட்சரப் படிகள்" என அழைக்கப்படுகின்ற ஐந்து படிகள் முதற் பிரகாரத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின்றன. முதற் பிரகாரத்தைச் சுற்றி ஸ்தான மண்டபமும் அர்த்த மண்டபமும் அமைந்துள்ளன. இப்பிரகாரத்தின் தென்புறம் ((முருகன் கருவறையின் வலது புறம்) வள்ளியம்மையும், பிரகாரத்தின் வடபுறம் (முருகன் கருவறையின் இடது புறம்) தேவசேனையும் தனித்தனிச் சந்நிதிகளில் நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கின்றனர். மூலவரான ஸ்ரீ தணிகைநாதரது சந்நிதி சற்று பின்னேயும், வள்ளி - தெய்வானை தேவியரது சந்நிதிகள் சற்றே முன்புறமாகவும் ∴ போன்ற அமைப்பில் அமைந்திருப்பது தணிகைக் கோயிலின் தனிச் சிறப்பான அம்சம். பிரகாரத்தை வலம் வரும்போது இந்த "∴" அமைப்பினைத் தெளிவாக அவதானிக்கலாம். இப்பிரகாரத்தின் மேற்கே ஆருத்ரா தரிசன வேளையில் வெந்நீர் அபிஷேகம் கொண்டருளும் ஸ்ரீ பாலமுருகன் சந்நிதியும், வடக்குப் பக்கத்தில் சண்டிகேஸ்வரர், பைரவர் சந்நிதிகளும் உள்ளன.

கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீதணிகேசப் பெருமான் திவ்ய சுந்தர வடிவினராய், தன் வலக் கரத்தில் வேலாயுதம் தாங்கி, இடக்கரத்தைத் தொடை மீது வைத்து நின்ற திருக்கோலத்தில் சாந்த சொரூபியாக அருள் பாலிக்கிறார். தணிகை வேலவனின் தரிசனத்திற்காக வரும் அனைத்து அடியார்களுக்கும் (திருமால் தலங்களில் உள்ள நடைமுறை போன்று) முருகனின் திருப்பாத சின்னத்தை (சடாரி) பக்தர்களின் தலையில் வைத்து ஆசி வழங்குவது தனித்துவமானது.

தணிகைக்கு வரும் பக்தர்கள், மூலவர் உட்பட அனைத்து சந்நிதிகளையும் தரிசித்த பின்னரே இரண்டாம் பிரகார கிழக்குச் சுற்றில் அமர்ந்திருக்கும் (ஏற்கனவே கூறப்பட்டுள்ளது) ஆபத்சகாய விநாயகரைத் தரிசித்து விடைபெற்று வெளியே செல்கிறார்கள். நாமும் அவர்கள் வழியிலேயே பின் தொடருகிறோம்...

"சிந்தா மணியே திருமான் மருகா
வந்தார்க் குயர்வாழ் வுகொடுத் தருள்வாய்
நொந்தாழ் வினையேன் முகநோக்கி வரம்
தந்தாள் முருகா தணிகா சலனே"

-தணிகாசல அநுபூதி.

**கட்டுரையாளர் கவனத்திற்கு:-**

**2009ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 2013ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரையான காலப்பகுதியில் வெளிவந்த ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களுக்குரியவர்கள் தங்களது பெயர் முகவரிகளின் விபரங்களை அறியத்தருமாறு வேண்டுகின்றோம்.**

**-பேரவையினர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

04.07.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சமயவாழ்வு"

வழங்குபவர் :- விகடகவி மு. திருநாவுக்கரசு அவர்கள்

---

11.07.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

---

18.07.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

25.07.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி கௌரி சுரேசன் அவர்கள்

[ஆசிரியர்]

199ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/16/NEWS/2014

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org